★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 11 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 88 | Thursday 11, April, 2024 | 16பக்கங்கள் | 50/-




## ஒற்றுமை, மத நல்லிணக்கம் புனித ரமழானின் சிந்தனை

### ஜனாதிபதி ரணிலின் ரமழான் தின வாழ்த்து



இஸ்லாமிய நாட்காட்டியில் ஒன்பதாவது மாதமாகக் கருதப்படும் புனித ரமழான் மாதமானது, முஸ்லிம் சகோதரர்களுக்கு சிந்தனை மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கான மாதமாகக் கருதப்படுகிறது. இந்த ரமழான் மாதம், நல்வாழ்வு மற்றும் நல் வாழ்வின் கலங்கரை 06

## சமய பன்முகத்தன்மைக்கு ரமழான் ஓர் எடுத்துக்காட்டு

### பிரதமர் தினேஷ் பெருநாள் வாழ்த்து



பன்னெடுங்காலமாக இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் ரமழான் காலத்தில் சமயக் கிரியைகள் மற்றும் இறை தியானங்களில் ஈடுபட்டு, அடுத்த மனிதர்களுக்கு உதவி உபகாரங்களை செய்து நாட்டின் கலாசார மற்றும் சமய பன்முகத்தன் மைக்கு முன்மாதிரியான 06

## ரமழான் மனித சமூக விழுமியத்தின் அங்கீகாரம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் மாதம் பூராவும் நோன்பு நோற்று பின்னர் ரமழான் மாதத்தின் தலைப் பிறை கண்டதும் கொண்டாடும் ஈதுல் பித்ர் பெருநாள் இஸ்லாமிய மத நாட்காட்டியில் மிக முக்கியமான விழாவாகும். ரமழான் என்பது இஸ்லாத்தின் 06

## தியாகம், நற்செயல்களை தொடர்ந்தும் பேணுவோம்

### அமைச்சர் அலி சப்ரி பெருநாள் வாழ்த்து



"புனித ரமழான் மாதத்தில் நாம் கடைப்பிடித்த தியாகங்கள், நற்செயல்கள் அனைத்தையும் தொடர்ந்தும் பேணிவர இந்தப் புனிதமான ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் உறுதிபூண வேண்டும்" வெளிவிவகார அமைச்சர் எம்.யு.எம்.அலி சப்ரி 06

## தமிழ், சிங்கள புத்தாண்டு சுபவேளை பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கான சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சம்பிரதாய முறைப்படிநேற்று (10) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச சுபநேர கணிப்புக் 06



07 தமிழர் தரப்பு பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்ற முயற்சி

சி.வி.கே.சிவஞானம்

## வழமையான தூர இடங்களுக்கு மேலதிகமாக

# பண்டிகைக் காலத்துக்கென விசேட ரயில், பஸ் சேவைகள்

### எவ்விதமான குறைபாடுகளும் ஏற்படாதென அமைச்சர் பந்துல உறுதி

பண்டிகை காலத்துக்காக போக்குவரத்து அமைச்சினால் விசேட இணைந்த போக்குவரத்து வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார் .

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களம் ஆகியன இணைந்து இந்த முறையான போக்குவரத்து திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னிற்கின்றன. கடந்த வருடங்களில் 06



போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே திணைக்களம் என்பன கூட்டாக ஒருங்கிணைந்த சேவைகள் முன்னெடுப்பு

## 18ஆம் திகதிக்கு முன் 'அஸ்வெசும' கொடுப்பனவு வழங்க தீர்மானம்



### புதிதாக மேலும் 182,140 குடும்பங்கள் இணைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவு திட்டத்துக்கு மேலும் ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 140 குடும்பங்கள் புதிதாக தகைமை பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க 06



APRIL 15

## ஏப்ரல் 15 ஆம் திகதியை பொது விடுமுறையாக அரசு அறிவித்துள்ளது



### தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வு

## சம்பள நிர்ணய சபையின் 02ஆவது கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான சம்பள நிர்ணய சபையின் 02ஆவது கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்போது அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர் பக்கம் நின்று உரிய வகையில் தமது வாக்கை பயன்படுத்த வேண்டுமென, இ.தொ.கா.வின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

***விரிவான செய்தி 02ஆம் பக்கம்***

## AI Chat Gpt தொழில்நுட்பம் மூலம் 'கனவை நனவாக்கும் டுபாய்' விருது

### ஊடகவியலாளர் மெனிக்திவெலவுக்கு பணப்பரிசு




2023ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற 'எமினென்ஸ்' விருது விழாவில் காமினி பண்டார மெனிக்திவெல அந்த ஆண்டின் சிறந்த ஊடகவியலாளர் விருதை பெற்றுள்ளார்.

கல்வி வாய்ப்புக்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்ற போது, 'கனவை 06

## வாசகர்களுக்கான அறிவித்தல்

**தினகரன் நாளிதழ் எதிர்வரும் 13ஆம் 15ஆம் திகதிகளிலும், தினகரன் வாரமஞ்சரி எதிர்வரும் 14ஆம் திகதியும் வெளிவர மாட்டாது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். எதிர்வரும் 16ஆம் திகதி முதல் தினகரன் வழமைபோல் வெளிவரும். *(ஆர்)***




## மேமன் சங்கத்தின் ஏற்பாட்டில் காலி முகத்திடலில் பெருநாள் தொழுகை



## சூரியன் 15ஆம் திகதிவரை இலங்கைக்கு நேராக உச்சம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**இலங்கைக்கு நேராக எதிர்வரும் 15ஆம் திகதிவரை சூரியன் உச்சம் கொடுக்குமென வளிமண்டலவியல்** 06

## தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 779 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு



தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 779 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அரசியலமைப்பின் 34 (1) பிரிவுக்கமைவாக ஜனாதிபதியின் அதிகாரங்களை பயன்படுத்தி இந்த விசேட 06



# வவுனியா, கிறிஸ்தவ எழுப்புதல் மையம் திறப்பு விழா 12 ஆம் திகதி

## டொரன்டோ ரிவைவல் கொஸ்பல் ஆலய தலைமைப் போதகர் வண. பிதா கலாநிதி பிலிப் கிறிஸ் கனகரத்னம்







கனடாவிலுள்ள, டொரன்டோ ரிவைவல் கொஸ்பல் கிறிஸ்தவ தேவாலயத்தின் தலைமைப் போதகர் வணக்கத்திற்குரிய பிதா கலாநிதி பிலிப் கிறிஸ் கனகரத்னம் வடமாகாணத்தில், வவுனியா, ஈச்சங்குளம், பாடசாலை வீதி, எனும் முகவரியில் கிறிஸ்தவ எழுப்புதல் மையம் அமைத்துள்ளார். இந்த மையம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு மிக பிரமாண்டமாக திறந்து வைக்கப்படவுள்ளது.


100 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மையம் அமைக்கப்படவுள்ளது. வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கும், கல்வி, சுகாதாரம், ஆகிய துறைகளில் அவர்களை மேம்படுத்தவும் ஆன்மீகத்துறையில் அவர்களுடைய எதிர்கால வளப்படுத்திக் கொள்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்த மையத்தின் முக்கிய பணிகளாக இருக்கும். குறிப்பாக போதைவஸ்துக்கு அடிமையாகி தங்களுடைய வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களையும் யுவதிகளையும் நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தை சீராக்குவதும் இந்த மையத்தின் பிரதான பணியாகவும் இருக்கும். வவுனியா, பாடசாலை வீதி, ஈச்சங்குளம் எனும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள எழுப்புதல் மையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக கனடா, டொரன்டோ ரிவைவல் கொஸ்பல் கிறிஸ்தவ தேவாலயத்தின் தலைமைப் போதகர் வணக்கத்திற்குரிய பிதா கலாநிதி பிலிப் கிறிஸ் கனகரத்னமும் அவர்களுடைய குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இத்திறப்புவிழாவில் கிட்டத்தட்ட 300க்கும் அதிகமான கிறிஸ்தவ மதப் போதகர்களும் பக்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சமந்த டி விஜேசேகர மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

உத்தேச பொன்னாவெளி பிரதேச திட்டம்

# சிலரது அரசியல் நலன்களுக்காக ஆய்வுகளை நிறுத்திவிட முடியாது

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்



பொன்னாவெளி பிரதேசத்தில் சீமேந்து தொழிற்சாலையை அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் தொடர்பில் சில அரசியல் தரப்புக்களினால் உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களுக்கு நன்மை ஏற்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் உண்மைகளை அறிவதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சுயலாப அரசியலுக்கான கபடத்தனங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

பொன்னாவெளிப் பிரதேசத்தில் சீமேந்து தொழிற்சாலை அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் நேற்று மேற்கொள்வதற்குஅதிகாரிகள்முற்பட்ட வேளை, சில அரசியல் 06

# பொருளாதாரத்தை சிறந்த முறையில் ஜனாதிபதி முகாமைத்துவம் செய்துள்ளார்

## சாந்தினி கோன்கஹகே தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்த வருடம் புத்தாண்டை மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்துள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் ஹேவாஹெட்ட தொகுதி அமைப்பாளர் சாந்தினி கோன்கஹகே தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீ கொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புது வருட ஏற்பாடுகளில் மக்கள் மும்முரமாகி விட்டனர். வீதிகளில் மக்கள் பெருந்திரளாக காணப்படுகின்றனர். அதனைக் கண்டு மகிழ்ச்சியடைய முடிகிறது. 2022 மற்றும் 2023ஆம் வருடங்களோடு ஒப்பிடுகையில் மக்கள் இம்முறை சிறந்த வகையில் புத்தாண்டை கொண்டாட தயாராவது தெரிகிறது.

இந்த வருடம் புத்தாண்டை சிறப்பாக கொண்டாடும் வகையில் பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முடிந்துள்ளது.



தமிழ், சிங்கள புத்தாண்டை போன்றே ரமழான் பெருநாளும் காணப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் காசாவில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுவது தொடர்பில் ஜனாதிபதி சிந்தித்துள்ளார். அவர்களுக்கு நிதி திரட்டி அனுப்பவும் முடிந்துள்ளது.

ஜனாதிபதி கடந்த வாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள பிரச்சினைகள் என்ன என்பதை ஆராய்ந்துள்ளார். அங்கு இளைஞர்கள் விவசாயிகள் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி உள்ளார். அதே போன்று அரச துறைக்கு இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ள பட்டதாரிகள் அது தொடர்பில் அவருக்கு அறிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற நாட்டின் தலைவருக்கு பல்கலைக்கழக பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் உணர முடியும் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

அந்த வகையில் நேற்றைய தினமும் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் இளைஞர், யுதிகளுக்கு வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்" என்றார்.

# புனித மரியாள் பழைய மாணவர்களின் கிரிக்கெட் விழா!

எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலத்தின் பழைய மாணவர்களின் மாபெரும் கிரிக்கெட் விழாவும் ஒன்றுகூடலும் எதிர்வரும் 20, 21 மற்றும் 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் எட்டியாந்தோட்டை வின்சன்ட் பெரேரா மைதானத்தில் இந்த கிரிக்கெட் விழா நடைபெறவுள்ளது.




அணிக்கு 11 பேரை கொண்டதாக நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளில் ஒவ்வொரு வருடங்களை சேர்ந்த க.பொ.த சாதாரண தர வகுப்பு அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

35ற்கும் மேற்பட்ட அணிகள் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள நிலையில், 20 ஆம் திகதி காலை நடைபவணியை தொடர்ந்து முதற் சுற்று போட்டிகள் நடைபெற்று 22 ஆம் திகதி அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் கலந்துகொள்ள பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களுக்கும் பழைய மாணவர் சங்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# போதைவஸ்து விற்பனை செய்த 12 பேர் கைது

நீர்கொழும்பு தினகரன் நிருபர்

"யுக்திய" போதையொழிப்பு அதிரடி தேடுதல் நடவடிக்கையின் கீழ் வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது பாரியளவில் போதைவஸ்து பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்த இளம் ஜோடியொன்றை கைது செய்துள்ளனர்.

குறித்த ஜோடியினருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு மிகவும் சூட்சுமமான முறையில் போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்டு வந்த 12 நபர்களையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

# சம்பள உயர்வு விடயத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர் பக்கம் நிற்கவேண்டும்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான சம்பள நிர்ணயசபையின் 2ஆவது கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன் போது அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர் பக்கம் நின்று உரிய வகையில் தமது வாக்கை பயன்படுத்த வேண்டும்." என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது சம்பள விவகாரம் தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு,

' சம்பள நிர்ணயசபை இன்று கூடியது. 10 தொழிற்சங்கங்களில் 9 தொழிற்சங்க பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். தோட்ட சேவையாளர் சங்க பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை. பெருந்தோட்டக் கம்பனிகளும் வரவில்லை.

10 ஆம் திகதி சம்பள நிர்ணயசபைக் கூடும் என முதலாம் திகதியே அறிவித்திருந்தோம். எனினும், தம்மால் வரமுடியாது என கம்பனிகாரர்கள் (09) அறிவித்திருந்தனர்.



சம்பள உயர்வு தொடர்பில் கடந்த ஆகஸ்ட் மாதம் முதலே பேச்சு நடத்தி வருகின்றோம். எனவே, உரிய கால அவகாசம் இல்லை என்பது உட்பட கம்பனிகள் கூறிவரும் காரணங்கள் ஏற்புடையானவையாக அல்ல.

கூட்டு ஒப்பந்த விவகாரத்தில் எவ்வித சட்டசிக்கலும் இல்லை என சட்டமா அதிபரிடமே நாம் ஆலோசனை பெற்றுவிட்டோம். ஆனால் சட்ட சிக்கல் எனக்கூறி கூட்டு ஒப்பந்தத்துக்கு வருவதற்கு கம்பனிகள் மறுக்கின்றன.

அதேபோல நாம் அடிப்படை சம்பளத்தையே அதிகரிக்குமாறு வலியுறுத்துகின்றோம். ஆனால் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்காது கொடுப்பனவு என்ற அடிப்படையில் 33 சதவீத சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு கம்பனிகள் யோசனை முன்வைத்துள்ளன. 33 சதவீத சம்பள உயர்வு நல்லதுதானே, அதனை ஏற்கலாம் அல்லவா என சிலர் கேட்கின்றனர். இது ஏற்புடையது அல்ல. அதனால்தான் நாம் நிராகரித்தோம். இது விடயத்தில் எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை.

சம்பள நிர்ணய சபையை இரண்டு தடவைகள் கூட்ட வேண்டும். உரிய காரணங்கள் கூறாமல் கம்பனிகள் இன்று வராததால் இன்றைய கூட்டத்தையும் கருத்திற்கொள்ள வேண்டும் என தொழில் அமைச்சரிடம் கோரினேன்.

அந்த கோரிக்கையை அவர் ஏற்றுள்ளார். 2ஆவது கூட்டம் 24 ஆம் திகதி கூடும்.

இதன்போது சம்பள உயர்வு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படும். தொழிற்சங்கங்கள் காட்டிக் கொடுக்காமல் இருந்தால் தீர்வைப் பெறலாம். 24 ஆம் திகதி தோட்ட சேவையாளர் சங்கமும் பங்கேற்கும் என எதிர்பார்க்கின்றோம். பெருந் தோட்ட நிறுவனங்களுக்கு அஞ்சாமல், தொழிலாளர்கள் பக்கம் நிற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்." என்றார்.

அதேவேளை, 1,700 ரூபா என்ற எமது சம்பள உயர்வு கோரிக்கை அரசியல் நோக்கம் கொண்டது அல்ல. தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் ஓரளவேனும் சமாளிக்க வேண்டுமெனில் அந்த கொடுப்பனவு அவசியம்.

அதேபோல நாட் சம்பள முறைமை நிலையான தீர்வு அல்ல. எனவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு பொறிமுறை அவசியம்." எனவும் அமைச்சர் ஜீவன் வலியுறுத்தினார்.

## மலைச்சாரல்

# தோட்ட உத்தியோகத்தர்கள் மூவரை கடத்திச் சென்று தாக்கிய நால்வர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



உதவித் தோட்ட அதிகாரி உட்பட மேலும் இரண்டு தோட்ட உத்தியோகத்தர்களை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யட்டியாந்தோட்டை ஹல்கொல்லை தோட்ட உதவி முகாமையாளர், களநிலை அதிகாரி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

உத்தியோகத்தர்கள் மைதானமொன்றில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு ஆயுதங்களுடன் வந்த வன்முறைக்கும்பல் வேன் ஒன்றில் கடத்திச்சென்றதாகவும் தகவலறிந்த பொலிஸார் உரிய இடத்துக்குச் சென்று தோட்ட அதிகாரிகளை மீட்டு கரனவல்ல வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வட்டவளை தோட்டக்குடியிருப்பில் தீ விபத்து

கினிகத்தேனை தினகரன் நிருபர்

வட்டவளை மீனாட்சி தோட்ட முதலாம் தொடர் குடியிருப்பில் ஏற்படவிருந்த பாரிய அனர்த்தம் பொது மக்களின் முயற்சியினால் தடுக்கப்பட்டுள்ளது.

தொடர் குடியிருப்பில் வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் எரிவாயு கசிவு காரணமாக ஏற்படவிருந்த பாரிய அனர்த்தம் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தோட்ட குடியிருப்பில் வழமையாக தமது பணிகளை முன்னெடுத்திருந்த சந்தர்ப்பத்தில் வீடொன்றில் திடீரென தீ பற்ற ஆரம்பித்தமையால் சம்பவ இடத்திற்கு வந்த பொது மக்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தோட்ட குடியிருப்பில் 6 லயன்கள் காணப்பட்டதோடு அதில் ஒரு வீட்டில் இச் சம்பவம் பதிவாகியிருந்தது.





மஸ்கெலியா பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் நேற்று மஸ்கெலியா இஸ்லாமிய பள்ளிவாசலில் நோன்பு பெருநாள் தொழுகை நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து இஸ்லாமியர்களும் கலந்து கொண்டனர்.(படம் மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)





பறஹகதெனிய ஜாமிஉத் தவ்ஹீத் ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் தொழுகை அஸ்ஸலபிய்யா அரபுக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்திடலில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விசேட நோன்புப் பெருநாள் தொழுகை குத்பாப் பேருரையினை கலாநிதி அம்ஜத் ராசிக் நடத்தி வைத்தார். தொழுகையில் ஊரிலுள்ள பெருஎண்ணிக்கையிலான ஆண், பெண் இருசாராரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (படங்கள்: இக்பால் அலி)






பேருவளை சீனன்கோட்டை ரியாலுஸ் ஸாலிஹீன் ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில் அமைக்கப்பட்ட பெருநாள் திடலில் நேற்று ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகை நடைபெற்றது. இதனை மௌலவி அஷ்ஷெய்க் இசாக் (அப்பாஸி) நடாத்தினர். பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளில்

# கைத்தொழில் தொழில் முனைவோர் மாணவர்களுக்கு பதக்கங்கள்



கைத்தொழில் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் நடத்தப்பட்ட 'பாடசாலை கைத்தொழில் தொழில்முனைவோர் வட்டம்' எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை தொழில் முனைவோருக்கு பதக்கங்களை வழங்கும் நிகழ்வு அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் தாமரைத் தடாக அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தொழில்முனைவோர் பதக்கத்தை மாணவ மாணவியருக்கு அமைச்சர் ரமேஷ் பத்திரண வழங்கினார். அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.எஸ்.சமரகோன், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்முனைவோர் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ரேணுகா ஜயலத் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

8.4 மில். அமெ. டொலர் பெறுமதியான

# உயர் தொழில்நுட்ப ஸ்கேனிங் இயந்திரங்கள் ஜப்பான் அன்பளிப்பு



நாட்டுக்குள் வரும் சுற்றுலா பயணிகள் மூலம் பரவும் தொற்று நோய்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் நோய் நிலைமைகளை கண்காணிக்கும் பொருட்டு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்துக்கு 8.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உயர் தொழில்நுட்ப ஸ்கேனிங் இயந்திரங்களை வழங்க ஜப்பான் அரசாங்கம் முன்வந்துள்ளது. இதன் கீழ் முதல் தொகுதி உபகரணங்கள் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் நேற்று (10) இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிதேயாகியினால் கையளிக்கப்பட்டது.

# நெடுந்தீவு மக்களின் அடிப்படை தேவைகளுக்கு விரைவில் தீர்வு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



நெடுந்தீவு பிரதேச மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விசேட நிதியைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வெளிநாட்டு நிதியுதவியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டம் பூர்த்தியானதும் மின் கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். நெடுந்தீவு பிரதேசத்தில் நேற்று (10) நடைபெற்ற சமுர்த்தி அபிமானி வர்த்தக சந்தையை ஆரம்பிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு

# மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் நாளையும் இயங்கும்

## பொருட்கள் தாமதமின்றி விநியோகம்



புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு மத்திய தபால் பரிவர்த்தனைக்கு கிடைக்கும் அதிகளவான பொருட்களை தாமதமின்றி அனுப்பி வைக்கும் நோக்கில் நாளை (12) பொது விடுமுறை நாளிலும் கடமையில் ஈடுபட அனைத்து தபால் ஊழியர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கடந்த புத்தாண்டு காலத்திலும் எரிபொருள் வரிசையில் நின்ற மக்கள், இந்த வருடம் புடைவைக் கடைகளிலும் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்யவும் திரண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவதற்காக மேற்கொண்டு வரும் வெற்றிகரமான திட்டம் பலன் அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர்,

"மத்திய தபால் பரிவர்த்தனைக்கு இந்த புத்தாண்டுக் காலத்தில் அதிகளவான பொருட்கள் வந்தடைந்துள்ளன. வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அதிகளவில் பொருட்களை அனுப்பியுள்ளனர். புத்தாண்டுக் காலமென்பதால் அந்தப் பொருட்களை துரிதமாக விநியோகிக்க வேண்டிய சவால் ஏற்பட்டுள்ளது.

நெருக்கடிகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் நாளை பொது விடுமுறையாக இருந்தாலும் அன்றையதினம் சேவைக்கு சமுகமளிக்க தபால் மாஅதிபர் மற்றும் தபால் தொழிற் சங்கங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் அதற்கான ஒத்துழைப்பை வழங்கவுள்ளனர்.

புத்தாண்டுக் காலத்தில் உணவுப் பொருட்களின் விலை இரட்டிப்பாகி உள்ளதென பலரும் சாடினாலும், 2022/2023ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உண்மை புரியும். எனவே நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் பணப்புழக்கம் சாராமல் சீனாவிடமிருந்து பெறப்பட்ட 1.5 பில்லியன் டொலருடன் வெளிநாட்டுக் கையிருப்பு 4.9 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் 05 பில்லியன் டொலரைக் கடந்து விடுமென நம்புகிறோம்" என்றார்.




தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 29ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 31

### குறள் தரும் சிந்தனை

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்

இல்வாழ்க்கைக்கு தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால், ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.

# ஈகைத் திருநாள்

உலகெங்கும் வாழ்கின்ற முஸ்லிம்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றார்கள். 'ஈத்' என்னும் அரபுச் சொல்லுக்கு கொண்டாட்டம் அல்லது பெருநாள் என்பது பொருளாகும். ஈகைத் திருநாள் என்பது இஸ்லாமியர்களின் இருபெரும் திருநாட்களில் ஒன்றாகும்.

இஸ்லாமிய மக்கள் தங்களது புனித மாதமாகிய ரமழான் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, ஷவ்வால் மாதத்தின் முதல் பிறையில் இப்பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமாக விளங்கும் அல் குர்ஆன் ரமழான் மாதத்தில்தான் இறக்கியருளப்பட ஆரம்பமானது. அதனால் முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயக் கடமைகளில் ஒன்றாக ரமழான் நோன்பு விளங்குகிறது.

ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான நோன்பை நிறைவேற்றிய பின்னர் கொண்டாடும் ஒரு புனித நாள்தான் ஈதுல் பித்ர் ஈகைத் திருநாள். முகம்மது நபி அவர்கள் மதீனா நகர் வந்தபோது, மதீனாவாசிகள் இரு நாட்களை பெரும் திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். அதற்கான காரணங்களை அவர் அந்த மக்களிடம் கேட்டபோது, பண்டைய காலம் தொட்டு விளையாடுவதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் இவ்வாறு கொண்டாடி மகிழ்வது வழக்கம் என்று தெரிவித்தார்கள்.

அப்போது முகம்மது நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் அந்த திருவிழாக்களுக்குப் பதிலாக சிறந்த இரு திருநாட்களை வழங்கியுள்ளான். அவை குர்பானி வழங்கும் தியாகத் திருநாள் (ஹஜ் பெருநாள்), மற்றொன்று ஈந்து உவக்கும் ஈகைப் பெருநாள் என்று அறிவித்தார்கள். பசியின் கொடுமையை உணர வேண்டும் என்பதற்காகவும், அகந்தை, ஆணவத்தை ஒடுக்கி சிறந்த மனிதராக உயர வேண்டும் என்பதற்காகவுமே ஒருமாத காலம் பசியோடு நோன்பிருக்கின்றனர் இஸ்லாமியர்கள். இது ஒவ்வொரு இஸ்லாமியரின் தலையாய கடமை என்று திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மாதம் முழுவதும் உண்ணாமல் பருகாமல் பசித்திருந்து நோன்பு நோற்றவர்களுக்கு இறைவன் அளிக்கும் பரிசாக இந்த நோன்புப் பெருநாள் அமைந்துள்ளது. அது இறைவனைப் பெருமைப்படுத்தும் நாளாகவும் விளங்குகிறது. இஸ்லாமியர்கள் தங்களது நோன்பை ரமழான் மாதத்தின் கடைசி நாளுடன் முடித்துக்கொள்ள வேண்டும் என இறைவனால் வழங்கப்பட்ட திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது.

'ஈதல்' என்பது ஒருவகை இன்பமாகும். அந்த இன்பத்தை உணராதவர், தம்முடைய செல்வத்தை இழந்து நிற்கும் கொடிய நெஞ்சமுடையோராவர். பசி தாகத்துடன் நோன்பு வைத்து பின் பெருநாளுக்கு முன்னர் தான தர்மத்தைக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். அன்று எவரும் பசி பட்டினியுடன் இருக்கக்கூடாது. அன்று நோன்பு வைப்பதும் தடுக்கப்பட்டது எனவும் நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

மனிதநேயம் என்பதற்கு, ஈகைப்பண்பும் இரக்க சிந்தையுமே சிறந்த சான்றுகளாகும். ரமழான் மாதத்தில் நோற்ற நோன்புக்கு ஷவ்வால் முதல்நாள் அன்று விடுமுறை. அன்று நோன்பிருப்பது நபி வழியன்று. மனம் விரும்பிய உணவை இரசித்துச் சாப்பிட்டு, குடும்பத்தார், உற்றார், உறவினருடன் மகிழ்ந்திருத்தல் அன்றைய நிகழ்வாகும்.

ஈகையின் கடமை தாம் விரும்பி உண்ணும் உணவுப் பொருட்களையே பெருநாள் தர்மமாக கொடுக்க வேண்டுமேயன்றி நாம் பிரியப்படாததை, விரும்பாததை அளவுக்கதிகமாக கொடுத்தாலும் வேண்டிய நன்மை கிடைக்காது என்பதை திருக்குர்ஆன் கூறுகிறது.

ஃபித்ரா தர்மத்தை தனது பொறுப்பில் உட்பட்டவர்களான தாய், தந்தை, பாட்டன் பாட்டி, மகன், பேரன் மனைவி ஆகியோருக்கு கொடுக்கவும் முடியாது. இவர் சொந்த பொறுப்பிலிருப்பதால் அவர்களுக்காகவும் நாம் ஃபித்ரா தரவேண்டும். மற்ற உறவினர்களில் ஏழை எளியவர்கள் இருந்தால் அவர்களுக்கு முதலிடமளித்து ஃபித்ரா கொடுக்கவேண்டும். வெளியூர்களில் இருக்கும் ஏழை எளியவர்களுக்கு ஓரிரு நாட்கள் முன்பாகவே அனுப்புவதை இஸ்லாம் அனுமதிக்கிறது.

இவ்வாறு மகத்துவமும் சிறப்பும் மிக்க பெருநாளையே இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் தற்போது கொண்டாடுகின்றனர். அதிலும் இலங்கை முஸ்லிம்கள் கடந்த பல வருடங்களுக்குப் பின்னர் இம்முறைதான் இப்பெருநாளை அச்சம் பீதியின்றி கொண்டாடுகின்றனர். கடந்த காலங்களில் கொவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட சில காரணங்கள் இப்பெருநாளை சுதந்திரமாகக் கொண்டாட அவர்களுக்கு இடமளிக்கவில்லை.

தற்போது அவ்வாறான எவ்வித அச்சுறுத்தல்களும் சவால்களும் இன்றி சுதந்திரமாக கொண்டாடும் வாய்ப்பை முஸ்லிம்கள் பெற்றுக்கொண்டுள்ளனர். அதனால் இப்பெருநாளை உச்சளவில் கொண்டாடுவதில் அவர்கள் சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். இதே சூழல் தொடர்ந்தும் நீடித்து நிலைக்க வேண்டும் என்பதை எதிர்பார்த்தவர்களாகவும் அவர்கள் உள்ளனர். அதே எதிர்பார்ப்புதான் அனைத்து மக்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

ஆகவே தற்போது உருவாக்கப்பட்டுள்ள அச்சம் பீதியற்ற சுதந்திர ஜனநாயக சூழலைப் பேணிப் பாதுகாப்பது இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# ஈதுல் பித்ர் பெருநாள் எமது வாழ்வின் பொன்னாள்



அல்லாஹ்வின் பேரருளினால், கடந்த றமழான் மாதத்தின் முப்பது நாட்களும் நோன்பிருந்து, இரவு பகலாக இறை வணக்கத்திலும், அல்குர்ஆன் திலாவத்திலும், எம்மோடு ஒன்றித்து வாழும் ஏழை, எளியவர்களுக்கு ஸகாத், ஸதக்கா பகிர்ந்தளித்தும் மொத்தத்தில் எமது அனைத்து செயற்பாடுகளிலும் இறை நேசத்தையும் அவனின் பேரருளையும் சம்பாதித்துக் கொண்ட நாம், இன்று ஷவ்வால் மாதம் முதலாம் நாளில் ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகின்றோம். எமது தியாகத்துக்கும், இறைவனுக்கான அர்ப்பணிக்கும் வல்ல அல்லாஹ் எமக்களித்த மகிழ்ச்சி, குதூகலம் நிறைந்த பேரருளே இன்றைய பெருநாளாகும்.

நாம் நோற்ற இந்த றமழான் மாதத்தின் முப்பது நோன்புகளும் இறைவனைப் பொறுத்தவரை சாதாரணதொரு வணக்க வழிபாடல்ல. அது இஸ்லாம் எமக்கு விதியாக்கியுள்ள ஏனைய அமல்களை விட மகப் பெறுமதியானதும், அல்லாஹ் தனக்கே உரியதென சொந்தமானதாக உரிமை கொண்டாடும் ஒரு பெறுமதியான இபாதத்தாகும்.

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனாவிற்கு வந்ததன் பின் அங்குள்ள மக்கள் இரண்டு நாட்களாக விளையாட்டு வேடிக்கைகளில் ஈடுபட்டு, அந்நாட்களைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ணுற்ற பெருமானார் (ஸல்) அவர்கள் இந்நாட்களில் என்ன சிறப்புக்காக இவ்வாறு கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்' என வினவியபோது, 'அறியாமைக் காலத்தில் நாங்கள் அந்த இரண்டு நாட்களிலும் இவ்வாறு கொண்டாடி விளையாடக் கூடியவர்களாக இருந்தோம்' என்றார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அந்த இரு நாட்களை விட சிறந்த இரண்டு நாட்களை அல்லாஹ் உங்களுக்கு தந்துள்ளான். அவைதான் ஹஜ்ஜூப் பெருநாளும், நோன்புப் பொருநாளுமாகும் என்றார்கள்.

அல்குர்ஆனின் இரண்டாம் அத்தியாயமான சூறத்துல் பகறாவில் 185ஆவது வசனத்தில் 'றமழான் மாதத்தில் நோன்பு கடமையாகும்' என்று கூறிவிட்டு, அவ்வசனத்தின் இறுதியில் 'அல்லாஹ் உங்களை நேர்வழியில் செலுத்தியதற்காக அவனைப் பெருமைப்படுவதற்காகவும் நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்' எனக் குறிப்பிட்டுக் கூறுவதால்) இந்நாள் இறைவனை நினைவு கூர்ந்து புகழக் கூடிய இனிய நாள் என்பது வெளிப்படுகின்றது.

பெருநாட்களின் சிறப்புப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

'எவனொருவன் இந்த இரண்டு பெருநாட்களின் இரவுகளிலும் உள்ளச்சத்தோடு நின்று வணங்குவானோ அவனது கல்பு (உள்ளம்) ஏனைய உள்ளங்கள் இறந்து விடும்போது இறந்து விடாது' (அறிவிப்பவர்: அபீ உமாமா (ரழி)

மீண்டும் ஒருமுறை கூறினார்கள்:

'இந்த ஐந்து இரவுகளையும் எவர் ஹயாத்தாக்குகிறாரோ (உயிர்ப்பிக்கிறாரோ) அவருக்கு சுவர்க்கம் கிடைப்பது உறுதியாகிவிட்டது. அவைகள் 'அய்யாமுத் தஷ்ர்க்குடைய மூன்று நாட்களும், அறபாவுடைய நாளும், ஹஜ்ஜூப் பொருநாளுடைய தினமும், நோன்புப் பெருநாள் தினமும், ஷஃபான் மாதத்தின் அரைப் பகுதி இரவும்' என்று கூறினார்கள். (அறிவிப்பவர் : முஆத் இப்னு ஜபல் (ரழி)

நோன்புப் பொருநாள் சிறப்பு பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: 'நோன்புப் பெருநாள் வந்துவிட்டால், மலாயிக்காமார்கள் என்னும் அமரர்கள் பாதைகளிலுள்ள ஒவ்வொரு கதவுகளிலும் நின்றுகொண்டு பின்வருமாறு அழைப்பு விடுப்பார்கள். 'முஸ்லிம் சமூகமே! சங்கையான இறைவனின் பக்கம் விரையுங்கள். அவன் உங்களுக்கு பல்வேறு நன்மைகளை அருள் புரிவான். அவர்கள் மீது அளவிட முடியாத பிரதிபலன்களை அவன் கூலியாகத் தருவான்.

இரவில் நின்ற வணங்குமாறு நீங்கள் ஏவப்பட்டீர்கள். அவ்வாறே (இரவு முழுவதும்) நின்று வணங்கினீர்கள். இந்நாட்களில் பகல் பொழுதிலே நோன்பு நோற்குமாறு ஏவப்பட்டீர்கள். அவ்வாறே நீங்களும் (பகல் முழுவதும் நோன்பு நோற்றீர்கள். உங்கள் இரட்சகனை வழிபட்டீர்கள். உங்களக்குரிய நற்கூலிகளை பெற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் ஸலவாத்து சொல்லும் போது ஒரு அழைப்பாளன் பின்வருமாறு (மலக்கு) அழைப்பு விடுப்பார்' நிச்சயமாக உங்களின் றப்பு உங்களின் (பாவங்களை) மன்னித்து விட்டான். நீங்கள் நேர்வழி பெற்றவர்களாக திரும்புங்கள். இது கூலி தரப்படும் நாளாகும். விண்ணுலகத்தில் இந்த நாளுக்கு 'கூலிக்குரிய நாள்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. (தபராணி)

'பெருநாள் அன்று முதல் கடமையாகத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கேற்பு, பெருநாள் தொழுகையை சூரியன் உதயமான சிறிது நேரத்தில் தொழுவதுதான் சிறப்பான செயலாகும் என இப்னு உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

எம்மீது கடமையான ஐவேளைத் தொழுகையை கூட்டாக மஸ்ஜிதுகளுக்கு சென்று நிறைவேற்றச் சொன்ன நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகைகளை மைதானம் அல்லது திறந்தவெளிகளில் நிறைவேற்றுபவராக இருந்தார்கள். அவ்வாறு மைதானம், அல்லது திறந்த வெளிகளில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவது நபி வழி என்பது இமாம்களின் அபிப்பிராயமாகும். பெண்கள் பள்ளிவாசல் சென்று தொழுவதற்கு அனுமதி அளித்த பெருமானார் (ஸல்) அவர்கள், பெருநாள் தினங்களில் பெண்கள் திடலுக்கு அல்லது மைதானத்துக்கு வருவதை மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள். 'மேலங்கி (பர்தா) இல்லாத பெண்கள், தங்கள் தோழிகள் அல்லது சகோதரிகளிடம் இரவல் வாங்கியாவது பெருநாள் திடலுக்கு வரவேண்டும்' என்று கூறியதிலிருந்து இதை நாம் உணரலாம்.

ஹஜ் பெருநாள் தினத்தில் தொழுகை நிறைவேறிய பின்னரே உணவருந்தும் பழக்கமுடைய நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாளில் தொழுகைக்கு செல்லும் முன் உணவருந்திவிட்டு செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்ததால், இம்முறை எமக்கும் சுன்னத்தான வழிமுறையாகும்.

இந்த பெருநாள் தினத்தை ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி சகல, முஸ்லிம்களும் மிகவும் சந்தோஷமாக கொண்டாட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டே பல தான தர்மங்கள் எமக்கு கடமையாக்கப்பட்டுள்ளன. அல்லது சுன்னத்தாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான கடமைகளில் மிக முக்கியமான ஒன்று ஸதகத்துல் மித்ர் என்னும் கடமையாகும்.நாம் நோற்ற நோன்பு, எமது நற்கடமைகள், எமது தொழுகைகள், தான தர்மங்கள் அனைத்தையும் வல்ல அல்லாஹ் ஏற்றுக் கொள்ளவும், எமது பிழைகளை தவறுகளை மன்னித்து எமக்கு ஈடேற்றம் தர இந்த நந்நாளில் இருகரமேந்தி பிரார்த்திப்போம் ஆமீன். அனைவருக்கும் இனிய ஈதுல் பிதர் நல்வாழ்த்துக்கள்.



பேராசிரியர், மௌலவி
எம்.எஸ்.எம். ஜலால்தீன்
முன்னாள் பீடாதிபதி தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

# 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' அவுஸ்திரேலியாவில் நூல்வெளியீடு

கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாக மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் (Perth) மாநகரில் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.


தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' வெளியீட்டு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் மாநகரில் நடைபெறவுள்ளது.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துகளை சொல்வதில் வல்லவர். அவரின் நினைவாக இந்நூல் வெளியிடப்படுகின்றது.

Hillview Intercultural Community Centre, 1 Hill View Place, Bentley, Western Australia என்ற முகவரியில் 01.06.2024 மாலை 3.30 முதல் 5.30 வரை நிகழ்வு நடைபெறும்.

மூத்த தமிழ் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான டொக்டர் அமீர் அலி தலைமையில் இந்நூல் வெளியீடு நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் அபிமானத்தை ப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.

இந்நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து



சிறப்புரை வழங்குவார். அதன் பின்னர் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரையை நிகழ்த்துவார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றுவார். அத்துடன் டொக்டர் சி. பாஸ்கரநாதனும் இந்நூல் பற்றி சிறப்புரை ஆற்றுவார். சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இதன் பின் பேர்த் மாநகரில் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் புகழ் பெற்ற பாடகரும், இலக்கிய ஆர்வலருமான ராஜன் வடிவேல் வழங்கும் நன்றியுரையுடன் விழா நிறைவுபெறும்.

மூன்று பாகங்களாக வெளிவரும் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலில் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்த கலாசூரி சிவகுருநாதன் ஆற்றிய பெருங் கடமையை ஊடக, இலக்கிய அறிஞர்களின் திறனாய்வு கட்டுரைகள் அலங்கரிக்கின்றன.

இந்நூலின் முதல் அங்கமான 'ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குக் களம் தந்த தினகரன் சிவகுருநாதன்' எனும் பகுதியில் அவரைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகள், திறனாய்வு ஆக்கங்களை பல ஊடக ஆளுமையாளர்கள் எழுதியுள்ளனர்.

இரண்டாம் அங்கத்தில் 'பத்திரிகை ஆசிரியர்களுள் மக்கள் திலகம்' எனும் பகுதியாக அவரைப் பற்றிய அரசியல் வல்லுநர்களின் அஞ்சலிகளும், ஆராதனைகளும் இடம்பெற்றுள்ளது.

இந்நூலில் 'பூமாலைக்கு ஏன் பாமாலை' எனும் மூன்றாம் பகுதியில் சிவகுருநாதன் சிந்தனைகளை பல கவிஞர்கள் வடித்துள்ளனர். தினகரனில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில்



கலாசூரி சிவகுருநாதன் பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் முன்னின்றதற்கு சாட்சியமாக இக்கவிதைகள் உள்ளன.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# வவுனியா, கம்பஹா மாவட்ட தமிழ் மாணவருக்கு நிதியுதவி

## அவுஸ்திரேலியா– இலங்கை மாணவர் கல்வி நிதியம் வழங்கியது

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையுடன் புலமைப்பரிசில் உதவியை பெற்றுவரும் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு இவ்வாண்டும் வழங்கப்பட்டது.

கடந்த வாரங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாகவும், அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு அங்கிருக்கும் மாணவர் கல்வி நிறுவகத்தின் ஊடாகவும், மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் மலைய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாகவும் இவ்வாண்டின் முற்பகுதிக்கான நிதியுதவிகள் இந்தப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அண்மையில் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிகழ்வு, இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் வவுனியா தொடர்பாளர் அமைப்பான நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (Voluntary Organization for Vulnerable Community Development_VOVCOD) தலைவர் த. கணேஷ் தலைமையில், நிருவாக உத்தியோகத்தர் தர்சிகா ஏற்பாட்டில் வவுனியாவில் நடைபெற்றது. கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான நிதி வழங்கும் நிகழ்வு, கல்லூரி அதிபர் நா.புவனேஸ்வரராஜா தலைமையில் மாணவர் தொடர்பாளர் ஆசிரியை செல்வி லோஜினி ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாணவர்களின் தாய்மாரும் கலந்து கொண்டனர். அவுஸ்திரேலியாவில் 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இலங்கை மாணவர் கல்வி நிதியம், ஆரம்ப காலங்களில், இலங்கையில் நீடித்த போரினால் தந்தையை, குடும்பத்தின் மூல உழைப்பாளிளை இழந்த ஏழைத்தமிழ் மணவர்களுக்கு உதவியது.

போர் முடிவுக்கு வந்தபின்னர், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் இந்த புலமைப்பரிசில் திட்டத்தில் இணைத்துக் கொண்டு உதவி வருகிறது.

அண்மையிலும், நேற்றுமுன்தினமும் வவுனியா, கம்பஹா மாவட்ட நிகழ்ச்சிகளில் உதவி பெற்ற மாணவர்களும், அவர்களின் தாய்மாரும் கல்வி நிதியத்திற்கும், இந்நிதியம் ஊடாக உதவி வரும் அவுஸ்திரேலியா வாழ் அன்பர்களுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.







லெ. முருகபூபதி
அவுஸ்திரேலியா

# யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 776 பேர் புற்றுநோயால் பாதிப்பு

## 71பேர் உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 776 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 71 பேர் உயிரிழந்துள்ளதாக வைத்திய கலாநிதி யமுனானந்தா தெரிவித்தார். யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருபவர்களில் மார்பகப் புற்றுநோய், கருப்பை புற்றுநோய், சூலகப் புற்றுநோய், வாய் புற்றுநோய், சுவாசம் தொண்டை பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய் , உடல் உள் உறுப்புக்களில் ஏற்படும் புற்றுநோய் என பல வகையான புற்றுநோய்கள் இனம் காணப்படுகின்றன. புற்றுநோயை பொறுத்தவரையில் ஆரம்பத்தில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகளை ஒழுங்காக மேற்கொள்ளும் போது நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தமது மார்பகங்களை சுய பரிசோதனை செய்வதோடு ஏதேனும் கட்டிகள் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியரை நாட வேண்டும். 40 – 60 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு மார்பகங்களில் ஏற்படும் புற்றுநோயை மார்பகங்களில் ஏற்படும் அசாதாரண நிலையை கண்டறியும் மனோகிராம் சிகிச்சை மூலம் கண்டறியலாம். இச்சிகிச்சை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகிறது. பெண்கள் மாதவிடாய் ஒழுங்கீனம் தொடர்பில் பெண்கள் அவதானமாக இருப்பதோடு கருப்பைக் கட்டி, சூலகப் புற்றுநோய் தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும். ஆண்களைப் பொறுத்தவரையில் புகைத்தல், வெற்றிலை உண்ணுதல் மற்றும் மதுபானம் அருந்துவதால் வாய் மற்றும் ஈரல் புற்றுநோய் ஏற்படுகிறது. யாழ்.மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் குடல் புற்றுநோய் காரணமாக 88 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 07 பேர் உயிரிழந்துள்ளனர். இரைப்பை புற்றுநோயால் 40 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். ஈரல் புற்றுநோயால் 40 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 08 பேர் உயிரிழந்துள்ளனர். சுவாச புற்றுநோயினால் 67 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 08 பேர் உயிரிழந்துள்ளனர். மார்பகபுற்று நோயினால் 83 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 04 பேர் உயிரிழந்துள்ளனர். கருப்பைப் புற்றுநோயினால் 27 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 03 பேர் உயிரிழந்துள்ளனர். கருப்பை கழுத்து புற்றுநோயினால் 48 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 03 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஆண்களில் சிறுநீர்ப்பை புற்றுநோயினால் 10 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குருதிப்பட்டி நோயினால் 37 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

# சுவிஸ் நாட்டவர் குளியலறையில் சடலமாக மீட்பு

(யாழ்.விசேட நிருபர்)

சுவிஸ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள தனது சொந்த வீட்டுக்கு வந்தவர் குளியலறையில் உயிரிழந்துள்ளார்.

நவாலி தெற்கை சேர்ந்த உதயகுமார் எனும் 55 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுவிஸ் நாட்டில் வசித்து வரும் இந்நபர் யாழ்ப்பாணத்திலுள்ள தனது தாயாரை பார்ப்பதற்காக கடந்த திங்கட்கிழமை இலங்கை திரும்பியுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள தனது வீட்டிற்கு வந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# வடக்கின் உதயம்

## இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)




புனித ரமழானை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை 150 முஸ்லிம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதன்போது யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் தூதரக அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் நோன்பு பெருநாள் விசேட தொழுகை

(மன்னார் குறூப் நிருபர்)





புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் மன்னார் மாவட்டம் சயீட் சிட்டி பொது மைதானத்தில் நேற்று (10) காலை 7 மணிக்கு நடைபெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரே நேரத்தில் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் நடைபெற்றது.

மன்னார் சயீட் சிட்டி பிரதம இமாம் எச்.என்.எம்.எம்.எஹியாகான் நோன்புப் பெருநாள் தொழுகை நடத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் நடைபெற்றன.



சர்வதேச கண்ணிவெடிகள் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு (MAG) தேசிய கண்ணிவெடிகள் மையம் (NMAC) இலங்கை இராணுவ கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவு HALO, DASH மற்றும் SHARP M ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து அண்மையில் ஏற்பாடு செய்த மாபெரும் கிரிக்கெட் போட்டி கிளிநொச்சி பொது மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ல்ஸ் மற்றும் சிரேஷ்ட அரசாங்க பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் கண்ணிவெடி நடவடிக்கை அமைப்புக்களின் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## வவுனியா நெளுக்குளம்

# குளத்திலிருந்து சடலம் மீட்பு; அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, நெளுக்குளம் குளத்திலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதுடன், சடலத்தை அடையாளம் காண உதவுமாறு நெளுக்குளம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். வவுனியா, நெளுக்குளம் குளக்கட்டு பாதை ஊடாக சென்ற நபரொருவர் குளத்தினுள் சடலமொன்று மிதப்பதை அவதானித்துள்ளார். இதனையடுத்து அவர் நெளுக்குளம் பொலிஸார் மற்றும் பொதுஅமைப்புக்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். குளக்கட்டின் மேற்பகுதியில் காலணியொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

எனவே தவறுதலாக இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

# பாடசாலை மாணவர்களுக்கு காசநோய் பாதிப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ். நகரை அண்மித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலருக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலையில் கற்கும் மாணவன் ஒருவனுக்கு திடீரென உடல்நல குறைப்பாடுகள் ஏற்பட்டுள்ளது. மாணவனை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்திய போது, மாணவனுக்கு காசநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து மாணவனுடன் நெருங்கிப் பழகிய மாணவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது, அவர்களுக்கும் காசநோய் கண்டறியப்பட்டுள்ளது.

# தருமபுரம் ஆதினத்தை மிரட்டியவருக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு!



மயிலாடுதுறை தருமபுரம் ஆதினத்திற்கு மிரட்டல் விடுத்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைதான பா.ஜ.க நிர்வாகி அகோரத்தின் பிணை மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிகவும் பழைமையான மயிலாடுதுறை தருமபுரம் ஆதினத்தின் 27 ஆவது தலைமை மடாதிபதியாக இருப்பவர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார். இவரின் உதவியாளர் விருதகிரி என்பவர் மயிலாடுதுறை பொலிஸ் கண்காணிப்பாளருக்கு புகார் மனு ஒன்றை கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி அளித்துள்ளார்.

அதில், தலைமை மடாதிபதி தொடர்புடைய ஆபாச வீடியோ மற்றும் ஒடியோ இருப்பதாகக் கூறி வினோத், செந்தில், விக்னேஷ் ஆகியோர் மிரட்டியதாகவும், அதற்கு செம்பனார்கோவிலை சேர்ந்த தனியார் கல்வி நிறுவனங்களின் தாளாளர் குடியரசு, மயிலாடுதுறை மாவட்ட பா.ஜ க தலைவர் அகோரம் உள்ளிட்டோர் உடைந்தையாக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட அகோரம் பிணை கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நீதிபதி T. V. தமிழ்ச்செல்வி முன்பு விசாரணைக்கு வந்தபோது, அகோரத்திற்கு எதிராக 47 வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 5 பேர் தற்போது வரை தலைமறைவாக இருப்பதாகவும், அவருக்கு பிணை வழங்கக் கூடாது என பொலிஸ் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பிணை மறுக்கப்பட்டது.

# அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவை நிராகரித்து உயர்நீதிமன்றம்

## மதுபான கொள்கை முறைகேடு குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் உள்ளதாக நீதிபதி கருத்து!

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அமுலாக்கத்துறையால் அதிரடியாக கைது செய்யப்பட்ட நிலையில், கைது நடவடிக்கையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை அவர் அணுகியுள்ளார். சில நாட்களுக்கு முன்னர் ஜார்க்கண்ட் முதலமைச்சரும், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவராக இருந்த ஹேமந்த் சோரன் அமுலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இக்கட்சி இந்தியா கூட்டணியில் இருக்கிறது.



அதேபோல கடந்த 21 ஆம் திகதியன்று டெல்லி முதலமைச்சரும், இந்தியா கூட்டணியின் முக்கிய தலைவருமான அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார். கெஜ்ரிவாலின் கைது, ஆம் ஆத்மி மீதான பழிவாங்கும் நடவடிக்கை என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்திருந்தன. இந்த விவகாரத்தில் சர்வதேச நாடுகளும் தனது கருத்தை தெரிவித்திருந்தன. இந்நிலையில், அரவிந்த் கெஜ்ரிவால் தனது கைது நடவடிக்கையை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி ஸ்வரனா காந்தா சர்மாவின் ஒருநபர் அமர்வுக்கு முன்னர் விசாரிக்கப்பட்டு வந்தது. விசாரணையில் தீர்ப்பை ஒத்திவைப்பதாக நீதிபதி கூறியிருந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வாசிக்கப்பட்டது. அதில், "கெஜ்ரிவாலின் கைதுக்கான வலுவான ஆதாரங்களை அமுலாக்கத்துறை சமர்ப்பித்துள்ளது. கைது நடவடிக்கையில் எந்த சட்டவிதிகளையும் அது மீறவில்லை. அதேபோல, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் கைது செய்தது சரிதான். மதுபான கொள்கையை உருவாக்கியதில் கெஜ்ரிவாலுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. இந்த வழக்கு பிணை பற்றியதல்ல, இது ஒட்டுமொத்த கைது நடவடிக்கையையே செல்லாது என்று அறிவிக்க கோரும் வழக்கு. முதல்வராக இருப்பதால் எந்த சலுகையும் வழங்கப்படாது" என்று கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து நீதிபதி கெஜ்ரிவாலின் மனுவை தள்ளுபடி செய்தார். இது ஆம் ஆத்மி கட்சியினரிடையே பெரும் சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து கெஜ்ரிவால் தரப்பினர் மேன்முறையீடு செய்யவுள்ளனர்.

# பாரதம்

## சமகால நடப்புகள்

# நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர்கொள்கின்றார் பாபா ராம்தேவ்!

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் கடும் எச்சரிக்கை!



பதஞ்சலி நிறுவனத்தின் தயாரிப்புகள் குறித்து அறிவியலுக்குப் புறம்பாக விளம்பரம் செய்த விவகாரத்தில், பாபா ராம்தேவின் மன்னிப்பை ஏற்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது. அதுமட்டுமல்லாது 'நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர்கொள்ள தயாராக இருங்கள்' என பாபா ராம்தேவுக்கு நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

இந்தியாவின் பிரபல யோக குருவான பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் பற்பசை, சவர்க்காரங்கள், தேன், ஷாம்பு போன்றவற்றை விற்பனை செய்து வருகிறது. ஆனால், இந்த பொருட்களுக்கான விளம்பரங்கள் சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றன.

அதாவது, பதஞ்சலி நிறுவனம் தீராத நோய்களையும் குணப்படுத்துவதாக தெரிவித்தும், அலோபதி மருத்துவ முறைக்கு எதிரான கருத்துக்களை கொண்ட விளம்பரங்களை செய்வதாகவும் எதிர்ப்புகளை தெரிவித்து இந்திய மருத்துவ சங்கம் உச்சநீதிமன்றத்தை நாடியிருந்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், பதஞ்சலி நிறுவனத்தை கடுமையாக எச்சரித்து கண்டனம் தெரிவித்திருந்தது. எந்தவொரு தவறான விளம்பரங்களையும் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்திய உச்சநீதிமன்றம், மீறினால் கடுமையான அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரித்தது.

அதேபோல இதுபோன்ற தவறான விளம்பரங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான திட்டத்தை தயாரிக்க வேண்டும் எனவும் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருந்தது.

இருப்பினும் கடந்த 4 மாதங்களாக பதஞ்சலி இதுபோன்ற விளம்பரங்களை நிறுத்தவில்லை. இந்நிலையில் இது தொடர்பான வழக்கு கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி நீதிபதிகள் அஹ்சானுதீன் அமானுல்லா, பிரசாந்த் குமார் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது பதஞ்சலியின் தயாரிப்புகளை விளம்பரப்படுத்துவதற்கு தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதுமட்டுமல்லாது, பதஞ்சலி நிறுவனம் மற்றும் அதன் நிர்வாக இயக்குநரான பால கிருஷ்ணன் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸையும் உச்சநீதிமன்றம் வழங்கியது.

இந்நிலையில், நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது பதஞ்சலி சார்பில் ஆஜராகியிருந்த துருவ் மேத்தா, நிபந்தனையற்ற மன்னிப்புக் கோருவதாக தெரிவித்திருந்தார். ஆனால், நீதிபதிகள் இதனை ஏற்கவில்லை.

“நீங்கள் மன்னிப்பு கேட்கும் பொழுது மிக அலட்சியமாக நடந்து கொள்கிறீர்கள். அதே அலட்சியத்தை நாங்கள் ஏன் உங்களுக்கு காட்டக்கூடாது? உங்களது மன்னிப்பை நாங்கள் நம்பவில்லை. அதனை நிராகரிக்கிறோம்” என்று நீதிபதிகள் காட்டமாக கூறியிருந்தனர்.

அதுமட்டுமல்லாது "நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர்கொள்ள தயாராக இருங்கள்" என பாபா ராம்தேவுக்கு நீதிபதிகள் எச்சரித்துள்ளனர்.

# காலைத் தொட்டு வணங்கிய பெண்ணுக்கு பிரதமர் நரேந்திர மோடி செய்த செயல்!



வேலூரில் நேற்று நடந்த பா.ஜ.க பிரசார பொதுக்கூட்டத்தின் போது மேடையில் திடீரென்று பெண் நிர்வாகி பிரதமர் மோடியின் காலைத் தொட்டு வணங்கினார். இதையடுத்து பதிலுக்கு பிரதமர் மோடி செய்த செயலால் மேடையே அதிர்ந்து போனது. கடந்த 2019 லோக்சபா தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க வேட்பாளர்கள் ஒருவர் கூட வெற்றி பெறவில்லை. இந்நிலையில் எதிர்வரும் லோக்சபா தேர்தலில் தமிழகத்தில் அதிக இடங்களை கைப்பற்றும் முனைப்பில் பா.ஜ.க தனியே கூட்டணி அமைத்துள்ளது. பா.ஜ.க மற்றும் பா.ஜ.க கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், பா.ஜ.க தேசிய தலைவர் ஜே.பி நட்டா உள்ளிட்டவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் 2 நாள் சுற்றுப்பயணமாக பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் சென்னை வந்தார். சென்னையில் உள்ள 3 தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவுக்கு வாகன பேரணி சென்றார். அதன் பிறகு நேற்று பிரதமர் மோடி வேலூர் பா.ஜ.க பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார். இந்த பொதுக்கூட்டத்துக்காக சென்னையில் இருந்து ஹெலி கொப்டரில் பிரதமர் மோ டி வேலூர் சென்றார். தமிழ் பாரம்பரிய உடையான வேஷ்டி சட்டையில் பிரதமர் மோடி வேலூரில் இறங்கினார். வேலூர் கோட்டை மைதானத்தின் மேடையில் இருந்த நிர்வாகிகளை பிரதமர் மோடி வணங்கியபடி நடந்து சென்றார். அப்போது பெண் நிர்வாகி ஒருவர் திடீரென்று கீழே குனிந்து பிரதமர் மோடியின் காலைத் தொட்டு வணங்கினார். இதனை சற்றும் எதிர்பாராத பிரதமர் மோடி உடனடியாக அந்த பெண் நிர்வாகிகளை நோக்கி கைககளை கும்பிட்டபடி தலைகுனிந்து 2 முறை வணங்கினார்.

பிரதமர் மோடியின் இந்த செயலால் நிர்வாகிகள் வியந்துபோயினர். மேலும் பெண் நிர்வாகியை நோக்கி பதிலுக்கு பிரதமர் மோடி தலைகுனிந்து வணங்கிய போது அங்கிருந்த நிர்வாகிகள் "மோடி.. மோடி.." என கோஷமிட்டு மேடையை அதிர வைத்தனர்.

# இலங்கையின் இறைமை, பாதுகாப்புக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவு

## அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் உறுதி

இலங்கையின் இறைமை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு கிடைக்குமென ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் (Jake Sullivan) உறுதியளித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்று (10) நடந்த தொலைபேசிக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன். விரைவான பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டினார்.




அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பொது நிதி, பணம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் அர்ப்பணிப்பாக பணியாற்றுவதாகவும் சலிவன் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு, இந்து பசுபிக் வலயத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கான இருநாடுகளினதும் அர்ப்பணிப்பையும் வலியுறுத்துகிறது.

## பண்டிகைக் காலத்துக்கென...

பல்வேறு காரணங்களால் தமிழ், சிங்கள புத்தாண்டை மக்கள் கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டதால் இம்முறை 2024ஆம் ஆண்டு புத்தாண்டை சிறப்பாக கொண்டாடும் வகையில் தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது .

பண்டிகைக் காலங்களில் கிராமங்களுக்குச் செல்லும் மக்களுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்குவது, போக்குவரத்து அமைச்சின் பொறுப்பாகும் எனவும், மக்களுக்கு வசதியாக போக்குவரத்து வசதிகளை வழங்கும் நோக்கில் இந்த இணைந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். மற்ற ஆண்டுகளை விட போக்குவரத்தை அதிகரித்து மக்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்கும் நோக்கில் இணைந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் கிராமங்களுக்குச் செல்லும் மக்களின் வசதிக்காக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை ரயில்வே திணைக்களம் என்பன இணைந்து விசேட போக்குவரத்து வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதுடன், விசேட தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்திலுள்ள சிரமங்கள் குறித்து பயணிகள் புகார் தெரிவிக்க இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் அமுல்படுத்தப்பட்ட விசேட போக்குவரத்து திட்டத்தின் பிரகாரம் ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரையிலும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரையிலும் அதிகரித்த பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதிவேக நெடுஞ்சாலைகளில் இயங்கும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அதிவேக நெடுஞ்சாலையின் மேலதிக சேவைகளின் எண்ணிக்கையை நாளாந்தம் 150ஆக அதிகரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பஸ் வண்டிகளுக்காக விசேட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பயணிகளுக்காக 1990 ஆம்புலன்ஸ் சேவை, குடிநீர் வசதி, காத்திருப்புப் பகுதிகள் போன்றனவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் ரயில் சேவைகளுக்கு இணையாக மாகாண வீதி பயணிகள் போக்குவரத்தை அதிகரித்து அவர்களின் பயணங்களை ஏற்பாடு செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர 05 நடமாடும் பரிசோதனை குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் , போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து பயணிகள் புகார் தெரிவிக்கும் வசதியும். உள்ளது.

அதன்படி 24 மணி நேரமும் இயங்கும் 1955 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் 0712595555 என்ற இலக்கத்துக்கு வாட்ஸ்அப் ஊடாகவும் பயணிகளின் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

பிரதான பாதைகளில் தினமும் நடத்தப்படும் நீண்டதூர சேவைகளுக்கு மேலதிகமாக, கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கு ஒரு கடுகதி ரயிலும், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்கு ஒரு கடுகதி ரயிலும் நேற்று 10ஆம் திகதி முதல் ஏப்ரல் 15வரை இயக்கப்படுமென மேலதிக பொது முகாமையாளர் வி.எஸ். பொல்வத்தகே தெரிவித்தார்.

ரயில் பயணிகளுக்கு தகவல் மற்றும் முறைப்பாடுகளை வழங்குவதற்காக 1971 என்ற Hot Line இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை போக்குவரத்து அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், ஒருங்கிணைந்த சிறப்பு போக்குவரத்து திட்டத்தின்படி, ஒருங்கிணைந்த முறையில் போக்குவரத்து சேவைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தினசரி நீண்டதூர ரயில் சேவைகள் குறிப்பிட்ட இலக்குகளை நெருங்கும் போது பயணிகளுக்கு அங்கிருந்து செல்லும் நோக்கில் போக்குவரத்து வசதிகள் செய்யப்படுமென்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு, திருகோணமலைக்கு செல்லும் பயணிகளுக்கு நீண்டதூர சேவைகள் வழங்கப்படும்., யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளுக்கு சில சிரமங்கள் ஏற்பட்டாலும் அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தினசரி இரண்டு ரணில் சேவைகள்செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் பயணிகளுக்கு அனுராதபுரம் ரயில் நிலையத்துக்கு போக்குவரத்து வசதிகள் மஹவ அல்லது ரயில் மூலம் இ.போ.ச மற்றும் மாகாண போக்குவரத்து சேவையுடன் இணைந்து இந்த வசதியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

## தியாகம், நற்செயல்களை...

தெரிவித்துள்ளார். "ஒற்றுமை, அமைதி, தியாகம் பரஸ்பரத்தன்மை, பாரம்பரியங்களை கடைப்பிடித்தல் போன்றவைகளின் அடிப்படையில் பசித்திருந்து, விழித்திருந்து செய்த நல் அமல்கள் ஆன்மிகத்தை மேலும் வலுவடையச் செய்து, பூரணமான மனிதநேயம், இரக்கத்தன்மை, விட்டுக்கொடுப்பு போன்றவற்றை எமக்கு கற்பித்துள்ளன" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியர்களின் ரமழான் பண்டிகையையிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"உள்நாட்டிலும் உலகளவிலும் நாம் எதிர்கொள்ளும் சவால்களை சிந்திப்பதுடன், இப்பெருநாள் தினத்தின் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் தேவையுடையோருக்கு உதவிக்கரம் நீட்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கையானது பல்வேறு கலாசாரங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பன்முகத்தன்மையில் காணப்படும் வலிமைக்கு சான்று பகரும் அதேவேளை, நம் முன்னேற்றங்களின் போது அமைதியான வளமான மற்றும் இணக்கமான நாட்டை கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சிகளுக்கும் இப்பெருநாள் தினம் வழிகோலாக அமையட்டும். உலகெங்கிலுமுள்ள எமது உறவுகளிடம் நட்புடனும் நல்லெண்ணத்துடனும் இதனை தெரிவிக்கிறேன்.

ஒற்றுமையுடன் நாட்டின் வெற்றிக்காக பாடுபடும் நமது ஒவ்வொரு நிமிடங்களும் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் பிரார்த்தனைகளாக அமைவதுடன், காசா மக்களையும் நமது பிரார்த்தனையில் உள்வாங்கி, அவர்கள் படுகின்ற சிரமங்களுக்கு நியாயமான மற்றும் அமைதியான தீர்வை பெற்றுக்கொள்ளவும் பிரார்த்திப்போம்.

நம்பிக்கையுடனும் உளத்தூய்மையுடனும் நாட்டின் எதிர்காலம் சிறக்க பிரார்த்திப்பதுடன், ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியின்பால் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடவும் எனது வாழ்த்துகள்" எனத் தெரிவித்துள்ளார்.

## ஒற்றுமை, மத நல்லிணக்கம்...

விளக்கமாக இருப்பதுடன், நம்மிடையே ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வளர்ப்பதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இஸ்லாமியர்களின் ரமழான் பண்டிகையையிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இன, மத பேதமின்றி இலங்கையர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் எதிர்கொண்ட இக்கட்டான காலகட்டத்தை கடந்து நாட்டில் நல்லதொரு சூழல் உருவாகியுள்ள இவ்வேளையில் எமது சக முஸ்லிம்களுக்கு ரமழான் பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வாய்ப்பு இந்த வருடம் கிடைத்துள்ளதையிட்டு நான் ஆனந்தமடைகின்றேன்.

இந்நாட்டில் ரமழான் நோன்பு காலத்தை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, அனைவரும் தமது மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ளும் காலமாக கருதுவதே சரியானதென நான் நினைக்கிறேன்.

தனிமனித முன்னேற்றத்தை பொருட்படுத்தாமல், கூட்டுச் சமூக விழுமியங்களை உயர்த்துவதற்காக உருவாக்கப்படும் இவ்வாறான விடயங்கள், வீழ்ச்சியடைந்த இலங்கை பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதற்குமான கூட்டு முயற்சிக்கான அடிப்படையை வழங்குமென்றும் நான் நம்புகிறேன்.

அர்ப்பணிப்பு, சுயக்கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை உள்ளிட்ட ரமழானில் முன்னிலைப்படுத்தப்படும் விழுமியங்கள், அதை நோக்கிய பயணத்தில் சரியான வழிகாட்டியாக அமையுமென்ற எதிர்பார்ப்புடன், இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும், முழு உலக முஸ்லிம் சமூகத்துக்கும் சமாதானம், நல்லிணக்கம் நிறைந்த இனிய ரமழான் பெருநாளாக அமைய இதயபூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## AI Chat Gpt தொழில்நுட்பம் மூலம்...

நனவாக்கும் டுபாய்' நிகழ்ச்சியில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் UUDS இன்ஸ்டிட்யூட் தலைவர் மனோஜ் போகொடாவுடன் நடத்திய கலந்துரையாடலில் AI Chat Gpt தொழில்நுட்பம் மூலம் அதை தயாரிக்க ஒப்புக்கொண்டார்.

இதற்கமைய தேசிய தொலைக்காட்சியில் கடந்த 2023.04.06 இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதுடன், இந் நிகழ்ச்சிக்காக சமூக ஊடகங்களில் தேசிய தொலைக்காட்சி பாராட்டு பெற்றது.

இது தொடர்பாக கவனம் செலுத்திய போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, பணப்பரிசை நிகழ்ச்சி தயாரிப்பாளரான காமினி பண்டார மெனிக்திவெலவுக்கு வழங்க ஏற்பாடு செய்தார். இந்நிலையில் நேற்று வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, காமினி பண்டார மெனிக்திவெலவுக்கு பணப்பரிசை பெற்றுக்கொடுத்தார்.

நிகழ்வில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க, செய்திப் பணிப்பாளர் இந்திக மாரசிங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். தொலைக்காட்சி ஊடகங்களில் AI தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை ஆரம்பித்தல், அது தொடர்பாக வாசகர்கள் கவனத்தை ஈர்ப்பதற்காக கல்வித்துறையில் AI தொழில்நுட்பம் குறித்து ஈடுபாட்டை ஏற்படுத்தும் நோக்கில் அமைச்சரால் இந்த அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதேவேளை தற்போதைய செய்திப் பணிப்பாளர் இந்திக மாரசிங்கவின் காலப்பகுதியில் தெற்காசியாவின் சிறந்த பொருளாதார மூலோபாய செய்தி விருது, ஆசியாவின் சிறந்த புலனாய்வு செய்திகளுக்கான விருது மற்றும் சர்வதேச சிறந்த ஊடகவியலாளருக்கான விருதையும் தேசிய ரூபவவாஹினிக்கு காமினி பண்டார மெனிக்திவெல பெற்றுக்கொடுத்திருந்தார்.

## சமய பன்முகத்தன்மைக்கு...

அர்த்தத்தை வழங்குவதாக, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியர்களின் ரமழான் பண்டிகையையிட்டு பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகள், வர்த்தகத் துறைகள், கல்வி மற்றும் பல்வேறு தொழிற்றுறைகள், விளையாட்டு மற்றும் கலாசாரத் துறைகளில் இலங்கை முஸ்லிம் சமூகம் ஆற்றிவரும் செயற்றிறமான பங்களிப்புக்காக இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கடினமான காலகட்டத்தைக் கடந்து இப்போது நாம் அடைந்திருக்கும் வெற்றி இலக்குகளை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதற்கு முஸ்லிம் சமூகத்தினர் செய்த அர்ப்பணிப்பை முக்கியமான இந்தக் காலகட்டத்தில் நான் தொடர்ந்தும் எதிர்பார்க்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்" எனத் தெரிவித்துள்ளார்.

## சூரியன் 15ஆம் திகதிவரை...

திணைக்களம் தெரிவித்துள்ளது. அதனால் அதிகளவிலான வெப்பத்தை உணரக்கூடியதாக இருக்கும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

சூரியனின் வடதிசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக இம்மாதம் 05ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை இலங்கையின் அகலக் கோடுகளுக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்குமெனவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை நாட்டின் மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில பிரதேசங்களில் பிற்பகல் 02 மணிக்குப் பின்னர் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில பகுதிகளில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் அதற்கிணங்க மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## 18ஆம் திகதிக்கு முன் 'அஸ்வெசும'....

தெரிவித்துள்ளார். ஆட்சேபனைகள் மற்றும் எதிர்ப்புகளை கவனத்தில் கொண்டு அவற்றை பரிசீலித்த பின்னர் இந்த புதிய எண்ணிக்கையானோர் கொடுப்பனவுகளுக்கு தகைமை பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், அவர்களுக்குரிய நிலுவைப்பணம் உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மொத்தமாக 18 இலட்சத்து 54,000 பேர் அஸ்வெசும கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்பவர்களாக உள்ளதுடன், அதற்காக அரசாங்கம் 58.5 பில்லியன் ரூபா நிதியை செலவிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அஸ்வெசும கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து தகவல்களையும் பூரணப்படுத்தியுள்ள 200,000 குடும்பங்கள் இதுவரை அவர்களது வங்கிக் கணக்கை ஆரம்பித்தல் மற்றும் அது தொடர்பான தகவல்களை புதுப்பிக்காமல் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பில் பிரதேச செயலகங்கள் மூலமும் ஊடகங்கள் மூலமும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் மேற்படி குடும்பங்களின் உறுப்பினர்களிடமிருந்து அதற்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அஸ்வெசும கொடுப்பனவுகள் இரண்டாம் கட்டத்துக்காக 4 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அதில் 2 இலட்சத்து 86 ஆயிரம் விண்ணப்பங்கள் தற்போது உரிய கட்டமைப்புக்குள் உள்வாங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான நடவடிக்கைகள் மே மாதம் ஆரம்பமாகும் என்றும் தெரிவித்துள்ள அவர், அஸ்வெசும கொடுப்பனவு திட்டத்தில் 24 இலட்சம் குடும்பங்களை இணைத்துக்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் அதற்காக இம்முறை வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் 205 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


## இன்றைய பலன்கள்

(11.04.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

### மேஷம்:



படிப்பில் நாட்டம் இருக்காது. மனம் சோர்வடையும். பெண்களுக்கு மனம் மகிழ்ச்சியில் துள்ளும் வகையில் இல்லத்தில் பல நிகழ்வுகள் நடைபெறும்.

### ரிஷபம் :




குடும்பத்தில் கணவன் மனைவியிடையே குதூகலத்திற்கு குறைவிருக்காது. குடும்ப உறுப்பினர் யாருக்கேனும் ஒருவருக்கு மருத்துவ செலவு ஏற்படலாம்.

### மிதுனம்:




தொழில் வியாபாரம் நல்லபடியாக நடந்தாலும் வாடிக்கையாளர்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய தொகை தாமதமாகலாம்.

### கடகம்:



கலைஞர்கள் மிகவும் புகழ்வாய்ந்த நிறுவனங்களில் வாய்ப்புகள் கிடைக்கப்பெறுவர். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே இனிய சூழ்நிலை நிலவும்.

### சிம்மம்:



நீண்ட காலம் எதிர்பார்த்த ஒரு நல்ல செய்தி வந்து மகிழ்ச்சி படுத்தும். பிரிந்த உறவுகளை சேர்க்க நீங்கள் எடுத்த முயற்சி வெற்றியாகும்.

### கன்னி:



குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை பெண்கள் பொறுமையாக கையாளுங்கள் சகோதரர் வழியில் உதவி கிடைக்கும்.

### துலாம்:



ஒரு சிலருக்கு வெளிநாட்டு பயணம் அமையலாம் குடும்பத்தில் கணவன் மனைவி இடையே சமூகமான போக்கு காணப்படும்.

### விருச்சிகம்:



குடும்பத்தில் பெண்களுக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் பல சம்பவங்கள் நடைபெறும். கணவன் மனைவி இடையே கனிவும் பரிவும் காணப்படும்.

### தனுசு:



ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு அமையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தாவிட்டால் துன்பங்களை அனுபவிக்க வேண்டியது இருக்கும்.

### மகரம்:



பிள்ளைகளை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். ஆடைய ஆபரணச் சேர்க்கை உண்டு. கனவில் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் தென்படக்கூடும்.

### கும்பம்:



பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். அதே நேரம் பணியிலும் குடும்பத்திலும் சில சங்கடங்கள் மனதை வாட்டும்.

### மீனம்:



தொழில்துறையில் வேலைக்கேற்ற ஊதியம் கிடைப்பது அரிது. மூலப் பொருட்களை சேமித்து வைத்துக் கொள்வது நல்லது. கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்க காலதாமதம் ஆகலாம்.

## சிலரது அரசியல் நலன்... (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

*தரப்புக்களினால் தவறாக வழிநடத்தப்பட்ட சிலர், ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவதற்கு அதிகாரிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில், எதிர்ப்பில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி ஆய்வின் நோக்கம் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக இப் பகுதிக்கு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நிதானமான முறையில் கலந்துரையாடி உண்மைகளை புரிந்து கொள்ளமுடியாத நிலையிலேயே அங்கிருந்த பலர் காணப்பட்டனர். இதனால், இத் தரப்பினருக்கு உண்மைகளை தெளிவுபடுத்துவது உடனடியாக சாத்தியமில்லை என்பதை புரிந்து கொண்ட அமைச்சர், தன்னுயைய முயற்சியை இடைநிறுத்தி திரும்பிய போதிலும், மக்களுக்கு நன்மைகளை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையான ஆய்வு நடவடிக்கைகளை தொடர்வதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.*

## தமிழ், சிங்கள புத்தாண்டை...

பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

விடுதலை செய்யப்படுபவர்களில் 11 பேர் பெண்கள். இம்முறை பல்லேகல சிறைச்சாலையில் இருந்து அதிகூடிய கைதிகள் 210 பேர் விடுவிக்கப்படுகின்றனர்.வீரவில சிறைச்சாலையில் 91 கைதிகளும், தல்தென சிறைச்சாலையில் 88 பேரும், மஹர சிறைச்சாலையில் 56 பேரும், அம்பேபுஸ்ஸ சிறைச்சாலையில் இருந்து 43 பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து 30 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## ரமழான் மனித சமூக...

ஆன்மிகம் மட்டுமன்றி மனித மற்றும் சமூக விழுமியங்களை அங்கீகரிக்கின்ற அதனை பறைசாற்ற கிடைத்த ஒரு சிறந்த சந்தர்ப்பமாகுமென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இஸ்லாமியர்களின் ரமழான் பண்டிகையையிட்டு எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மாதம் பூராவும் நோன்பின் சிறப்பை பேணி ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடப்படுகின்ற இந்த புனித பெருநாளை, உலகுக்கு தர்மம் மற்றும் சமத்துவச் செய்தியை எடுத்துரைக்கும் மிக முக்கியமான சமய விழா என்றும் அழைக்கலாம்.

இலங்கை வாழ் சமூகத்துடன் பண்டையகாலம் தொட்டு இஸ்லாமியர்கள் நெருங்கிய சகோதரத்துவத்துடன் பேணிய உறவு உலகுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இந்த தேர்தல் ஆண்டில் சகோதரத்துவ பந்தத்தை பலவீனப்படுத்த பல்வேறுபட்ட இனவாதிகள் முயற்சிக்கலாம். ஆனால் அந்த சகோதரத்துவத்தை தொடர்ந்தும் சேதப்படுத்த ஒரு சிறிய இனவாதக் குழுவுக்கும் நாம் இடமளித்தல் கூடாது.

மக்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டத்தின் போது இந்த சகோதரத்துவத்தின் கரங்கள் நாட்டுக்காக நீட்டப்பட்டதை கண்டோம். பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் என எந்த இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், ஒரு தாயின் பிள்ளைகளாக ஒரே தேசமாக நம் நாட்டுக்காக முன்னோக்கி வந்தோம். இந்த மகத்தான ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தன்று அந்த சகோதரத்துவத்தின் கரங்கள் எதிர்காலத்தில் வலுப்பெற வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறேன்.

இலங்கையர்கள் போலவே உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம் சகோதர, சகோதரிகளுக்கும் அமைதியான, நல்லிணக்கம் கொண்ட சகோதரத்துவம் வாய்ந்த ஈதுல் பித்ர் பெருநாளாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழ், சிங்கள புத்தாண்டு சுபவேளை...

குழுவினால் தயாரிக்கப்பட்ட சுபவேளை குறிப்புப் பத்திரமே இவ்வாறு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

புத்தாண்டு பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு பற்றவைத்தல், உணவு உண்ணல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், புத்தாண்டில் வேலைக்குப் புறப்பட்டு செல்லுதல் உள்ளிட்ட சுப காரியங்களுக்கான சுப நேரங்கள் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில்

# பட்டாசு, வீதி விபத்துகள் குறித்து மக்களுக்கு அரசாங்கம் எச்சரிக்கை

வீதி விதிமுறைகளை மீறுவோர் தொடர்பாக 1955 அவசர இலக்கத்துக்கு அறிவிக்கலாம்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக் காலத்தில் வீதி விபத்துகள் மற்றும் பட்டாசு விபத்துகளை குறைத்துக்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்துமாறு பொதுமக்களிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் பட்டாசுகள் வெடிப்பதாலேயே 36 சதவீதமான விபத்துகள் ஏற்படுவதாகவும் அதனால் 17 சதவீதமானோர் கண் பாதிப்புகளுக்கு ஆளாவதாகவும் தெரியவந்துள்ளது. எனவே பண்டிகைக் காலத்தில் இவ்வாறான விபத்துகளை மட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டத்தை போக்குவரத்து அமைச்சும், சுகாதார அமைச்சும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

இதற்கமைய பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துகளை மட்டுப்படுத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் வீதி பாதுகாப்பு தேசிய சபையும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (09) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திர சிகிச்சை நிபுணரும் வைத்தியருமான சஜித் ரணதுங்க, நேருக்குநேராக முச்சக்கர வண்டிகள் மோதுவதால் இடம்பெறும் விபத்துகள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துகளால் உயிரிழப்போரின்எண்ணிக்கைஅதிகரித்துள்ளதாகவும் கடுமையான விபத்துகளில் சிக்கியவர்கள் இன்னும் முழுமையாக குணமடையவில்லையென சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அதிவேக வீதிகளுக்கு வெளியில் இடம்பெறும் விபத்துகளிலேயே அதிகளவானோர் உயிரிழப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அதனால் நாளாந்தம் 10 பேர்வரை உயிரிழப்பதாகவும் விபத்துகளை மட்டுப்படுத்துவது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன தெரிவிக்கையில், பண்டிகைக் காலத்தில் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளை குறைப்பதற்கு பேருந்து உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் தொடர்பாக 1955 என்ற அவசர இலக்கத்துக்கு 24 மணித்தியாலங்களும் அறிவிக்க முடியும். கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு உடனடியாக பதிலளிக்க அதிகாரிகள் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு உரையாற்றிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் பிரியந்த சூரிய பண்டார,

பண்டிகைக் காலத்தில் இரண்டு 02 இலட்சம் பேர் அதிவேக வீதிகளை பயன்படுத்தக்கூடும் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அதனால் அதிவேக வீதிகளின் சகல காசாளர் நிலைய கதவுகளையும் திறந்து வைத்திருக்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதிவேக வீதிகளில் ஏற்படும் விபத்துகளை மட்டுப்படுத்தும் வகையில் சோர்வடைந்த சாரதிகள் ஓய்வெடுப்பதற்கான இடம் புத்தாண்டுக்கு முன்னதாக திறக்கப்படும் என்பதோடு, பண்டிகைக் காலத்தில் ஏற்படக்கூடிய விபத்துகளை மட்டுப்படுத்த அனைத்து சாரதிகளும் வீதி விதிமுறைகளை பேண வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

அதிவேக வீதி பாதுகாப்பு நடவடிக்கை ஆலோசனைக் குழு உறுப்பினர் கலாநிதி சாமோத் ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்,

அதிவேக வீதிகளில் 56 வீதம் விபத்துகள் சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்படுகிறது. அவற்றில் 35 வீத விபத்துகளில் மரணம் அல்லது முழுநேர முழுமையான முடக்கத்தை ஏற்படுத்துகிறது. தெற்கு அதிவேக வீதி நிர்மாணிக்கப்பட்டு, 13 வருடங்களில் 9,375 விபத்துகள் நடந்துள்ளன. அவற்றில் 5,292 விபத்துகள் சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்பட்டவையாகும். இந்த விபத்துகளில் 66 பேர் உயிரிழந்துள்ளதோடு, 637 பேர் முழுமையாக ஊனமுற்றுள்ளனர்.

கணக்கெடுப்பு மற்றும் மேற்பார்வை அறிக்கைகளில் அதிவேக வீதி விபத்துகளுக்கு சாரதிகளின் அலட்சியம், வாகனங்களை பராமரிக்காமை மற்றும் மூன்றாம் தரப்பினரால் விபத்துகள் ஏற்படுத்தப்படுதல் உள்ளிட்ட மூன்று முக்கிய விடயங்களே விபத்துக்களுக்கு காரணமாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக வீதி பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மயூர பெரேரா தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டில் இதுவரை நெடுஞ்சாலைகளில் 07 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது அதிகரிப்பை காட்டுகிறது. 2022ஆம் ஆண்டில் அதிவேக வீதிகளில் 17 பயங்கரகமான விபத்துகளும் 2023ஆம் ஆண்டில் 04 மரணம் ஏற்படுத்தும் விபத்துகளும் நடந்துள்ளன. எனவே இம்முறை பண்டிகை காலத்தில் விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையில் சாரதிகள் ஒழுங்கு விதிகளை பின்பற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் துஷார சுரவீர தெரிவிக்கையில், புதிய தொழில்நுட்ப தொடர்பு கருவிகளை பயன்படுத்தும் போது சாரதிகளின் கவனச்சிதறலால் ஏற்படும் விபத்துகளை தடுப்பதற்கு தேவையான ஒழுங்கு விதிகள் மற்றும் விதிமுறைகள், நடைமுறையிலிருக்கும் மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் இல்லை. எனவே, விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அதற்காக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பயிற்சிகளிலிருந்து முறையான நெறிப்படுத்தல்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

# SLPP இன் ஜனாதிபதி வேட்பாளர் நிச்சயமாக களம் இறக்கப்படுவார்



பொதுஜன பெரமுனவிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் நிச்சயமாக களம் இறக்கப்படுவார். ஆனால் இதுவரையில் தாம் இறுதித் தீர்மானம் எதையும் எடுக்கவில்லையென, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"நாம் பலமான கட்சியாகவே தொடர்ந்தும் செயற்படுவோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எவ்வளவு தூரம் அரசியல் பயணத்தை தொடர முடியுமோ அதுவரையும் பயணிப்போம்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தொடர்பாக எமது கட்சி உறுப்பினர்கள் எவரேனும் கருத்து தெரிவிப்பார்களாயின், அது அவர்களது தனிப்பட்ட கருத்தாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எழுந்துள்ள நெருக்கடி நிலையால் எமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கட்சியிலிருந்து வெளியேறிய சந்தர்ப்பங்கள் உள்ளன. அதேபோன்று புதிய கட்சியை உருவாக்கிய சந்தர்ப்பமும் உள்ளது.

ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்புவதற்கான உரிமை சந்திரிக்காவுக்கு உள்ளது" என்றார்.

# இனிவரும் சகல தேர்தல்களையும் வெற்றிகரமாக SLPP எதிர்கொள்ளும்

### கட்சியை பலப்படுத்தும் திட்டம் தெற்கிலிருந்து ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்



இனிவரும் அனைத்து தேர்தல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் பொதுஜன பெரமுன பலப்படுத்தப்படும் என கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்காக கட்சியின் அடிமட்டத்திலிருந்து அனைத்து மட்டத்திலும் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக வீடு வீடாகச் சென்று ஆதரவாளர்களை அறிவுறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர், அதனை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை தொகுதியிலிருந்து ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பொதுஜன பெரமுன கட்சியை நாட்டின் பலம் மிக்க கட்சியாகக் கட்டியெழுப்புவதற்கான உச்சளவு அர்ப்பணிப்பை தாம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர் தரப்பு பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்ற முயற்சி



ஜனாதிபதித் தேர்தலில் பொது தமிழ் வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றதென, இலங்கைத் தமிழரசுக் கட்சி முக்கியஸ்தரும் வடமாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். யாழ். கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இதனைக் கூறினார்.

இந்த சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டுமென்பது தொடர்பாக பரவலாக பேசப்பட்டு வருகின்றது. இந்த விடயம் சம்பந்தமாக எமது கட்சி கலந்துரையாடி ஒரு முடிவுக்கு இதுவரை வரவில்லை. ஆனால் என்னை பொறுத்தவரை இந்த விடயம் நடைமுறைக்குச் சாத்தியமற்றது. பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்குள் முரண்பாடுகள் பல வந்து சேரும். ஏற்கெனவே நிலைமைகள் அப்படித்தான் இருக்கின்றன.

பேரம் பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாக பலமாக நாம் இருக்க வேண்டுமென்பதே தமது தனிப்பட்ட கருத்தாகும்" என்றார்.

# பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த யாழ். வாசி விமானத்துக்குள் கைது

நாட்டை விட்டு வெளியேற நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்ட யாழ். நகரைச் சேர்ந்த ஒருவர் நேற்று அதிகாலை விமானத்துக்குள் ஏறிய பின்னர் விமான நிலைய குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவர் தனது கடவுச்சீட்டின் சுயவிபரக் கோவை பக்கத்திலுள்ள தரவுகளை மாற்றி போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி, மலேசியாவுக்கு தப்பிச்செல்ல விமானத்தில் ஏறி அமர்ந்திருந்த போதே, கைது செய்யப்பட்டார். யாழ். சண்டிலிப்பாயில் வசிக்கும் 34 வயதுடையவரே இவ்வாறு கைதானார்.

2012 இல் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச்செல்ல முயன்ற குற்றச்சாட்டில் அவர் கைதானதையடுத்து, அவருக்கு எதிராக நிலுவையிலுள்ள வழக்கு தொடர்பில் நாட்டை விட்டு வெளியேற நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

### அரிசி உட்பட உள்நாட்டு உற்பத்திகள்

# புத்தாண்டுக் காலத்தில் தட்டுப்பாடின்றி கிடைக்கும்




தமிழ், சிங்கள புத்தாண்டுக் காலத்தில் உள்நாட்டு உற்பத்திகளான அரிசி, மரக்கறிகள், முட்டை, கோழி இறைச்சி, பழங்கள் ஆகியவை தட்டுப்பாடின்றி கிடைக்குமென, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்நிலையில் எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் முட்டையொன்றின் விலை 30 ரூபாவாக குறைக்கப்படுமெனவும், அவர் கூறினார். கடந்த மாதங்களில் வேகமாக அதிகரித்த மரக்கறி விலை மற்றும் மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு தற்போது நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் உற்பத்திகளை அதிகரிக்க அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் தேவைக்கு அதிகமாக அத்தியாவசியப் பொருட்களை சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமெனவும், அவர் குறிப்பிட்டார்.

புத்தாண்டுக்கு முன்னர் ஒரு கிலோகிராம் கரட்டின் விலை 5,000 ரூபாவாக அதிகரிக்குமென்று பலர் கூறிய போதிலும், தற்போது கரட் மட்டுமன்றி அனைத்துப் பொருட்களினதும் விலை குறைவடைந்துள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

### ‘கடவுளின் துகள்’

# கண்டுபிடிப்பை நிகழ்த்திய பீட்டர் ஹிக்ஸ் காலமானார்



பிரிட்டனின் பிரபல இயற்பியலாளரான பீட்டர் ஹிக்ஸ் (Peter Higgs) தனது 94ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

‘கடவுளின் துகள்’ அல்லது 'ஹிக்ஸ் போஸான்' (Higgs Boson) என்று அழைக்கப்படும் மனித வரலாற்றில் முக்கிய கண்டுபிடிப்பை நிகழ்த்தியமைக்காக இவர் உலகப் புகழ் பெற்றார்.

பிரபஞ்ச உருவாக்கத்தில் இத் துகள் முக்கிய பங்காற்றியதாக அறிவியலாளர்கள் கூறுவதால், இதனை கடவுளின் துகளென்று அழைக்கின்றனர்.

கடவுளின் துகள் தொடர்பாக 1964ஆம் ஆண்டே இவர் கோட்பாட்டை வகுத்திருந்ததுடன், இவரின் கோட்பாடு சுமார் 49 ஆண்டுகள் கழித்து அதாவது 2012ஆம் ஆண்டு அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு மேற்கொண்ட சோதனையில் உறுதியானது.

இதனைத் தொடர்ந்து குறித்த கண்டுபிடிப்புக்காக 2013ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை பெல்ஜியத்தை சேர்ந்த இயற்பியலாளர் ஃபிராங்கோயிஸ் எங்லெர்ட்டுடன் இணைந்து அவர் பெற்றுக்கொண்டிருந்தார்.









# நோன்புப் பெருநாள் சிறப்பு மலர்

தயாரிப்பு: மர்லின் மரிக்கார்

## நோன்புப் பெருநாளுக்கான நபிகளாரின் வழிகாட்டல்கள்

ஈகைத் திருநாளாம் ஈதுல் பித்ரும் தியாகத் திருநாளாம் ஈதுல் அழ்ஹாவும் (ஹஜ்) முஸ்லிம்களின் வாழ்வில் மிக முக்கியமான இரு பெருநாட்களாகும். நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற போது அங்குள்ள யூத மக்கள் பல்வேறு தினங்களை பெருநாட்களாக அனுஷ்டித்து வந்தனர். இதனை அவதானித்த நபியவர்கள் ஒவ்வொரு சமூகத்தவருக்கும் சில பெருநாட்கள் உள்ளன. முஸ்லிம்களான நமக்குரிய பெருநாட்கள் ஈதுல் பித்ர் மற்றும் ஈதுல் அழ்ஹா ஆகும் என்றார்கள். (ஆதாரம்: புஹாரி).

இந்த மகத்துவம் மிக்க நன்நாளில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் அன்னார் எடுத்தியம்பியுள்ளார்கள். அந்த வகையில் பெருநாளன்று காலையில் நன்றாக குளித்து புதிய ஆடைகளை அணிந்து தன்னை அழகுபடுத்திக் கொள்ளுதல் நபிவழியாகும். நபியவர்கள் பெருநாள் தினத்தில் சிவப்பு நிற கோடு போட்ட ஆடையை அணியும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். (ஆதாரம்: சில்சிலா)

அதேநேரம், நோன்புப்பெருநாள் தொழுகைக்காக செல்லமுன் சில பேரீச்சம் பழங்களை உண்ணுதல் சுன்னத்தாகும். நபியவர்கள் நோன்புப் பெருநாள் தொழுகைக்கு செல்ல முன் ஒன்றோ அல்லது மூன்று, ஐந்து பேரீச்சம் பழங்களையோ உண்ணாமல் இருந்ததில்லை. (ஆதாரம்: பைஹகி).

மேலும் பெருநாள் தொழுகைக்கு கால்நடையாக செல்வதும் சுன்னத்தாகும். (ஆதாரம்: திர்மிதி) அத்தோடு ஒரு பாதையால் சென்று வேறொரு பாதையால் திரும்பி வருவதும் நபி வழியாகும். (ஆதாரம்: புஹாரி).

இவை இவ்வாறிருக்க, ஸக்காத்துல் பிதர் எனும் பெருநாள் தர்மத்தைப் பெருநாள் தொழுகைக்கு செல்ல முன்னர் கொடுத்துவிட்டுச் செல்வது மிகச் சிறந்த சுன்னாவாகும். பெருநாள் பிறை கண்டதிலிருந்து இந்த தர்மத்தை கொடுக்கலாம். இரண்டு தினங்களுக்கு முன்னதாக கொடுப்பதற்கும் ஆதாரம் உண்டு. இதன் அளவு அண்ணளவாக பிரதான உணவாகக் கொள்ளப்படும் தானியமான சாதாரண அரிசியிலிருந்து ஒரு தலைக்கு இரண்டு கொத்து வீதம் (இரண்டரை கிலோ) வழங்க வேண்டும். ஒரு குடும்பத்தில் உள்ள ஆண், பெண் சிறுவர், அடிமை அனைவருக்கும் பெருநாளன்று உண்ணும் உணவுத் தேவைக்கு மேலதிகமாக வைத்திருக்கும் அனைவர் மீதும் இது கட்டாயக் கடமையாகும்.

நபி (ஸல்) அவர்கள் ஆண், பெண் சிறுவர் அடிமை அனைவருக்காகவும் ஸக்காத்துல் பித்ர் கொடுக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டார்கள். இதைத் தொழுகைக்கு செல்ல முன்னர் கொடுத்துவிட வேண்டும். தாமதித்தால் அது சாதாரண தர்மமாகவே அமையும். ஸக்காத்துல் பித்ர் கடமையை நிறைவேற்றியதாக ஆகாது என்பது ஹதீஸ் ஆகும்.

மேலும் பெருநாளுக்கான பிறை கண்டது முதல் பெருநாள் தொழுகை முடியும் வரை தக்பீர் சொல்வது சுன்னாவாகும். அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... லாயிலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து...' என்பது ஸஹாபாக்கள் பிரயோகித்த தக்பீர் வாசகமாகும். (ஆதாரம்: இப்னு ஹிப்பான்).

பெருநாள் தொழுகையைத் திடலிலோ திறந்த வெளியிலோ நிறைவேற்றுவதும் சுன்னத்தாகும். பள்ளிவாயில்களிலும் நிறைவேற்ற முடியும். இத்தொழுகைக்கு அதானும் இகாமத்தும் கிடையாது, முந்திய பிந்திய சுன்னத்துகளும் கிடையாது. முதலில் தொழுகையும் பின்பு குத்பாவும் நிகழ்த்தப்படும். இத்தொழுகைக்கு ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் கலந்து கொள்வது நபி வழியாகும். தொழ முடியாத நிலையிலுள்ள பெண்கள் கூடத் திடலுக்கு வந்து தொழும் பகுதியை விட்டு சற்று ஒதுங்கியிருக்க வேண்டுமென்பது நபியின் உத்தரவும், நபியின் காலத்து நடைமுறையுமாகும். (ஆதாரம்: புஹாரி)



பெருநாள் தொழுகை இரண்டு ரக்அத்துகளைக் கொண்டது. முதல் ரக்அத்தில் சூரத்துல் பாத்திஹாவுக்கு பின் ஏழு தடவைகளும் இரண்டாவது ரக்காத்தில் ஃபாத்திஹாவுக்குப் பின் ஐந்து தடவைகளும் தக்பீர்கள் சொல்ல வேண்டும். பின்னர் முதல் ரக்அத்தில் ஸூரா அஃலாவையும் இரண்டாவது ரக்அத்தில் ஸூரா காஷியாவையும் ஓதி வழக்கம் போல தொழ வேண்டும். முதலாம் ரக்அத்தில் ஸூரா காஃப்வையும் இரண்டாம் ரக்அத்தில் ஸூரா கமரையும் நபியவர்கள் ஓதியதாகவும் ஹதீஸ்களில் குறிப்பிடப்படுகின்றன. அதன் பின்பு இமாம் பெருநாள் கொத்பாவை நிகழ்த்துவார்.

பெருநாள் தொழுகையின் நேரம் ழுஹா தொழுகையின் நேரத்தை ஒத்ததாகும். அதாவது சூரியன் உதித்து ஒரு ஈட்டியளவு உயர்ந்ததிலிருந்து ளுஹருக்கு முன்னால் வரைக்கும் உண்டான நேரமாகும். இத்தொழுகையை ஒரே தடவையில் ஜமாஅத்தாக கூட்டாக நிறைவேற்றுவதே ஸுன்னத். தொழுகை தவறியவர்கள் வேறு இடத்துக்குச் சென்று அல்லது தனியாகத் தொழுவதைத் தவிர வேறுவழியில்லை.

பெருநாள் தொழுகையை முடித்துவிட்டு முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சலாம் கூறி முஸாபஹா செய்து ஆறத்தழுவி பெருநாள் வாழ்த்துக் கூறுவது சஹாபாக்களின் வழிமுறையாகும். சஹாபாக்கள் பெருநாள் தினத்தில் ஒருவரையொருவர் சந்தித்தால் "த கப்பலல்லாஹு மின்னா வமின்கும்" என்று கூறுவார்கள். (ஆதாரம்: பத்ஹுல் பாரீ)

பெருநாள் தினங்களில் நன்றாக உண்டு உடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதும் நபிவழியே. ஏழை எளியோர் வசதியற்றோருக்கும் கொடுத்து மகிழ்வது வரவேற்கத்தக்கது. பெருநாள் தினத்தில் சிறுவர்களை மகிழ்விக்கும் வகையில் ஆகுமான விளையாட்டுக்கள் கேளிக்கைகளில் ஈடுபடுவதும் அனுமதிக்கப்பட்டது. நபியவர்கள் சில சிறுமிகள் தனது வீட்டில் பாட்டுப் பாடி மகிழ்வதை கண்ட போது அபூபக்கர் (ரழி) அவர்கள் அதனை தடுக்க, நபியவர்களோ அபூபக்கர..! இன்று அவர்களுக்கு பெருநாள் தினம் அவர்கள் பாடட்டும் விட்டு விடுங்கள் என்றார்கள் (ஆதாரம்: புஹாரி). ஆனால் பிறருக்கு தொந்தரவை தரும் வீண்விரய செயல்களான புகைத்தல், பட்டாசு வெடித்தல், நெருப்பு மத்தாப்பு விளையாட்டுகளில் ஈடுபடுதல் போன்றன தடுக்கப்பட்டவைகளாகும்.

அண்மைக் காலமாக பெருநாள் தினங்களில் மாத்திரம் மரணித்தவர்களின் கப்ர்களைத் தரிசிக்கும் வழக்கம் சிலரிடம் காணப்படுகின்றது. கப்ர்களைத் தரிசித்தல் பொதுவான சுன்னத்தாகும். அவற்றை பெருநாள் தினங்களோடு மட்டுப்படுத்துவது சிறந்ததல்ல.

அவ்வாறே பெருநாள் தினங்களில் உற்றார் உறவினர்கள் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று நலன் விசாரித்தல் பரஸ்பரம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தல், உணவுப் பண்டங்களை அன்பளிப்பு செய்து மகிழ்தல், குடும்பத்துடன் பொழுதுபோக்கு தலங்களுக்கு செல்லல், சுற்றுலா, குடும்ப ஒன்றுகூடல் மேற்கொள்ளல் போன்ற அனைத்தும் மார்க்க வரையறைக்கு உட்பட்ட வகையில் அமைத்துக்கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதிண்டு.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவரினதும் ரமழானிய நல்லமல்களைக் அங்கீகரித்து இறையச்சத்துடன் எமது நோன்புப் பெருநாளை உலகெங்கிலுமுள்ள அனைத்து முஸ்லிம் உடன்பிறப்புக்களும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் குதூகலிக்க எம் அனைவருக்கும் அருள்பாலிக்கட்டும்.

மௌலவி ஏ.ஜி.எம் ஜெலீல்...
மதனீ, விரிவுரையாளர், மஃஹதுஸ் ஸுன்னா அரபுக் கல்லூரி, காத்தான்குடி.

## பேரின்பப் பெருநாள் வாழ்த்து

தலைப்பிறை கண்டார் அன்பர்
தரணியே அன்பால் பொங்கும்
அலையருள் வீசல் கண்டேன்!
ஆதவன் அல்லாஹ் என்றே
கலைக்குரல் எழுப்பி வானில்
கைகளைக் கூப்பல் கண்டேன்!
விலைமதிப் பில்லா நல்ல
வீரிய விரதம் வாழ்க!



பள்ளியின் வாங்கு வானில்
பாடிய செய்தி கேட்டேன்!
அள்ளியே இன்ப வாழ்த்தை
ஆருயிர்த் தோழருக்கு,
கள்ளதில் வண்டு பாடும்
கவியதில் பந்தி வைத்தேன்!
தள்ளியே தாழ்வு போகத்
தளிர்த்தன உலகு எல்லாம்!

மூன்றது பத்து என்றே
முழுமையில் பகுத்தார் நோன்பை,
தானது ரஹ்மத் என்ற
அருளது முதலில் என்றார்,
கானலாய்... பாவம் போக்கும்
கனிவினை மஃபிரத் தென்றார்,
வேனிலாம் இறுதிப் பத்தோ
வெற்றிதான் மீட்சி என்றார்!

"நோன்பெனக் குரிய தந்த
நோற்றலின் கூலி நானே"
தானதை உரைத்து வைத்தான்,
தனிப்பெரும் அருளின் மிக்கான்!
தேனவன் செய்திப் பேறு
தெரிந்துமே நோன்பு பூண்டோர்,
வானவர் வாழ்வை மண்ணில்
வாழுதல் திண்ணம் கண்டீர்!

மும்மையின் இறுதிப் பத்தோ
முழுமையும் உணர்த்தும் ஆறு!
எம்மையுள் எழுக என்றே
இழிநிலை கழுவும் ஆறு!
தம்மையுள் தௌபா செய்து
தானதற் கிரங்கின், அல்லா,
தம்மையே தருவான் என்ற
தனிப்பெரும் வார்த்தை வாழ்க!

ஏகமாம் இறைமேல் அச்சம்
எழுந்திடல் வாழ்வின் அர்த்தம்,
தாகமாய் அதுகைக் கொண்டே,
தன்னிகர் ரமழான் தொட்டு
ஆகமம் ஆகிச் ஷவ்வால்
அதுவரை நோன்பி ருந்தோர்,
பாகமாம் பசியைக் கொன்றார்!
பதியினைப் பசியாய்க் கொண்டார்!

முப்பது இரவும் தேவ
முழுநினை வோடு எண்ணி
தப்பெதும் நேரா நல்ல
தராவீஹ் என்று சொல்லி
செப்புவர் ரக்ஆத் செம்மை
செவ்விய இறையைப் பார்த்து
இப்புவி உய்யத் தாமும்
இன்பமாய் உய்வ ரன்றோ!

நோன்பது கடமை, அதை
நோற்றலும் கடமை, இங்கு
வான்பத மெய்தல் நல்ல
வல்லிறை தருவான் என்றே,
ஊனினை வருத்தி நல்ல
உள்ளொளி பெருக்கி நின்ற
தேனிகர் உறவு கொள்ளும்
தேன்பிறை கண்டோர் வாழ்க!

ஒப்பரும் புனித குர்ஆன்
ஒளிரும் இந்நோன்பு நாளில்,
செப்பரி ஞான மேலோன்,
செகமெலாம் போற்றும் வல்லோன்,
தப்பெதும் தாங்கா நபியார்
தனிப்பெரு ஹிராத்தாம் குகையுள்,
ஒப்புயர் இருபத் தேழ்நாள்
ஒண்முதல் வசனம் பெற்றார்!

ஏகமாம் இறையின் முன்னே
எதுவுமே நானென் றெண்ண,
மோகமாம் சர்வ வஸ்து
மோசமாய்ப் போகும் காணீர்!
தாகமாய் இறையை ஏற்கும்
தனிப்பெரும் அல்லா உம்மில்
வேகமாய்த் தரித்து நிற்பான்!
வேண்டிய பலவும் செய்வான்!

வயிற்றினைக் காலி யாக்க
வல்மனம் தூய்மை யாகி
கயிற்றினால் மனதைக் கட்டும்
கல்வியும் தேர்ச்சியாகும்
பயிற்றினால் பயிலா ஞானம்
பார்மிசை இல்லை என்னும்
பயிற்சியும் தேர்ச்சி யாகும்,
பார்மிசை நோன்பி னூற்றால்!

"நீர்செயும் அனைத்தி னிற்கும்
நிலமதில் கூலி அல்ல!"
"நீர்வினை செய்யின் நானோ
தீர்க்கிறேன் மறுமை!" என்றோன்
"ஆர்கலி உலகில் என்றும்
அன்பதால் நோன்பு நோற்றால்,
பாரினில் தன்னைத் தந்தே
பலதுமே செய்வேன்!" என்றான்.

என்னரும் பிறையின் நேசர்
என்றுமே நீவீர் வாழ்வீர்!!!
தன்னரும் அருளால் அந்த
தனிப்பெரும் அல்லாஹ் எண்ணும்
பன்னருஞ் செயல்கள் யாவும்
பலித்துமே வாழ்வீர் வாழ்வீர்!!!
கன்னலும் பாலும் தேனும்
கலந்ததென் கவியால் வாழ்வீர்!!!

கலாநிதி செல்லதுரை சுதர்சன்...
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

## இறைத்தூதரின் நகரில் ஒரு பெருநாள்

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்ட சமயம் அங்குள்ள மக்கள் இருநாட்களைப் பெருநாட்களாய் எடுத்து மகிழ்வோடு கொண்டாடுவதைக் கண்டார்கள். அப்பொழுது நபிகளார் "இந்த இரண்டு நாட்களதும் சிறப்பு என்ன?" என வினவ அதற்கு மதீனாவாசிகள் "இந்த இரு நாட்களும் ஜாஹிலிய்யா காலத்தில் எங்களுக்கு திருநாட்களாய் இருந்து வந்தவை. அவற்றில் நாங்கள் விளையாடி மகிழ்ந்துகொண்டிருந்தோம்" என பதிலளித்தனர். அப்போது நபிகளார் "அவ்விரு நாட்களுக்குப் பகரமாக அவற்றினை விட சிறந்த இரு நாட்களை அல்லாஹ் உங்களுக்கு பெருநாட்களாக வழங்கியுள்ளான். அவைதான் நோன்புப்பெருநாளும் ஹஜ்ஜுப்பெருநாளும்" என பதிலளித்தார்கள்.

இதுவே முஸ்லிம்களாகிய நாம் கொண்டாடும் இருபெருநாட்களும் உருவாகிய சரிதை. இன்று உலக முஸ்லிம்கள் அவர்கள் வாழும் பிரதேசத்திற்கேற்ப பல்வேறு வித்தியாசமான கலாசாரங்களை பின்பற்றுகின்றனர். அதற்கேற்றார்போன்று அவர்களது பெருநாட்களும் அமையப்பெறுகின்றன. பிரதேசத்திற்கு பிரதேசம் எமது கலாசாரங்கள் வேறுபட்டாலும் பெருநாட்களை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பது பற்றிய வழிகாட்டல்கள் நபிகளாரையும் அவரது தோழர்களையும் நோக்கியே மீளுகின்றன. அவ்வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு எமது கலாசாரங்களுக்கேற்ப நாம் எவ்வாறு எமது பெருநாட்களை அமைத்துக்கொள்ளலாம் என்பது தொடர்பாக நாம் அறிவது அவசியமாகிறது. எனவே நபிகளார் காலத்து மதீனாவில் ஒரு பெருநாள் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை நோக்குவது சிறந்தது.



மதீனாவில் ஒரு பெருநாள் தினம் அதிகாலை விழிப்போடே ஆரம்பித்து விடுகிறது. பெருநாள் தினமன்று தொழுகைக்காக வெளிச்செல்லமுன் குளித்து மணம் பூசுபவராக இருந்தார் நபிகளார். அவற்றையே குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் பரிந்துரை செய்தார். தொடர்ந்து தன்வசமிருக்கும் ஆடைகளில் மிகவும் அழகானதை பெருநாளன்று அணிவதை நபிகளார் வழக்கமாகக் கொண்டிருந்தார். இஸ்லாம் பொதுவாக தூய்மையாக இருத்தலை வலியுறுத்துவதோடு பெருநாளன்று இன்னும் கூடுதல் கவனம் செலுத்துமாறும் வேண்டிக்கொள்கிறது.

நபிகளார் நோன்புப்பெருநாள் தொழுகைக்கு வெளிச்செல்ல முன் பேரீத்தம் பழங்களை ஒற்றைப்படையில் உண்பவராக இருந்தார். அதே நேரம் பெருநாள் தொழுகைக்கு முன்னரும் பின்னரும் எந்தவொரு சுன்னத்தான தொழுகைகளிலும் நபிகளார் ஈடுபடவில்லை.

வீட்டிலிருந்து தொழுகைக்காக வெளிக்கிளம்பும் நபிகளார் போகும் போது ஒரு வழியையும் திரும்பும் போது மற்றொரு வழியையும் செல்லும் பாதைகளாக எடுத்துக்கொண்டார். வெவ்வேறான வழிகளில் செல்லும் போது பல்வேறு நபர்களை சந்தித்து வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்ளலாம் என்பதே இதற்கான காரணம்.

பெருநாள் தொழுகை பள்ளிவாயலில் அல்லாமல் திடலில் அமையப் பெற்றது. அங்கு வயது, பால் வேறுபாடின்றி எல்லோரையும் அழைத்தார் நபிகளார். மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் முதற்கொண்டு மதீனாவிலுள்ள அனைவரும் அழைக்கப்பட்டதாக உம்மு அதிய்யா (ரழி) கூறுகிறார். எல்லோரும் பெருநாள் என்ற உணர்வை பெற வேண்டும். அங்கு இடம்பெறும் அமல்களில் பங்காளர்களாக வேண்டும் என்பதற்காகவே அனைவரும் அழைக்கப்பட்டனர்.

பெருநாட்கள் என்பவை மகிழ்ச்சியை வெளிப்படுத்த இறைவன் அருளியவை. நபிகளாரும் அன்றைய மதீனாவில் விளையாட்டுக்களிலும் கலைநிகழ்ச்சிகளிலும் ஈடுபட அனுமதியளித்தார்கள். புஹாரியில் பதியப்பட்டுள்ள ஆயிஷா(ரழி) அறிவிக்கும் சம்பவமொன்று, நபிகளார் இசையுடனான பாடலை பெருநாளன்று அனுமதித்ததாகவும், இன்னொரு சம்பவம் ஹபஷி நாட்டவர்கள் தோலினால் செய்யப்பட்ட மத்தளங்களையும் ஈட்டிகளையும் கொண்டு மஸ்ஜிதில் நடனமாடி சில விளையாட்டுகளில் ஈடுபட்டதாகவும் அதை பார்க்க நபியவர்கள் ஆயிஷா (ரழ) அவர்களை அழைத்துச் சென்றதாகவும் பதிவாகியுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் இஸ்லாம் அழகியலை விரும்பும் மனித இயல்போடிணைந்த மார்க்கம் என்பதை தெளிவுபடுத்துகின்றன. ஆனால், இஸ்லாம் கலைகளிலும் விளையாட்டுக்களிலும் வரையறைகளை விதித்துள்ளமையையும் நாம் மறந்துவிடலாகாது.

மேலும் பெருநாள்தின வாழ்த்துப்பரிமாறல் மிக முக்கியமானது. அவ்வாறான வாழ்த்துப்பரிமாறல் எம்மிடையேயுள்ள அன்பையும் உறவையும் அதிகரிக்கும். 'இறைவன் உங்களிடமிருந்தும் எங்களிடமிருந்தும் (நல்லறங்களை) ஏற்றுக்கொள்வானாக... என்ற வாழ்த்தை நபித்தோழர்கள் பெருநாளன்று சந்தித்துக்கொள்ளும்போது பரிமாறுபவர்களாக இருந்துள்ளார்கள். மட்டுமன்றி, இறைநினைவை ஏற்படுத்தவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தவுமென என்ற தக்பீர் மொழியப்பட்டன.

அதேநேரம், இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் பெருநாட்கள் என்பவை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய நாட்களாகும். எனவேதான் நோன்புப்பெருநாளுடன் ஸக்காதுல் பித்ரை இஸ்லாம் இணைத்து வைத்துள்ளது. பெருநாளன்று தொழுகைக்கு செல்லமுன் ஸக்காதுல் பித்ரை வழங்குமாறு நபிகளார் வேண்டியுள்ளமை அன்றைய தினம் அனைத்து வீடுகளிலும் சந்தோசம் வெளிப்பட வேண்டும் என்ற நோக்கத்தை காட்டுகிறது.


இறைத்தூதரின் நபிமொழியொன்றிலிருந்து ஸக்காதுல் பித்ருக்கான தெளிவான நோக்கங்களாக வீண்பேச்சுக்களை விட்டும் நோன்பாளியைத் தூய்மைப்படுத்தல், ஏழைகளின் உணவாக அமைதல் என்ற இரு பரிமாணங்களை காணமுடிகிறது. இறைத்தூதர் (ஸல், அவர்கள் அதனை வழங்குபவர், பெறுபவர் இருவரும் பலனடையும் வகையில் எமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

இவ்வாறாக இஸ்லாத்தின் பெருநாட்கள் என்பவை சமூகசார் நலன்களையும் தனிநபர்சார் நலன்களையும் கருத்திற்கொள்வதாக அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் முஸ்லிம்களாகிய நாம் பெருநாட்களை மகிழ்வுடனும் இலக்குசார் நோக்குடனும் கொண்டாட முயல்வோம்.

ஷம்லான் ஜாபிர்...
விடுகை வருடம்,
ஜாமிஆ நளீமிய்யா

## இனிய நோன்புப் பெருநாள்

அல்லாஹ்வை நெருங்கிடும் அருள் மிகு மாதம்.
புனித ரமழான் மாதம் பிறந் திட்டாலே
இம் மண்ணில் வாழும் மனித ரெல்லாம்
கண்ணியப் படுத்திடும் சிறப்பு மிகு மாதம்
தெரிந்து செய்த பெரும் பாவம் நீங்க
தெரியாமற் செய்த சிறு பாவங் கழிய
அல்லாஹ் விடம் இரு கரம் ஏந்தியே
பாவக் கறைகள் அகற்றிடும் அற்புத மாதம்.



இறுதி பத்தில் ஒரு நாள் இரவினிலே
பாக்கியத்தை யார் அடைந்து கொள்வானோ
அல்லாஹ்வின் நேசர்களாய் சுவர்க்கத்தின்
வாசற்படியேறி மனிதகுலப் பெருமை காப்பான்.
இம்மையிலும் நறுமணக் காற்று வீசிட
நற்குணம் நிறைந்த பண்புகள் மலர்ந்திடும்
உத்தமராரெலாம் கண் குளிர கண்டிடலாம்
சாந்தி சகவாழ்வு நற்பேறு தந்திடுமாம்.

இக்பால் அலி...




## இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதே சிறந்த பெருநாள்

**ஒலிபரப்புப் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர்**



இறை இல்லங்களில் 'தக்பீர்' முழங்க, பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் மகிழ்ச் சிகரமான நாளில் நோன்பு கற்றுத் தந்த பாடங்களை வாழ்நாள் முழுவதும் கடைப் பிடித்திட உறுதிகொள்வோம் என இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் தெரிவித் துள்ளார்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ள அவர், புண்ணியம் பொழிந்த மாதம் எம்மை விட்டு பிரிந்து விட்டது. ரமழான் மாதத்துக்கு விடை கொடுத்துவிட்டு அல்லாஹுதஆலாவின் அருளினால் இன்று நாங்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றோம்.

'ஈதுல் பித்ரானது சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், சாந்தி, சமா தானத்தையும் ஏற்படுத்தும் உன்னத பெருநாளாக விளங் குகிறது. இறைவனின் நேசத்தை பெறுவதற் காக தடுக்கப்பட்ட சகல காரியங்களிலிருந்தும் தவிர்ந்து நடந்து, நல் லமல்கள் பல புரிந்து பெருநாள் கொண்டாடும் இம்மகிழ்ச்சியான தினத்தில் ரமழான் கற்றுத் தந்த பாடத்தை, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தும் பேணி டுவோம்.

நோன்பின் போது உடலையும் உள்ளத் தையும் கட்டுப்படுத்தியிருந்தது போன்று, இனிவரும் நாட்களிலும் உடலையும் உள்ளத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்க உறுதிகொள்வோம். அதன் மூலம் பூரண ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சிக ரமான வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ள முடியும் என்றுள்ளார்.

## சகல சமூகங்களுக்கும் சுபீட்சம் கிடைத்திடட்டும்

**மு.கா பிரதிப் பொருளாளர் யஹியாகான்**

*(கல்முனை விசேட நிருபர்)*



உலகளாவிய ரீதியில் முஸ்லிம் சமூகத் தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அனைத்து அடக்குமு றைகளும் இல்லாதொ ழிய இறைவனிடம் இருக ரம் ஏந்திப் பிரார்த்திப்போம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித் தம் விடுத்துள்ள செய்தியில் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், அனைத்து முஸ்லிம்களுக்கும் ஈதுல் பித்ர் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பலஸ்தீன் மக்கள் அனுபவிக்கும் சொல்லன்னா துயரங்களுக்கு மத் தியில் நாம் இப்பெருநாளை கொண்டாடுகிறோம். அந்த மக்களின் விமோசனத்திற் காக நாம் பிரார்த்திப்பது அவசியம்.

அதேநேரம் நாட்டின் பொருளாதார நெருக் கடி இன்னும் எம்மை விட்டு தூரமாகாத நிலையே காணப்படுகின் றது. அந்த துயரும் நீங்கி, சகல சமூகங்களும் சுபீட்சமாக வாழ இப்புனித பெருநாள் தினத்தில் பிரார்த்திப்போம்.

ரமழான் முழுவதும் நோன்பு நோற்று அல்லாஹ்வின் திருப்பொ ருத்தத்தை பெற்றுக் கொண்ட நாம், அதே பாதையில் எமது எதிர்கால வாழ்க்கை முறையையும் நிலை நிறுத்திக் கொள்வோம் எனவும் தெரி வித்துள்ளார்.

## நோன்புப் பெருநாள் ஒற்றுமையின் திருநாள்

**ஜனாதிபதி குழுவின் உறுப்பினர் ஆனந்தகுமார்**



நோன்புப் பெருநாள் போத னைகளின் ஊடாக நல்லிணக் கத்துடனும் ஒற்று மையுடனும் ஒரு புதிய இலங் கையை உரு வாக்குவோம் என சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியா கத் தீர்வு காண ஜனாதி பதியால் நியமிக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட விசேட குழுவின் உறுப்பினர் சுப்பையா ஆனந்தகு மார் தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாள் நிமித் தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், இறைவனின் திருவசனங் கள் இறங்கிய மாதம் என்பதால் ரமழான் மாதத்துக்குத் தனிச்சி றப்பு உண்டு. ரமழானில் நோன்பு இருப்பது இஸ்லாமியர்களின் ஐம் பெரும் கடமைகளில் ஒன்றாகும்.

ரமழானில் நோன்பு நோற்ப தன் மூலம் இறைவனுக் கும் அடியானுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்த ஒரு தனித்துவ மான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் நோன்பு, அதன் மூலம் உயர்ந்த மனித நற்பண்புக ளையும் ஒழுக்க விழு மியங்களையும் எடுத்து ரைக்கிறது.

பரஸ்பர நல்லிணக்கத்துட னும், மனிதாபிமான நெருக் கத்துடனும் நாம் நடந்து கொண்டால், உலகம் இதனை விட மிகவும் அமைதியானதாக இருக்கும் என்பதில் சந்தேக மில்லை. பல்லின சமூகங்கள் வாழும் இந்நாட்டில், பொருளா தாரம் மேம்பட்டு பிரச்சினை கள் தீர வேண்டுமெனில் இன ஒற்றுமையும், மத நல்லிணக் கமும் மிகவும் அவசியமாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இன ஒற்றுமையை கடைபிடிப்போம்

**சமூக சேவையாளர் இர்சாத் எம். நஸீல் விடுத்துள்ள பெருநாள் செய்தி**



கடந்த முப்பது நாட் களாக நோன்பு நோற்று அதன் மூலம் பெற்ற பயிற் சியைத் தொடர்ந்தும் கடை பிடிப்பதன் மூலமே உன்னத பயனைப் பெற முடியும்.

இலங்கை வாழ் பெரும் பான்மை மக்களுடன் இன ஒற்றுமையை பறைசாற் றும் ஓர் உன்னத பெருநா ளாக இம்முறை ஈதுல் பிதிர் நோன்புப் பெருநாள் அமை கின்றது என்று அமானா வங் கியின் பேருவளை கிளை முகாமையாளரும் சமூக சேவையாளருமான இர்சாத் முகம்மத் நஸீல் விடுத்துள்ள பெருநாள் செய்தியில் குறிப் பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங் கைத் திருநாட்டில் சகல இன மக்களுக்கிடையில் சாந்தி, சமாதானம், சுபீட்சம் ஏற்பட தாம் பிரார்த்திப்பதாக குறிப் பிட்டுள்ளார்.

## நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ பிரார்த்திப்போம்

**கலாநிதி ரூமி ஹாசிம் விடுத்துள்ள பெருநாள் செய்தி**



இலங்கைத் திருநாட் டில் இன ஒற்றுமை, சகோதர பாசம், புரிந்து ணர்வு ஏற்பட எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இப்புனித ஈதுல் பிதிர் நோன்புப் பெருநாள் தினத்தில் தாம் பிரார்த் திப்பதாகவும் இலங் கையில் இனங்களுக்கி டையில் ஒற்றுமையை எடுத்துக் காட்டும் ஒரு பெருநாளாக இதனை கருதுகின்றேன். மூவின மக்களும் ஒன்றாக பெருநாள் கொண்டாடு வது இன ஒற்றுமைக்கு கிடைத்த பெரும் வெற்றி என்று இலங்கை மருந் தாக்க கூட்டுத்தாபனத் தின் முன்னாள் தலைவ ரும் கல்வி, சமூக, சமய பணிகளில் ஈடுபட்டு வரும் ரூமி ஹாசிம் பவுண்டேஷன் தலை வருமான கலாநிதி ரூமி ஹாசிம் விடுத்துள்ள பெருநாள் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவோம்

**சமூக சேவையாளர் அப்ரத் அனீஸ்**

இம்முறை ஈதுல் பிதிர் நோன்புப் பெருநாள் பெரும் மகிழ்ச்சி தருகின்றது. கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து, இவ்வருடம் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் பெருநாள் கொண்டாடுவது இன ஒற்றுமையை, மறு மலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஈதுல் பிதிர் நோன்புப் பெருநாள் வழிவகுக்கின்றது. நாம், இனம், மதம், மொழி என்று பிரிந்து விடாமல் இலங்கையர்கள் என்ற சகோதர பாசத்துடன் வாழப் பழகிக் கொள்வதற்கு சிறந்த தருணமாக இம்முறை ஈத்முபா ரக் பெருநாள் அமைகின்றது என்று சமூக சேவையாளரும் மெட்ரிக்ஸ் மொபைல் உரிமையாளருமான அப்ரத் அனீஸ் விடுத் துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




### ரத்தினமே ரமழானே...!

ஒட்டு மொத்த
ஒவ்வாமைக்கும்
ஒன்றித்த
ஔடதமாய்
ஒளியேற்ற
வந்த ரமழானே...!

கறையுற்ற
கல்நெஞ்சத்தையும்
கரைத்துருக்கும்
கலையழகாய்
கண்தோன்றிய
ரமழானே...!

தகித்த
இதயத்தையும்
தாகித்த
இதழ்களையும்
தணிக்கும்
தடாகமாய்
தரணியடைந்த
ரமழானே...!

அகமும் புறமும்
அழுக்ககற்றிப்
புதுப்பிக்கும்
அரும் ஓடையாய்
அவனி
சேர்ந்த ரமழானே...!


இகபர ஈடேற்றமாய்
இறை வசனம்
சுமந்த திருமறை
இறக்கி
அருளப்பட்ட
இன்ப காலமே
ரமழானே...!

இரவிலும் விழித்து
இச்சைகள் ஒழித்து
இறை
பொருத்தமடைய
இன்பத்தேன்
சுவைக்கிறோம்
ரமழானே...!

மண்ணில் பூத்த
மணக்கும்
மலராய் உனை
மனதோடு
ஆரத்தழுவிட பல
மடங்காய்
நன்மைகள் தருவாய்
ரமழானே...!

பாத்திமா சில்மியா
மாவனல்லை.





# நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

தயாரிப்பு: மர்லின் மரிக்கார்

## உலகில் அமைதி, நிம்மதியான வாழ்வுக்கு பிரார்த்திப்போம்



உலக அமைதிக்கும் எமது தாய்நாட்டின் நிம்மதியான வாழ்விற்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலாவிடம் இந்நன் நாளில் மனமுருகிப் பிரார்த்திப்போம் என்று கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், உலகெல்லாம் ஈதுல் பித்ரை கொண்டாடும் இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு எனது இனிய பெருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். முஸ்லிம்கள் பசித்திருந்து, விழித்திருந்து நோற்ற நோன்பினை அல்லாஹுத்தஆலா பொருந்திக் கொள்ளட்டும். இந்த ரமழான் எமது துயர இருள்களை நீக்கி நாட்டிலே அன்பும், சுபீட்சமும் ஓங்க வழிகாட்டி செல்லட்டும். புனித நோன்பு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுள்ளது. அது எமக்கு இறையச்சம், கருணை, பொறுமை என பல உயரிய குணவியல்புகளை போதித்துச் சென்றுள்ளது.அதேநேரம் எமது புனித மார்க்கமானது அமைதி, இரக்கம், ஒற்றுமை, மனிதநேயம், ஜீவகாருண்யம் ஆகிய உயரிய குணவியல்புகளைப் பெரிதும் போதித்துள்ளது.

ஆகவே ரமழானில் நாம் பெற்றுக் கொண்டபயிற்சிகளையும்செய்துவந்த இபாதத்துக்களையும் தொடர்ந்தும் செய்வதோடு வசதியற்றிருக்கும் எமது சகோதரர்களை இனங்கண்டு தான தர்மங்களை செய்து இறைவனின் நல்லருளைப் பெற்ற நல்லடியார்களாகுவோம்.

## ஏற்றத்தாழ்வுகள் இன்றி மனித நேயத்தை போதிக்கும் ரமழான்



"ஈதுல் ஃபித்ர்" ஈகை பெருநாளை உவகையுடன் கொண்டாடும் இஸ்லாமிய சொந்தங்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த ரமழான் நல்வாழ்த்துக்களை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார் .

நோன்பு பெருநாளின் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், இஸ்லாத்தின் புனித நூலான அல்குர்ஆனில் பரிந்துரைக்கப்பட்டுள்ள வகையில் அனுஷ்டிக்கப்படும் ஒரு மாத கால ரமழான் நோன்பின் மூலம், மத ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் உலகிற்கு மிக முக்கியமான செய்தி வெளிப்படுத்தப்படுகிறது.

மனிதகுலத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் இறைத்தூதர் நபிகள் நாயகம் அருளிய போதனைகளை மனதில் நிறுத்தி, உடலையும், உள்ளத்தையும் ஒருநிலைப் படுத்தி, தூய்மை உணர்வோடு ரமழான் மாதத்தில் நோன்பிருந்து, ஈகையின் சிறப்பினை எல்லோருக்கும் உணர்த்தும் வகையில், ஈட்டிய செல்வத்தில் ஒரு பங்கை ஏழை எளியோருக்கு அளித்து, அனைவரும் இன்புற்று வாழ்ந்திட வேண்டி இறைவனை தொழுது, இஸ்லாமியப் பெருமக்கள் ரமழான் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

எளியோர்க்கு ஈந்து நோன்புக் கடமைகளை நிறைவேற்றி, ரமழான் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்குரிய இஸ்லாம் சமுதாய மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ரமழானில் பெற்ற பயிற்சியை வாழ்வில் தொடர்வோம்



அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட ரமழான் மாதம் எம்மை வந்தடைந்து அதில் நாம் பெற்ற பயிற்சியை வாழ்வில் பின்பற்றி நடப்பதற்கு இந்நன் நாளில் திடசங்கற்பம் பூணுவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், ரமழான் மாதம் மனிதனின் வாழ்க்கைக்குரிய நீண்டதொரு பயிற்சியை வழங்கக் கூடியதாக உள்ளது. அந்தப் பயிற்சியின் ஊடாக இதர காலங்களில் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற பயிற்சியை மனித உள்ளங்களில் அது ஏற்படுத்தியுள்ளது. அதேபோன்று அன்பு, இரக்க சுபாவம், விட்டுக் கொடுப்பு, ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மை போன்ற பண்புகள் வளரவும் வித்திட்டுள்ளது.

அந்த வகையில் நோன்பின் ஊடாக நாம் பெற்ற பயிற்சிகளை தொடர்ந்தும் வாழ்வில் பின்பற்றி நடப்பதற்கு இறைவன் கிருபை செய்ய வேண்டுமென பிரார்த்திப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஈருலகப் பேறுகளைப் பெற்றிட இறைவனிடம் இறைஞ்சுவோம்



மேற்கத்தேய நாடுகள் சிலவற்றின் ஒத்துழைப்புடன் இஸ்ரேல், பலஸ்தீன மக்கள் மீது தொடர்ந்து மேற்கொண்டுவரும், பேரழிவுகளை மையப்படுத்தி அம்மக்களின் விமோசனத்திற்காக அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, இரவும் பகலும் இறை வழிபாடுகளில் அதிகமதிகம் ஈடுபட்டு, இப்புனித மாதத்தை சிறப்பாக வழியனுப்பி வைத்த வேளையில், உள்நாட்டிலும் ,உலக நாடுகளிலும் முஸ்லிம் சமூகத்தினரான நாம் நோன்பு பெருநாளைக் கொண்டாடுகிறோம்.

இலங்கையைப் பொறுத்தவரை ,நாட்டு மக்கள் அனைவருமே முன்னொருபோதும் இல்லாதவாறு பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தனர், வாழ்வாதாரங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வறுமைக்கோட்டின் விளிம்பிற்கே சென்றுள்ளதைக் காண்கின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையில், ஆன்மீக பலத்தை மூலதனமாக வைத்து, நாட்டில் ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அல் குர்ஆன் மற்றும் அல் ஹதீஸ் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் ஈருலகப் பேறுகளை பெறுவதற்கு இத் தினத்தில் அல்லாஹ்விடம் மனம் உருகிப் பிரார்த்திப்போம் என்றுள்ளார்.

## ரமழான் அளித்த பக்குவங்கள் நமது எதிர்காலத்தை உறுதிப்படுத்தட்டும்



முஸ்லிம்களுக்கு எதிரான ஏகாதிபத்திய போக்குகள் தோல்வியுறுவதற்கும் அமைதி, நிம்மதியான வாழ்வு கிடைக்கப்பெற்றிடவும் இறைவனிடம் பிரார்த்திப்போம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், எம் எல்லோரதும் ஹலாலான தேவைகள் நிறைவேறட்டும். அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து நோன்பு நோற்று, நல்லமல்கள் செய்த நாம் பெற்றுக் கொண்டுள்ள ஈமானின் பக்குவத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். நெருக்கடிகள், சோதனைகளின் போது பொறுமை மற்றும் தொழுகையைக்கொண்டு உதவி தேடுவதே சிறந்தது. ரமழானின் பக்குவங்கள் நமது முன்னேற்றப் பாதைகளுக்கு உறுதியாக அமையட்டும். சர்வதேச அளவில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள சவால்களை முறியடிக்க, ஈமானின் பலத்திலும் பக்குவத்திலும் நாம் அணிதிரள வேண்டும்.

பலஸ்தீன மக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய போக்குகள் ஒருபோதும் வெல்லப்போவதில்லை. அந்த மக்களின் விமோசனத்திற்காகவும் பிரார்த்திப்போம். சமூகங்களை நேசிப்பதோடு, சிறுபான்மையினரையும் சம அந்தஸ்தில் அரவணைக்கும் அரசியல்

## பலஸ்தீனில் அமைதி, நிம்மதி ஏற்பட்டிட பிரார்த்திப்போம்



பலஸ்தீன் பூமியில் யூத நஸாராக்களின் அட்டூழியங்களால் உயிரிழந்து, உடமைகளை இழந்து, சொல்லோன்னா துயரங்களை அனுபவித்தபடி பொருளாதார நெருக்கடிகள், கஷ்டங்களுடன் இப்புனிதமிகு காலத்திலும் நிம்மதியிழந்து, துன்பத்தை அனுபவிக்கும் எமது காஸா சகோதரர்களுக்கும், பல்வேறு காரணங்களினால் உலகின் பல பகுதிகளிலும் துயருற்றிருக்கும் அனைத்து மக்களுக்கும் இறைவன் நல்ல சுகத்தையும், நிம்மதியான வாழ்வையும் வழங்கிட வேண்டுமென இறைவனிடம் பிரார்த்திப்போம் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், பாவங்கள், தீயன விலக்கி நல்லமல்களின் ஊடாக இறைவனுடன் தொடர்புபட்ட சிறந்த மாதமான ரமழான் எம்மை விட்டு பிரிந்து சென்றுள்ளது. என்றாலும் இஸ்லாமிய வழிகாட்டல்கள் படி நோன்புப்பெருநாளை நாம் கொண்டாடுகிறோம். இப்பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே நிலைபேறான ஒற்றுமை, புரிந்துணர்வு ஏற்பட்டிடவும் சகலருக்கும் நிம்மதியானதும் சந்தோசமானதுமான வாழ்வு கிடைக்கப்பெற்றிடவும் நாட்டின் பொருளாதாரம் வளம் பெறவும் இறைவனிடம் பிரார்த்திப்போம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அனைத்து மக்களுக்கும் அமைதி, மகிழ்ச்சியை அளிக்கும் நாளாகட்டும்



உறவுமுறை, சமாதானம் ஆகியவற்றின் பிணைப்பை புத்துயிர் பெறச்செய்வதற்கும், ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மை மற்றும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கும் இந்நன் நாள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், அருள் நிறைந்த ஈதுல் பித்ர் திருநாளில், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈத் அல்பித்ர் திருநாள் என்பது மன்னிப்பு, அன்பு மற்றும் இரக்கத்திற்கான நாளாகும். இக்குணாதிசயங்கள் தான் இஸ்லாத்தின் அடிப்படை. ஈத் என்பது மகிழ்ச்சி மற்றும் கொண்டாட்டத்தின் நாள். அயலவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருடனும் சமாதானம் பேண வேண்டிய நாள்.

இந்த மங்களகரமான சந்தர்ப்பம், உறவுமுறை, சமாதானம் ஆகியவற்றின் பிணைப்பை புத்துயிர் பெறச்செய்வதற்கும், ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை மற்றும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கிறது. இந்நன்நாள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார். ஈத் முபாரக்!

## இஸ்லாத்தின் உரிய தன்மைகளை உலகறிய செய்திட உழைப்போம்



அருள்பொழிந்த புனித மாதத்தில், நாம் செய்த நல்லமல்கள் இன்னும் இதர நற்செயல்களை எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலா பொருந்திக் கொள்ள பிரார்த்திப்போம் என்று முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், நோன்பு என்பது ஒரு முஸ்லிமை இறைநம்பிக்கையில் புடம்போட்டு அவனது ஈமானை பட்டை தீட்டுகிறது. நோன்பின் மகத்துவம் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்கள். இந்த பெறுமதிமிக்க புனித மாதம் எம்மைக் கடந்து விட்டது. என்றாலும், இம்மாதத்தில் நாம் பெற்ற ஈமானியப் பயிற்சிகளூடாக ஏனைய மாதங்களை கழிப்பதற்கு வல்ல நாயன் எமக்கு அருள்பாலிக்கட்டும்.

அத்தோடு நமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்கிடவும் நாம் பிரார்த்திக்க வேண்டும். மக்கள் எல்லோரும் அனுபவிக்க நேர்ந்துள்ள இந் நெருக்கடிக்கு கட்சி,அரசியல் என்ற பேதமின்றிப் பிரியாமல், கூட்டாகப் பணியாற்றி எமது மக்களின் துயர் போக்க சகலரும் முன்வர வேண்டும். இந்த மனநிலைகள் ஏற்படுவதற்காகவும் நாம் பிரார்த்திப்பது அவசியம். அனைத்து முஸ்லிம்களுக்கும் நோன்பு பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றுள்ளார்.

## பெருநாள் கொண்டாட்டங்களில் சமூக உறவுகள் ஐக்கியப்படட்டும்



புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம்களை அல்லாஹ் பொருந்திக்கொள்ள பிரார்த்திப்போம் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், ரமழானின் ஆத்மீக பக்குவங்கள் முஸ்லிம்களின் வாழ்க்கை கட்டமைப்பை பலப்படுத்தும். நாலாபுறமும் சந்திக்க நேர்ந்துள்ள சவால்களை தோற்கடிக்க ஹலாலான சிந்தனைகள் துணைபுரியும். ஈமானின் பக்குவத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது அவசியம். அல்லாஹ்வின் திருப்தியை அடிப்படையாகக்கொண்ட நமது இலட்சியங்களில் குறுக்கிட எவரையும் அனுமதிக்கலாகாது. பெருநாள் கொண்டாட்டங்களின்போது, வீண்சர்ச்சைகள் எழுமளவுக்கு நடந்து கொள்ளக் கூடாது. சமூக உறவுகள் ஐக்கியப்படட்டும்.

சிறுபான்மையினரைக் கௌரவிக்கும் அரசியல் கோட்பாடுகளைப் பலப்படுத்துவதே எமது நோக்கம். அதளபாதாளத்தில் விழுந்திருந்த நாட்டின் பொருளாதாரம் மீட்சிபெற்று, மக்களின் வாழ்க்கை சுமூகமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் ஒளிக்கீற்று தென்படுகிறது. கடந்த காலங்களைப் போலின்றி அச்சங்கள், கஷ்டங்கள் மற்றும் பாதுகாப்பின்மைகளில் இருந்து நாம் மீட்சி பெற்றுள்ளோம். நாட்டின் தற்போதைய ஸ்திரமான சூழலால் மக்கள் நிம்மதியுடன் வாழத் தொடங்கியுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியாக பெருநாளைக் கொண்டாட நாம் இறைவனைப் பிரார்த்திப்போம் என்றுள்ளார்.

## நோன்பு அளித்திருக்கும் பயிற்சியை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்போம்



ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு பெற்றுக்கொண்டுள்ள உடல், உளப் பயிற்சியை வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தொழுக இந்நன்நாளில் உறுதி கொள்வோம் என்று பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் பௌஸான் அன்வர் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், நோன்பு பெருநாளைக் கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். பெருநாள் என்பது மகிழ்ச்சிக்குரிய நாளாகும். ஆனாலும் எமது பலஸ்தீன சகோதரர்கள் இஸ்ரேல் முன்னெடுக்கும் யுத்தம் காரணமாக அனுபவிக்கும் துன்ப துயரங்கள் மிகவும் கொடுமையானவை. வேதனைகள் நிறைந்தவை. அதனால் அவர்கள் முகம் கொடுத்துள்ள யுத்த கொடூரம் விரைவில் முடிவுக்கு வந்திடவும் அவர்களுக்கு அமைதி நிம்மதியான வாழ்வு கிடைக்கப்பெற்றிட இந்நன்நாளில் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

அதேநேரம் இந்நாடு மிகவும் வளம் மிக்கது. இருந்த போதிலும் இந்நாட்டின் பெறுமதியையும் சிறப்பையும் புரிந்து கொள்ளாமல் செயற்பட்டதன் விளைவாகவே இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டது. என்றாலும் தற்போது நாடு மீட்சி பெற்று வருகின்ற போதிலும் நிலைபேறான முன்னேற்றப்பாதையில் பயணித்திடவும் இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்திடவும் அல்லாஹ்விடம் இறைஞ்சுவது மிகவும் அவசியமானது என்றுள்ளார்.

## பலஸ்தீன், காஸா மக்களுக்கு நல்வாழ்வு கிடைத்திடட்டும்



சொல்லன்னா துன்பங்களை அனுபவிக்கும் பலஸ்தீன், காஸா மக்களின் நல்வாழ்வுக்காக ஒன்றிணைந்து பிரார்த்திப்போம் என கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் எம். எஸ். சுபைர் குறிப்பிட்டுள்ளார்.

நோன்புப் பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், பலஸ்தீன், காஸா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களினால் பல்லாயிரக்கணக்கான சிறுவர்களும் அப்பாவி மக்களும் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

ரமழான் காலத்திலும் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான தாக்குதல்களினால் அந்த மக்களின் இயல்பு வாழ்வே கேள்விக்குறியாகியுள்ளது. உண்பதற்கு உணவின்றி, நிம்மதியாக உறங்க முடியாமல் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற அம்மக்கள் இறைவனின் உதவியினை மாத்திரமே நம்பியுள்ளனர்.

அவர்களது நல்வாழ்வுக்காகவும், நிம்மதிக்காகவும் நாமனைவரும் இரு கரமேந்தி இறைவனைப் பிரார்த்திப்போம்.

அத்தோடு ரமழானில் இறையச்சத்துடன் நோன்பு நோற்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு, ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றுள்ளார்.

## பலஸ்தீனியர்களின் துன்பங்கள் நீங்கிடப் பிரார்த்திப்போம்



நாம் சந்தோஷமாக பெருநாளை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எமது பலஸ்தீன உறவுகள் முகம் கொடுத்துள்ள துன்ப துயரங்கள் முடிவுக்கு வந்திடவும் ஈடேற்றமும் நிம்மதியான வாழ்வும் அவர்களுக்கு கிடைத்திடவும் இந்நன்நாளில் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம் என்று கொழும்பு, அல் ஹிக்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷேய்க் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி தெரிவித்துள்ளார்.

ஈதுல் பித்ர் பெருநாளின் நிமித்தம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கும் அவர், இலங்கை உட்பட உலக முஸ்லிம்களுக்கும் குறிப்பாக பலஸ்தீன உறவுகளுக்கும் நோன்பு பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புனித ரமழான் எம்மை வந்தடைந்ததும் நோன்பு நோற்று, இரவு வணக்கங்களில் ஈடுபட்டு, குர்ஆன் திலாவத், ஸதகாக்கள், தான தர்மங்கள் என்று நல்லமல்கள் செய்து நன்மைகளைக் கொள்ளை அடித்த நாம், இப்போது பெருநாளைக் கொண்டாடுகிறோம். ரமழான் அல்லாஹ்வின் அருள் நிறைந்த மாதம். இம்மாதத்தில் நோன்பு நோற்று இரவு வணக்கங்களில் ஈடுபட்டு நல்லமல்கள் தர்மங்கள் செய்து அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைந்து கொள்பவர்கள் பெரும் பாக்கியசாலிகளாவர்.

வருடத்தில் பதினொரு மாதங்கள் பகல் காலங்களில் சாப்பிடவும் பருகவும் எமக்கு சந்தர்ப்பமளித்த அல்லாஹ், அவனுக்காக ஒரு மாதம் பசித்திருந்து தாகித்திருந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு அவனது நெருக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ரமழான் மூலம் நமக்கு அளித்துள்ளான். இதன் ஊடாகப் பெற்றுக்கொண்ட இறையச்சத்தையும் உடல், உளப் பயிற்சியையும் வாழ்நாள் முழுவதும் எடுத்து நடந்திட இந்நன்நாளில் திடசங்கற்பம் பூணுவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



# நோன்புப் பெருநாள் சிறப்ப மலர்

தயாரிப்பு: மர்லின் மரிக்கார்

## நோன்புப் பெருநாள்

பசித்திருந்து பலன்பெற்றோம் பெருநா ளென்று.
பாக்கியமே பாக்கியமே பாக்கியந்தான்.
புசிக்காத தொன்றுமட்டும் இல்லை இன்னும்
பவமொன்றுஞ் செய்யாதே மனத்தைக் காத்தோம்
நிசியுறக்கந் தவிர்த்தெழுந்து நிலையில்நின்று
நித்தியனைத் தொழுதிறைஞ்சி பாவந் தீர்க்கக்
கசிந்துருகிப் பிரார்த்தித்தோம் தலைவா எம்மைக்
கொடுநரகந் தவிர்த்துச்சுவன் தருவாயென்றே!

இரப்பவர்க்கு இல்லையென்னா(து) அருளும்
வல்லோன்
ஏந்துகரம் விடுவதில்லை வெறுமையாக
சுரந்துகொண்டே இருக்குமவன் அருட்சுனையின்
செல்வத்தை அள்ளியள்ளிக் கொட்டிச் சேர்ப்பான்
பரிந்துரைகள் வேண்டாங்காண் பண்ணவன்பால்
பரிசுபெறப் படைத்தெம்மைக் காக்கும் வல்லோன்
சிரம்பணியும் அனைவருக்கும் ஒன்றேபோல
தனதருளைப் பொழிவானோர் ஐயம் இல்லை!

தக்பீரின் முழக்கமெல்லாப் பள்ளி தோறும்
செவியினிக்கப் பேரொலிக்கும் பெருநாட் காலம்
திக்கெல்லாம் காற்றள்ளிச் செல்லும் மக்கள்
செய்தபவம் அழிந்தமனத் திருப்தி கொள்வார்
சொர்க்கத்தின் வாடைநெஞ்சுள் மணக்கும்
வல்லோன்
தரு–வனெனச் செப்பியதால்
தீனோர் தீனின்
பக்கலினி நாமென்–
னும் ஓர்மை–
கொள்வார்
பற்றியநற் கருமங்–
கள் தொடருவாரே!



ஜின்னாஹ்

## ஈகையையும் சமூக ஒற்றுமையையும் பறைசாட்டும் ஈகைத் திருநாள்

உலகெங்கிலுமுள்ள சுமார் இரண்டு பில்லியன் முஸ்லிம்கள் தங்களது ஆன்மீக மேம்பாட்டிற்காக உடலாலும் உள்ளத்தாலும் பொருளாலும் நோன்பு நோற்று, குர்ஆன் திலாவத் செய்து, திக்ர்களில் ஈடுபட்டு ஸகாத், ஸதகாக்களை வழங்கி இரவு வணக்க வழிபாடுகளையும் மேற்கொண்டு அல்லாஹ்வின் அன்பையும், மன்னிப்பையும் நரக விடுதலையையும் ஆதரவு வைத்து நோன்பைப் பூர்த்தி செய்துவிட்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துமுகமாகவும் அவனைப் பெருமைப்படுத்தும் நோக்கிலும் ஈதுல் பித்ர் திருநாளை கொண்டாடுகின்றனர்.

என்றாலும் நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த முறைப் பிரகாரம் பெருநாளைக் கொண்டாட வேண்டும். பெருநாளுடைய (ரமழான் மாதம் முடிந்து) ஷவ்வால் மாதத் தலைப்பிறைக் கண்டதும் ஸகாத்துல் பித்ரைக் கொடுக்க வசதியுள்ளவர்கள் (தனக்கும் தனது பொறுப்பில் உள்ளவர்களின் பெருநாளுடைய தேவைக்கு மேலதிகமாக உள்ளவர்கள்) மீது கடமையாகின்றது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஸகாத்துல் ஃபித்ர் நோன்பாளியிடமிருந்து நிகழ்ந்த வீணான செயல்கள் மற்றும் தீய வார்த்தைகளுக்கு குற்றப்பரிகாரமாகவும் ஏழைகளுக்கு உணவாகவும் அமைகின்றது.' என்று குறிப்பிட்டார்கள்.

ஸகாத்துல் ஃபித்ரை நிறைவேற்றும் நேரம் ஷவ்வால் பிறைக் கண்டதிலிருந்து ஆரம்பமாகும். இதனை பெருநாள் தொழுகைக்கு முன் கொடுப்பது சுன்னத்தாகும். ஆனால் பெருநாள் தொழுகையை விட அதனைப் பிற்படுத்துவது மக்ரூஃவாக அமைவதோடு பெருநாள் தின (சூரிய அஸ்தமனத்தை) விட அதனைப் பிற்படுத்துவது ஹராமாகவும் மாறிவிடும். அதேநேரம் ரமழான் மாத பிறை கண்டதிலிருந்து பேணுதலுக்காக அதனை நிறைவேற்றி வருபவர்களும் உள்ளனர். இதுவும் அனுமதிக்கப்பட்ட ஒன்றே.

ஈகைத் திருநாளைப் பொறுத்தவரை தொழுகைக்கு முன்பு உண்டுவிட்டு நேரகாலத்தோடு பெருநாள் தொழுகையை



நிறைவேற்றச் செல்வது சுன்னத்தாகும்.

பெருநாள் தொழுகை வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னா (ஸுன்னா முஅக்கதா). பெருநாள் தொழுகையை நிறைவேற்றும் சிலர் பெருநாள் குத்பா பிரசங்கத்தை கேட்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. பெருநாள் தொழுகை ஒரு ஸுன்னா முஅக்கதாவாக இருப்பது போலவே பெருநாள் குத்பாவைக் கேட்பதும் ஒரு ஸுன்னா முஅக்கதாவே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெருநாள் தினத்தில் சந்திக்கக்கூடியவர்கள் தங்களுக்கு மத்தியில் 'தகப்பலல்லாஹு மின்னா வமின்கும்' என்று துஆ செய்து வாழ்த்து தெரிவித்தல் அவசியமானது.

பெருநாள் தினங்களில் அதிகமதிகம் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் சொல்ல வேண்டும். அதுவும் முக்கிய ஸுன்னாக்களில் ஒன்றாகும். குறிப்பாக ஈதுல் பித்ரைப் பொறுத்தவரை ஷவ்வால் மாதத் தலைப்பிறைக் கண்டதிலிருந்து தொழுகையை நிறைவேற்றும் வரை தக்பீர் சொல்வது ஸுன்னாவாகும். அதேபோன்று அதிகமதிகம் பிரார்த்தனைகளிலும் ஈடுபட வேண்டும்.

பெருநாள் தினத்தில் அவசியமான செலவுகளைப் போதுமாக்கிக் கொள்வதோடு ஏழைகள், சிரமத்திலுள்ளவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் போன்றோருக்கு தர்மங்களை வழங்கவும் முயற்சிப்பதும் சிறப்பானது.

அதேநேரம் உற்றார் உறவினரை அரவணைப்பது, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது, அவர்களுடனான உறவைப் பலப்பலப்படுத்திக் கொள்வது, பகைமைகள் இருப்பின் அவற்றை அல்லாஹ்வுக்காக மன்னித்து உறவைப் புதுப்பித்துக் கொள்வது போன்ற உன்னத செயற்பாடுகளின் மூலம் அல்லாஹ்விடம் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, எமது பெற்றோர், சகோதர, சகோதரிகள் உட்பட இரத்த உறவினர்களுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்வதற்கு ஈதுல் பித்ர் ஈகைத் திருநாளை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளத் தவறலாகாது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'குடும்ப உறவை முறித்துக் கொண்டவன் சுவனம் நுழைய மாட்டான்' என்று எச்சரித்துள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

மனிதர்கள் தவறிழைக்கக் கூடியவர்கள், பலவீனமானவர்கள் என்பதனால் நாம் எமது வீட்டில், காரியாலயத்தில், ஊரில் சக மனிதர்களோடு உறவாடுகின்றபோது ஒரு சிலரோடு பகைமை, அதிருப்திகள் ஏற்பட்டிருக்கலாம். இவற்றையெல்லாம் போக்கிக் கொள்வதற்கான அரியதொரு சந்தர்ப்பமாக இத்தினத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் உலகில் இரண்டு விடயங்களை அடிப்படைத் தேவையாகக் கருதுகிறான். அவற்றில் ஒன்று, நீண்ட ஆயுள் மற்றையது தன்னுடைய வாழ்வாதாரத்தில் பரகத் என்பனவாகும். இரத்த உறவைப் பேணி வாழ்ந்தால், தன் குடும்பத்தினருடன் நெருக்கமான உறவைப் பேணி வாழ்ந்தால் சுகமாக வாழலாம், நீண்ட ஆயுளைப் பெறலாம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் இலங்கை பல்லின சமூகத்தவர்கள் வாழும் ஒரு திரு நாடாகும். அதனால் இங்கு வாழும் ஏனைய சமயத்தவர்களின் உணர்வுகளை மதித்து செயற்படுவது எமது பொறுப்பாகும். குறிப்பாக நாம் பெருநாளை கொண்டாடும் போது அவர்களுடைய உணர்வுகள் புண்படுகின்ற அளவுக்கு நடந்து கொள்ளக்கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்த்து கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பெருநாளின் ஊடாக சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் மேலும் மேம்படுத்துவதிலும் சிரத்தை எடுத்துக்கொள்வது நல்லது.

அதேநேரம் பெருநாள் தினத்தில் அண்டை அயலவர்களுக்கு நாம் அதிகம் உபகாரம் செய்ய வேண்டும். அவர்கள் முஸ்லிம்களாகவோ முஸ்லிமல்லாதவர்களாகவோ இருக்கலாம். அவர்களைச் சந்தித்தல், அவர்களுக்கு உணவுப் பண்டங்களைக் கொடுத்தனுப்புதல் போன்றவற்றை மேற்கொள்ளல் என்பன சிறந்த செயற்பாடுகளாகும். இவற்றின் ஊடாக சாந்தியும் சமாதானமும் ஐக்கியமும் நிலவக்கூடிய சமூகத்தை கட்டியெழுப்ப வல்ல அல்லாஹ் அருள் புரியட்டும்.

அஷ்ஷேக் ஏ.எச்.எம் மின்ஹாஜ் முப்தி
(காஷிபி, மழாஹிரி)
நிந்தவூர்

## அல்லாஹ்வின் அருள் பெறச் செய்த ரமழான்

ஓ.. புனித ரமழான் மாதமே..!
நீ.. எம்மிடமிருந்து
விடை பெற்றுச் செல்கி–
றாயா...?
உனது மாட்சிமை மிக்க
மகிமையால்...!
இன்று நாம்
உவகையுடன் "ஈத்" பெரு–
நாளைக்
கொண்டாடுகிறோம்...!
புனித ரமழானே..
உனது வருகையால்
நாம் அளவிலா ஆனந்தம்
கொண்டோம்...!
நீ பிரிந்து செல்வதினால்
பெரும் வேதனை அடைகி–
றோம்...!
ரமழான் காலத்தில்..
அல்லாஹ்வின் அருள்
பெறச் செய்தாய்..!
அனுதினமும் நம்மை
தொழச் செய்தாய்..!
அருள் மழையைப் பொழியச்
செய்தாய்...!
அருட் கொடைகளை
அள்ளித் தந்தாய்..!
ஆசைகளை அடக்கி
வைத்தாய்..!
பொய் புறங்களை நீக்கி
வைத்தாய்..!
ஷெய்த்தானை
விலங்கிடச் செய்தாய்..!
சேஷ்டைகளை நீக்கி
வைத்தாய்..!
"ரய்யான்" சொர்க்கம் நமக்–
கென்றாய்...!
நன்மை தீமை எதுவெனப்
புரிய வைத்தாய்..!
நாற் திசையும் புகழோத
வைத்தாய்..!
நபிகள் புகழ் பாட
வைத்தாய்..!
பக்குவமாய் நம்மை இருக்க
வைத்தாய்..!
ஓ..புனித ரமழான் மாதமே...!
நீ...எம்மை விட்டும்
பிரிந்தாலும்...!
உன் நினைவில் என்றும்
நாம் இருப்போம்...!
உனக்காக வரும் வருடம்
காத்து நிற்போம்...!
உன் வரவை
உவகையுடன்
எதிர் பார்த்திருப்போம்...!
நீ.. எம்மில் வந்து
நன்மைகளையும்
அருள் பாக்கியங்களையும்
மீண்டும் அள்ளித்தா...!



பாத்திமா ரம்ளா காதிர் கான்
மினுவாங்கொடை.

## மகத்துவமிக்க ஈகைத்திருநாள்

வான் வெளியில் ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறை தோற்றமளித்த கணம் முதல் உலகெங்கும் எதிரொலிக்கும் அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கம் முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு செலுத்தும் நன்றி உணர்வின் வெளிப்பாடாக அமைகின்றது.

அல்லாஹுத்தஆலா எங்களுக்கு ஏற்படுத்திய அருட்கொடைகளில் ஒன்றே இரு பெருநாள் தினங்களாகும். அவற்றில் ஒன்று நோன்புப் பெருநாள் மற்றையது ஹஜ்ஜுப் பெருநாள் ஆகும். இப்பெருநாட்கள் மிக முக்கியமான இரு வணக்கங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. நோன்புப் பெருநாள் தம்மீது கடமையான நோன்புக்குப் பின் கொண்டாடப்படும் ஒரு பெருநாள். ஹஜ் பெருநாள் என்பது ஹஜ் வணக்கத்தை மையமாக வைத்து கொண்டாடப்படும் பெருநாளாகும்.

பெருநாள் பிறை தென்பட்டதும், உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உற்சாகம் பெருவெள்ளமாகப் பெருகி மகிழ்ச்சி நதி வீதியெங்கும் ஓடும். பசித்திருந்த வயிறுகளில் பால்சுரக்கும். விழித்திருந்த விழிகளில் ஒளி பிறக்கும். ஸக்காத்துல் பித்ர்' எனும் பெருநாள் தர்மத்தை முஸ்லிம்கள் வழங்கத் தொடங்குவர். ரமழான், மாதம் முழுவதும் நோன்பு என்னும் உபவாசத்தை மேற்கொண்டவர்கள் தம் நோன்பை பூரணப்படுத்தும் வகையில் ஸக்காத்துல் பித்ர் எனும் இக்கட்டாய ஈகையை நிறைவேற்ற வேண்டும். நோன்பு நோற்ற அனைவர் மீதும் அவர்களின் பொறுப்பிலும் பராமரிப்பிலும் உள்ள சிறுவர்கள், குழந்தைகள் மீதும் இவ்வீகை கடமையாகும்.

நமது நாட்டில் நாம் பிரதான உணவாகக் கொள்ளுகின்ற அரிசியில் இருந்து ஒருவருக்கு சமமாக இரண்டரை கிலோ வீதம் இதனை ஏழைகளுக்கு வழங்க வேண்டும். நோன்பு நோற்றவர்கள் பெருநாள் தொழுகைக்குச் செல்ல முன் இதனை நிறைவேற்றியே ஆக வேண்டும்.

முஸ்லிம்கள் ரமழான் மாதத்தைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறை தென்பட்டதும்



நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவர். ஒரு மாத காலமாக இறைவன் கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்து பசித்திருந்தும், தாகித்திருந்தும், புலன்களைக் கட்டுப்படுத்தி நோன்பு நோற்ற முஸ்லிம்கள் தம்கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சியையும், களிப்பையும் இப்பெருநாள் தினத்தன்று பெறுவர்.

ரமழானின் சிறப்பைப் பற்றி இறைவன் குறிப்பிடும் போது, இம்மாதம் பூத்துக் குலுங்கும் புண்ணியங்கள் நிறைந்த வளமான மாதம், மக்களுக்கு நேர்வழிகாட்டக்கூடிய திருமறை இறக்கப்பட்ட புனித மாதம், மனித உள்ளத்தை தூய்மைப்படுத்தி ஏழை பணக்காரன், உயர்வு தாழ்வு, போன்ற வித்தியாசமற்ற பொறுமையின் மாதம் என்றெல்லாம் கூறுகின்றான். 'நோன்பு எனக்குரியது, நான்தான் அதற்கு கூலி கொடுப்பேன்' என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

புனித ரமழான் எமது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆத்மாவுக்கும் சிறந்த பயிற்சிகளை வழங்கியது. அப்பாசறையிலே நாம் பெற்ற பயிற்சி எமது வாழ்நாள் முழுவதும் நீடித்து மணம் பரப்ப வேண்டும்.

குறிப்பாக தம்மீது கடமையான நோன்பு ஒரு முஸ்லிமுடைய புலனடக்கத்தையும், மனக்கட்டுப்பாட்டையும் உருவாக்கும் சிறந்த ஆன்மீகப் பயிற்சியாக உள்ளது. நோன்பின் அடிப்படை நோக்கம் வெறுமனே பசித்திருப்பதும் தாகித்திருப்பதுமன்று. இப்பயிற்சியின் மூலம் இறையச்சத்தை தன்னில் வளர்த்துக் கொள்வதேயாகுமென அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது.

ரமழான் நோன்பு கற்றுத்தரும் ஆன்மிக விழுமியங்கள், ஒழுக்கப் பண்பாடுகள், உயர் முன்மாதிரிகள் பெருநாளிலும் அதனைத் தொடர்ந்துவரும் நாட்களிலும் பின்பற்றப்பட வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். நபி (ஸல்) அவர்கள் திடலுக்குச் சென்றதும், தொழுகை நடத்துவார்கள். பின்னர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அதன் பிறகு தோழர் பிலால் (ரழி) அழைத்துக் கொண்டு பெண்கள் பகுதிக்குச் சென்று தர்மம் செய்வதை வலியுறுத்தி உரை நிகழ்த்துவார்கள். பெண்கள் தர்மம் செய்வார்கள். பின்னர் அனைவரும் இல்லம் திரும்புவார்கள்.

இப்பெருநாள் தினங்களில் ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் சிறந்த வழிகாட்டல் உள்ளது. அவ்வழிகாட்டல்கள் படி பெருநாள் தினத்தை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். ஆகவே ரமழானில் நோன்பு நோற்று அரிய பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டுள்ள நாம் நபி வழியில் ஈகைத்திருநாளைக் கொண்டாடி இறை திருப்தியையும் அருளையும் ஈருலகப் பேறுகளையும் பெற்றிட முயற்சிப்போம். 'ஈத் முபாரக்'.

றிப்கா அன்ஸார் – அதிபர்
சாய்ந்தமருது

## பாவம் மன்னிக்கப்பட்ட பெருந்தகைகள்

கண்விழித்து கவலை
மறந்து
நோன்பு நோற்றோம்
கார் நிசியில் எழுந்து தினம்
தஹஜ்ஜுத் தொழுதோம்
தெளபாவும் நாட்கணக்கில்
செய்து வந்தோம் நல்ல
பேரருள் கிடைக்க
அழுது மன்றாடினோம்...

ஸகாத்தும் ஸதகாவும்
அள்ளி வழங்கினோம்
சங்கை மிகு நோன்பும்
நோற்று
பெருநாளும்
கொண்டாடுகிறோம்
காலமெல்லாம் நாம்பெற்ற
தக்வா பயிற்சி
கலங்கரை விளக்காக
திகழ வேண்டும்...

பாவம் மன்னிக்கப்பட்ட
பெருந்தகை நாம்
பாரினிலே இனி நாமும்
புனிதரானோம்
இனி நாமும் பாவமுமே
செய்யமாட்டோம்
பேரன்பு அல்லாஹ்வை
பிரியமாட்டோம்...

அடுத்த வருடம்
நாமிருப்போம்
நிச்சயமில்லை
ஆண்டவனே என்பி–
ழையை
பொறுத்திடுவாயே
நோன்புக்கு நீவழங்கும்
கூலியை
நிறைவாக
தந்துவிடு
யா ரஹ்மானே...



தோப்பூர்.எஸ் சிறாஜுதீன்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்
(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## இறைசிந்தனையுடனான மகிழ்ச்சிக்குரிய நாள்

அல்லாஹுத்தஆலா எமக்களித்த மாபெரும் அருளின் காரணமாக ஒரு மாத காலம் நோன்பு இருந்து விட்டு புனித ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாளை கொண்டாடுகிறோம். இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலக முஸ்லிம்களும் ஒரு மாத காலமாக பகற்காலங்களில் பசித்திருந்தும் இரவு வேலைகளில் விழித்திருந்தும் இறை வணக்கத்தில் ஈடுபட்டிருந்த ரமழான் எம்மை விட்டு பிரிந்ததும், புனித நோன்புப் பெருநாளை கொண்டாடிக் கொண்டிருக்கும் பொன்னான நாள் இது.

பெருநாள் என்பது இறைவனை நினைவு கூறும் புனித திருநாள். இது மிக மகிழ்ச்சியாக இருக்கும் வேளையிலும் இறைவனை தொழுதே அந்நாளைத் தொடங்குகிறார்கள்.

அல்லாஹ் தங்களுக்கு அருளியவைகளை நினைவு கூறும் வகையில் அவனைத் தொழுது, அவனது திருநாமத்தைப் போற்றி புகழ்கின்றோம். அது மட்டுமல்லாது மண்ணறை வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் தம் உற்றார் உறவினர்களையும் நினைவு கூர்ந்து அவர்களது ஆத்மா நலனுக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகிறார்கள். வறிய மக்களுக்கு உதவுகிறார்கள். துன்பங்களில் உழல்பவர்களுக்கு கருணை காட்டுகிறார்கள். நோயுற்றவர்களை சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார்கள். எம்மைப் பிரிந்து வெளிநாடுகளில் உள்ள நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி அவர்களை எண்ணிப்பார்க்கிறார்கள். இவ்வாறு நினைவு கூறும் நாளாக ஈத் பெருநாள் விளங்குகின்றது. மேலும் நல்வாழ்த்துக்களை பரிமாற்றிக்



கொள்ளல் மூலம் இணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் வலிமையாக்கிக் கொள்ளல், பகைமை களைந்து உற்றார் உறவினர்களை சந்தித்து உறவுகளை பலப்படுத்திக் கொள்ளல் அண்டை, அயலவர்களுடன் பரஸ்பரம் அன்பைப் பரிமாறிக் கொள்ளல். பகை கொண்ட உள்ளங்களை சேர்த்து வைத்தல், பெற்றவர்களை மனம் குளிரச் செய்தல் போன்ற நற்செயல்கள் மூலம் இந் நந்நாளை அலங்கரிப்பதை இஸ்லாம் வரவேற்கின்றது.

மேலும் பெருநாள் தினத்தில் எமது உற்றார் உறவினர்கள், இனபந்துக்கள் போன்றோரை அரவணைத்து, ஆதரிப்பது அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவது, அவர்களுடன் உறவைப் பலப்படுத்திக் கொள்வது, பகைகளை களைத்து கொள்வது போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்தி உன்னத கூலியை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். குடும்ப உறவை முறித்துக் கொண்டவன் சுவனம் நுழைய மாட்டான். என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டுமாயின் மற்றும் வாழ்வாதாரத்தில் பரக்கத் கிடைக்க வேண்டுமாயின் இனபந்துக்களை சேர்ந்து, அவர்களோடு நெருக்கமான உறவை பேணி வருவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய இப் புனித பெருநாளை அதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்வது சிறப்புடையது.

அண்டை வீட்டாருடனான உறவு தொடர்பில் மிக இறுக்கமான கொள்கையை கடைபிடிக்கும் மார்க்கம் இஸ்லாம் அண்டை வீட்டார் என்ற பதம் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் என்று வேறுபடுத்தப்பட்டு இல்லை. கொண்டாடப்படும் இப் பெருநாளில் அண்டை வீட்டார் மீது அதிகம் கவனம் செலுத்துவது அவசியம்.

அன்பு, சகோதரத்துவம், சகிப்புத் தன்மை, இன நல்லிணக்கம் போன்ற பண்புகளால் மக்களிடையே சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக இப்பெருநாளை எடுத்துக் கொள்வது அவசியம். ஒரு முறை யூதர் ஒருவரின் பிரேதம் ஒன்று வீதியில் சென்ற போது நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். அது யூதனின் சடலம் அல்லவா என்று குறிப்பிடப்பட்ட போது அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அது ஓர் ஆத்மா அல்லவா' என விளக்கமளித்தார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) இவ்வாறு நபி ( ஸல் ) அவர்கள் பிற மதத்தவர்களை மதித்து நடந்திருக்கிறார்கள்.

இத் தினத்தில் எம்மை விட்டு பிரிந்து மண்ணறை வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள், இனபந்துக்கள், உற்றார் உறவினர்கள், அயலவர்கள், மற்றும் நண்பர்கள் அனைவரது கப்ருகளை சியாரத் செய்து அவர்களுக்கு ஸலாம் கூறி அவர்களுக்கு பிரார்த்தனை செய்வது முக்கிய விடயமாகும். குறிப்பாக பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், மஹ்ரமான ஆண்கள் பெண்கள், ஆசிரியர்கள் உஸ்தாத்மார்கள் மற்றும் நண்பர்களோடும் முஸாபஹா செய்து எமது பெருநாள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் உறவை பலப்படுத்திக் கொள்ள முடியும். ஈத் முபாரக்

எம்.யூ.எம்.வாலிஹ்
(பாரி, அல்– அஸ்ஹரி)
வெலிகம

# இலண்டனில் 'தமிழ் நிலைய மாலை'





இலண்டனில் இயங்கி வரும் தனித்துவமான பாடசாலைகளில் ஒன்றான இலண்டன் தமிழ் நிலையப் பாடசாலையின் வருடாந்த 'தமிழ் நிலைய மாலை' நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மிகக் கச்சிதமான திட்டமிடலுடன் ஆரம்பமாகி நிகழ்வுகள் யாவும் தரமானதாக அமைந்து சபையோரை இரசிக்க வைத்தன. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பாடசாலைக் கீதம் இசைத்து நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தது பாராட்டுதற்குரியதாகும். வாத்தியக்கதம்பம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், சுரத்தட்டு, பரதநாட்டியம், கவிதாநிகழ்வு ஆகிய நிகழ்வுகள் பாடசாலை ஆசிரியர்களின் கடுமையான உழைப்புடன் மேடையேறின.

வீணை ஆசிரியைகளான ஸ்ரீமதி சிவதாரணி சகாதேவன், செல்வி ஜெசிக்கா நித்தியானந்தா, வாய்ப்பாட்டு ஆசிரியைகளான ஸ்ரீமதி சயனி தியாகநாதன், ஸ்ரீமதி ஜெயந்தி சுரேஸ், ஸ்ரீமதி திலகசக்தி ஆராவமுதன், மிருதங்க ஆசிரியர்களான ஸ்ரீ கிருபாகரன் பரமசாமி, ஸ்ரீ பார்த்தீபன் செல்வரட்ணம், வயலின் ஆசிரியையான ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கம், புல்லாங்குழல் ஆசிரியரான ஸ்ரீ ஜனகன் ஸ்ரீஸ்கந்தராஜா, சுரத்தட்டு ஆசிரியர்களான ஸ்ரீ ரெஜித்தன் சிவனேசன், ஸ்ரீ நிருஜன் சிவனேசன், பரதநாட்டிய ஆசிரியைகளான ஸ்ரீமதி திரிவேணி சங்கரகுமார், ஸ்ரீமதி பிரசாந்தி உதயபாபு ஆகியோரின் பங்களிப்பு மெச்சுதற்குரியதாகும். மாணவர்கள் வழங்கிய தெய்வீக இசையும் நடனமும் பாடசாலையின் தரத்தையும் உயர்த்தியனவாக இருந்தன. நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் பக்கவாத்தியக் கலைஞர்களாக விளங்கி ஒத்துழைப்பு வழங்கியமையும் மிகச் சிறப்பான அம்சமாக விளங்கியது.

கலாக்ஷேத்திராவில் கல்வி கற்ற ஆசிரியைகளால் கற்பிக்கப்படும் பரதநாட்டிய நிகழ்ச்சி எப்போதும் இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் தனித்துவமுடையதாக அமைந்திருக்கும். இம்முறையும் சீத்தா கல்யாணம் பொம்மலாட்ட நடன அமைப்பில் சிறுவர்களால் திறன்பட ஆடப்பட்டது. தொடர்ந்து சிரேக்ஷ்ட மணவர்களது பரதநாட்டியமும், அவர்களது நளினமும் அடவு முத்திரைகளும் சுத்தமானதாக இருந்து சபையைக் கவர்ந்தன. வாய்ப்பாட்டு ஆசிரியை ஸ்ரீமதி ஜெயந்தி சுரேஸின் வாய்ப்பாட்டு நிறைவு நிகழ்ச்சியாக அமைந்து நல்லதொரு மனவுணர்வைத் தந்தது.



தமிழ் மொழியின் புகழைச் சொல்லும் வகையில் 'சித்திரம் பேசுதடி' கவிதா நிகழ்வு நகைச்சுவையுடன் சிந்திக்க வைத்ததாகவும் விளங்கியது. இதற்கான பிரதியை பாடசாலையின் பெற்றோரான கவிஞர் சு. திருப்பரங்குன்றன் எழுதியமையும் குறிப்பித்தக்க விடயமாகும். தமிழ் ஆசிரியைகளான ஸ்ரீமதி காஞ்சனா புவனேந்திரன், ஸ்ரீமதி ராதா நவனீதநாதன், ஸ்ரீமதி அகல்யா நித்தியலிங்கம், ஸ்ரீமதி மாதவி சிவலீலன் ஆகியோர் இதனை நெறிப்படுதியிருந்தனர்.

தலைமையாசிரியரான ஸ்ரீமதி மாதவி சிவலீலன் தனது உரையில் நுண்கலை ஆசிரியர்கள் இந்த வருடம் நவராத்திரி விழா, தியாகராஜ உற்சவம், தமிழ் நிலைய மாலை ஆகிய நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடாத்திப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளமையைக் குறிப்பிட்டு சிரந்தாழ்த்தி அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலையின் முன்னைய தலைமை ஆசிரியர்களான கலாநிதி இ. நித்தியானந்தன், வைத்திய கலாநிதி வி. அனந்தசயனன் ஆகியோர் வருகை தந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை நிற்பதனையும், அறங்காவல் சபையினரையும் பாடசாலை நிர்வாகத்தினரையும்நன்றியுடன் நினைவுகூர்ந்தார். நன்றியுரையினை செல்வி சித்தவி சபேசன் வழங்கினார். கலாநிதி பிரசாந்தி ஜெயராஜன் அனைத்து நிகழ்ச்சிகளையும் அழகாகத் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வுக்கு இளைஞர்களான சாள்ஸ், நிருக்ஷன், கரன் ஆகியோர் ஒலியமைப்பைத் திறன்படச் செய்து உதவியிருந்தனர். மேடை ஒழுங்கமைப்பை திரு தி. திருமாறன், கலாநிதி சபேசன், ஸ்ரீமதி சிவாஜினி கிருக்ஷ்ணகுமார், ஸ்ரீமதி சிவாஜினி ஜெயந்தன், ஸ்ரீ எஸ். ஜனார்த்தனன் , ஸ்ரீமதி நளாயினி சாந்தகுமார் ஆகியோரும் உணவுச்சாலையை ஸ்ரீ ஜெயந்தன் குழுவினரும் பொறுப்பேற்றுக் கொண்டமையால் நிகழ்வுகள் துரிதமாகவும் ஒழுங்காகவும் நடை பெறப் பெரிதும் காரணமாக அமைந்தன. விழாவுக்கான மலரினை ஸ்ரீ எஸ் ஜனார்த்தனன் அச்சிட்டு அனுசரணை வழங்கினார். மாணவர்கள், பழைய மாணவர்கள் , ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்த இந்நிகழ்வு பெரு வெற்றியை அன்று கண்டிருந்தமை சபையோர் மத்தியில் மகிழ்ச்சியைத் தந்திருந்தது.




# கொழும்பு தலைமை காரியாலத்தில் நடைபெற்ற மக்கள் பெருந்தோட்ட யாகத்தின் 48ஆம் ஆண்டு விழா

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

மக்கள் பெருந்தோட்ட யாக்கத்தின் 48ஆம் ஆண்டு விழா கொழும்பில் அமைந்துள்ள தலைமை காரியாலத்தில் நடைபெற்றது. மக்கள் பெருந்தோட்ட யாக்கத்தின் தலைவர் விங் கமாண்டர் புவனக அபேயசூரிய தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி கலந்து கொண்டார்.

இந்நிகழ்வை சிறப்புப்படுத்தும் முகமாக நிர்வாகப் பிரிவிற்கு தோட்டப் புறங்களில் கல்வி பயின்று புலமை பெற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்திருந்தார்.

அதற்கமைய முதல் கட்டமாக ஹந்தான, மவுண்ட்ஜீன், லூல்கந்தூர, ரஹத்துங் கோட, போன்ற தோட்ட இளைஞர், யுவதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். இதன்போது கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி, '48 வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மக்கள் பெருந்தோட்ட யாக்கத்திற்கும், அதனை சிறப்புற நடாத்தி செல்லும் தலைவர் அபேயசூரிய மற்றும் பொது முகாமையாளர் பிரதீப், அனைத்து அதிகாரிகளுக்கும் வாழ்த்துக்களை மற்றும் நன்றிகளையும் தெரிவித்து கொண்டார்.

இந்த 48 வருட பாதையில் இப்பெருந்தோட்டயாக்கத்தின்வளர்ச்சிக்குமுதுகெலும்பாக இருந்த பெருந்தோட்டத் தொழிலாளர்க்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று 390 பில்லியன் பெறுமதியான பொருளாதாரத்தில் பெருந்தோட்டத்துறை காணப்பட்டு வருகிறது.

இவ்வளர்ச்சியில் எமது மக்களின் வியர்வை, ரத்தம் மற்றும் தியாகங்கள் பல்வேறு வகையில் உந்து சக்தியாக இருந்தது. இருப்பினும், அவர்களுக்கான உரிமைகள் மற்றும் வசதிகள் சரியான முறையில் கிடைக்கப் பெற்றுள்ளதா இன்னும் அவை கேள்விகுறியாகவே உள்ளது. 1948 நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த போது எமது மக்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர். 1960களில் எங்களுடைய சொந்தங்கள் பல வந்தமாக. நாடு கடத்தப்பட்டார்கள்.

1980ளில் நாட்டில் ஏற்பட்டிருந்த இனக் கலவரங்களினால் மக்களின் வாழ்வாதாரம் மட்டும் அன்றி உயிர்களையும் இழக்க வேண்டியிருந்தது. 1990ஆம் ஆண்டுக்கு பிறகு உள்நாட்டு யுத்தத்திலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையும் காணப்பட்டது. 2002 ஆண்டு வரை நாம் இலங்கை பிரஜை ஆவதே எமது நோக்கமாக இருந்தது. தற்போது அபிவிருத்தி காலப்பகுதியில் நாம் உள்ளோம். எம் மக்களுக்குத் தேவையான வீடமைப்பு மற்றும் காணி உரிமை தொடர்பான அனைத்து திட்டங்களையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நாங்கள் செய்துவருகிறோம்.

அந்த வகையில் எமது சமூகம் இலங்கையில் ஒரு தனித்துவ அடையாளத்தோடு பொருளாதார சமூக மற்றும் அந்தஸ்தோடு தலைநிமிர்ந்து வாழ வைசொல்லில் மாத்திரமன்றி செயல்படுத்தியும் வருகின்றோம்.

மக்கள் பெருந்தோட்ட யாக்கத்தில் சேவையாற்றிய பல தொழிலாளர்கள் இன்னும் அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைக் கால கொடுப்பனவு வழங்கப்படாமல் அவதியுறுகின்றனர். கடந்த காலங்களில் பெருந்தோட்ட யாக்கத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்கள் சரியான முறையில் முகாமைத்துவத்தை மேற்றகொள்ளாததன் காரணமாக எமது மக்கள் அதற்கான சுமையை தாங்க வேண்டியதாக உள்ளது.

தற்போது இந்த கொடுப்பனவுகள் மற்றும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத்தொகை எமது தொடர் அழுத்தங்கள் காரணமாக சிறிது சிறிதாக வழங்கப்பட்டாலும் மிகுதி நிலுவை தொகையை துரித கதியில் வழங்க நிதி அமைச்சர் என்ற ரீதியில் நாம் ஜனாதிபதிக்கு கோரிக்கையை முன்வைத்துள்ளோம். எந்த ஒரு தொழில் துறையும் வளர்ச்சி பெற அதன் முக்கிய மூலதனமான மனித வளத்துறை மேம்பட வேண்டும்.

இன்று நியமனங்களை பெறும் இந்த இளைஞர்களும் யுவதிகளும் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்ற வேண்டும். அதுமாத்திரமன்றி இவர்களைப் போல பலர் இந்த பெருந்தோட்ட கைத்தொழில் துறையை நவீனமயமாக்குவதற்கும் அதனுடனான தொழில்துறை வளர்ச்சிக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்குதாரர்களாக ஆகவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

## 'சமுர்த்தி அபிமானி' புத்தாண்டு சந்தை



வாச்சிக்குடா விஷேட நிருபர்

ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி புத்தாண்டு சந்தை அண்மையில் நடைபெற்றது. புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக தயாராகிவரும் பொதுமக்களுக்கு தேவையான பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையினை இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் ரீதியாக 'சமுர்த்தி அபிமானி' புத்தாண்டு சந்தையினை நடத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ந.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற புத்தாண்டு சந்தை ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் மற்றும் அம்பாரை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுவாகர் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல். ஹூசைன்டீன், நிருவாக உத்தியோகத்தர் கே.சோபிதா, நிருவாக கிராம அலுவலர் பரிமளவாணி சில்வெஸ்டார், முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், கருத்திட்ட முகாமையாளர் ரி.கமலபிரபா, சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான கவிதா கிருதாசன், எஸ். சுரேஷ்காந் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி பிரிவினரால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட அதிதிகள் வியாபார நிலையங்களை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர்.

பின்னர் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களை பார்வையிட்டதுடன் கொள்வனவிலும் ஈடுபட்டனர்.

இதேநேரம் பல்வேறு உற்பத்தி பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

## எரிந்த வீட்டிலிருந்து 39 வயது குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



வாச்சிக்குடா விஷேட நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோளாவில் 02 பிரதேசத்தில் வீடொன்றின் முன்பகுதி முற்றாக எரிந்த நிலையில் உள்ளிருந்து 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் தீயில் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி வீட்டின் பிற்பகுதி கல் வீடாக அமைந்துள்ளதுடன் முன்பகுதியின் கூரை கிடுகினால் வேயப்பட்டிருந்தது. வீட்டின் முன்பகுதியே தீக்கிரையாகியுள்ளதுடன் தீக்கிரையான பகுதியிலேயே சடலம் எரிந்த நிலையில் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர் இரு பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்முனம் இரவு (09) இச்சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என அறியமுடிவதுடன் சம்பவம் நடைபெற்றபோது மனைவி, பிள்ளைகள் அனைவரும் உறவினர் வீட்டில் தங்கி இருந்ததாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அக்கரைப்பற்று பொலிசார் விசாரணையை ஆரம்பித்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காக உயர் அதிகாரிகளுக்கும் விசேட தடயவியல் பொலிசாருக்கும் அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி பிரேத உடற்கூற்றாய்வு பரிசோதனைகளுக்காக சடலத்தை கொண்டு செல்ல உத்தரவிட்டார்.

## விவேகானந்தா பழைய மாணவிகள் வலைப்பந்து க்ரி:.பிண்டோர் வசம்




கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவிகளுக்கிடையிலான வருடாந்;த வலைப்பந்தாட்ட கிண்ணத்தை க்ரிஃபிண்டோர் அணி கைப்பற்றியது.

இரண்டு முறை சம்பியன் பட்டத்தை வென்ற தீபா சண்முகதேவா தலைமையிலான ஐஸ் ஸ்ரோம் அணியினருக்கும், இம்முறை முதற்தடவையாக களமிறங்கிய அர்ஷிகா சத்தியசீலன் தலைமையிலான க்ரிஃபிண்டோர் அணியினருக்கும் இடையில் இறுதிப் போட்டி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இளம் வீராங்கனைகளைக் கொண்ட க்ரிஃபிண்டோர் அணியினர் முதல் பாதியில் 10 கோல்களை பெற்று முன்னிலை பெற்றதுடன் இரண்டாவது பாதியில் மேலும் 11 கோல்கள் அடங்கலாக 21 கோல்களை போட்டனர். ஐஸ் ஸ்ரோம் அணியினர் மொத்தமாக 5 கோல்களையே பெற்றனர்.

இப்போட்டியில் மொத்தம் ஐந்து அணிகள் பங்கேற்றிருந்ததோடு மூன்றாவது இடத்திற்கான போட்டியில் டொமினன்ட் டிவாஸ் அணியை வீழ்த்தி அக்கினி சிறகுகள் வெற்றிபெற்றது.

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கட்டைபறிச்சானில் சிறப்பு நிகழ்வுகள்

## ஆரம்ப நிகழ்வில் கிழக்கு ஆளுநர்



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

மூதூர் கிழக்கு கட்டைப்பறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டுக் கழகத்தினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (09) மாலை ஆரம்பித்து வைத்தார்.

முதல் நிகழ்வாக பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. கிழக்கு மாகாண ஆளுநரின் சேவையினைப் பாராட்டி ஏற்பாட்டுக் குழுவினரால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் ஏனைய அதிதிகளாக மூதூர் பிரதேச செயலாளர், உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டைப்பறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டு கழகத்தினால் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மரதன் ஓட்டம், படகோட்டம், வழுக்கு மரம் ஏறுதல், கயிறிழுத்தல், சைக்கிளோட்டம், சங்கீதக் கதிரை, முட்டியுடைத்தல், பலூனுடைத்தல், மிட்டாய் உண்ணுதல், நீச்சல் உள்ளிட்ட பல விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - (PDHS) - மேல் மாகாணம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### மேல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு மருத்துவ சாதனங்களை வழங்கல்

1. கொழும்பு-10, மாளிகாவத்த செயலக கட்டிட PDHS அலுவலக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் அம்சத்திற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வதுடன் விலைமனுக்கள் 2024.05.07 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்படும்.

| விலைமனு குறிப்பு இலக்கம் | விலைமனுவின் பெயர் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| WP/PD/PRO/02/01/Endoscopy/2024 | Procurement of Video Endoscopy System in BH Panadura | 12,000.00 | 2024.04.24 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கும் மு.ப. 11.30 மணிக்குமிடையில் |

2. 2024.04.15 ஆம் திகதியிலிருந்து 2024.05.06 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழமையான வேலை நாட்களில், கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெ. 876, மாகாண சுகாதார சேவைகள் அலுவலகம் செயலக கட்டிட அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெ. 876, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில்(மேல் மாகாணம்) 2024.05.07 ஆம் திகதியன்று உத்தேசிக்கப்பட்ட மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
4. விலைமனுக்கள் உபகரணங்களின் ஏக-நியமிக்கப்பட்ட பிரதிநிதி/ தர அங்கீகாரமுள்ள தயாரிப்பாளர்களுக்கே வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்களை கோரும் போது இந்த கோரிக்கைக்கு சான்று பகரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மூடும் நேரத்திற்கு முன்னராக ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெ. 876, மாகாண சுகாதார சேவைகள் அலுவலகம் (மே.மா) நிர்வாகத்திற்கான பிரதி பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
6. விலைமனு ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக முத்திரை பொறிக்கப்பட்டு அவையிரண்டும் ஒரே தபாலுறையில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பு இலக்கமானது எழுதப்படல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து மேல் மாகாண மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பிலக்கம்: 011-2437154/011-2434852.

**Dr. Dammika Jayalath,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மே.மா),**
**மாளிகாவத்த,**
**கொழும்பு - 10.**

# 'உலகமெங்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் மேலோங்கட்டும்'

## எம். எஸ். தௌபீக் எம்.பி



உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம். எஸ். தௌபீக் தனது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புனித ரமழான் நோன்பை நோற்று நல்லமல்களில் விழித்திருந்து வணங்கி இன்று பெருநாளை அடைந்திருக்கிறோம்.

இறை அச்சத்தோடு இவ்வருட நோன்பை எதிர்கொண்டு, நமது ஈமானை இந்த மாதத்தில் பலப்படுத்திக் கொண்டோம்.

பலப்படுத்திக் கொண்ட உள்ளங்களை இன்றைய தினத்தோடு விட்டுவிடாது வாழ்நாள் பூராகவும் செயற்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதோடு, ஏழை எளியோருக்கு இயன்ற உதவிகளைச் செய்வோம்.

அதேபோன்று பலஸ்தீனத்தில் நிரந்தர அமைதி நிலவ இறைவனிடம் இரு கரம் ஏந்தி பிரார்த்திப்போம்.

உலகெங்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் மேலோங்கட்டும் என பிரார்த்தித்தவனாக உலக வாழ் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது நோன்பு பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## அறிவித்தல்

### கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு

### கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024

கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மாகாண இறைவரிசேவை அலுவலர்களிடமிருந்தோ இலங்கை உள்நாட்டு இறைவரிசேவை அலுவலர்களிடமிருந்தோ விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் பதவிகள்.

(i) மாகாணப் பிரதி ஆணையாளர்

(ii) மாகாண மதிப்பீட்டாளர்

(iii) வரி உத்தியோகத்தர்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 30.04.2024 ஆகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கீழ் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் இணையதளத்தில் மேலதிக தகவல்கள் மற்றும் தகைமைகளை பரீட்சிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். முறையாக பூர்த்திசெய்யப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

www.ep.gov.lk → Exams & Results → Recruitment Exams

**ஆ.மன்சூர்,**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

திகதி - 09.04.2024

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**நீர்ப்பாசன அமைச்சு**

**விலைக்கோரலுக்கான அழைப்பு - பொருட்கள்**

## காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை

**தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

### வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு திறந்தவெளி டிஜிட்டல் திரையை வழங்கி பொருத்துதல்

**SUPPLYING AND INSTALLING LED DIGITAL OUTDOOR DISPLAY BOARDS FOR DEPARTMENT OF METEOROLOGY, SRI LANKA**

**RFB குறிப்பீட்டிலக்கம்: SLMOI/CRES/DOM/G/NCB/21**

2024-04-10ஆம் திகதிய டெய்லி நியூஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரமான விளம்பரத்தில் SLMOI/CRES/ID/G/NCB/21 எனப் பிரசுரமான ஒப்பந்த இலக்கம் SLMOI/CRES/DOM/G/NCB/21 எனத் திருத்தப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான**
**பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை,**
**இல. 11, ஜாவத்த வீதி,**
**கொழும்பு - 05.**
**2024-04-11.**

# மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

வவுணதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருமலை வீதியைச் சேர்ந்த இளைஞன் தனது வீட்டில் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். திருமலை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சசிக்குமார் டினேஸ் (வயது 19) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார். திங்கட்கிழமை (08ஆம் திகதி) தனிமையில் தனது வீட்டில் வெல்டிங் இரும்பு ஒட்டு வேலைகளை செய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கப்பட்டு மயக்க நிலையில் இருந்ததாகவும் பின்னர் அவரது சகோதரி மற்றும் அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# தரம் 1 மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட திருக்கடலூர் தி/நாமகள் பாடசாலையின் தரம் 1க்கான மாணவர்களின் வருகையில் பல வருடங்களாக வீழ்ச்சி கண்டுள்ளமையால் சமூக ஆர்வலர் இராஜகோன் பிரதீபனால் குறித்த பாடசாலைக்கு ஒவ்வொரு வருடமும் கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன.

2023ஆம் ஆண்டில் இருந்து கல்விக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டு வருவதுடன் இவ் ஆண்டில் (2024) மொத்தமாக ஏழு இலட்சம் வங்கி கணக்குகளில் பணம் வைப்பிலிடப்படுவதுடன் வீ. செல்வராசாவைக் கௌரவிக்கும் நிகழ்வும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்று (10) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இதில் பாடசாலையின் அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# போதைபொருளுடன் ஒருவர் கைது

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுமேத்ராகம பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவரை கைது செய்ததாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் அதிரடிப் பிரிவுடன் இணைந்து தலைமையக பொலிசாரும் தேடுதல் மேற்கொண்டபோதே 36 வயதுடைய நபர் ஒருவர் விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஹெரோயின் நிறை 3 கிராம் 300 மில்லி கிராம் என தலைமையக பொலிசார் தெரிவித்தனர். இந்த நிறையுடை ஹீரோயின் 84 பைக்கற்றுகளாக பொதி செய்யப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர் ஒரு போதை பொருள் வியாபாரி எனவும் அவர் மீது நீதிமன்றத்தில் நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நீர்த் தடாகத்தில் வீழ்ந்து 2 1/2 வயது சிறுமி மரணம்

வவுணதீவு தினகரன் திருபர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவிலங்கடித்துறை, ஆரையம்பதி பகுதியில் சிறுமி ஒருவர் நீர்த் தடாகத்தில் தவறுதலாக வீழ்ந்து மரணமடைந்துள்ளார். மாவிலங்கடித்துறையில் கடந்த திங்களன்று தனது வீட்டு முற்றத்தில் சகோதரர்களுடன் விளையாடிய இரண்டரை வயதுச் சிறுமியைக் காணாது தேடிய தாயார், வீட்டு முற்றத்தில் இருந்த நீர்நிறைந்த வாளியினுள் சிறுமி வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, உடனேயே, ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வருகின்றது. மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவானின் பணிப்புரைக்கமைவாக, காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன், ஆரையம்பதி வைத்தியசாலைக்கு சென்று பிரேதத்தை பார்வையிட்ட பின்னர். உடற்கூற்று பரிசோதனைக்காக மட். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு அறிவித்தார்.

## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண சபை

### பிரதி தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்

ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலக பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) இயைபுடைய துறையில் பதிவுத் தகுதி பெற்று நிர்மாண நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் அடிப்படையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | சிவில் வேலையின் பெறுமதி (ரூ. மில்.) (வெட் இன்றி) | கட்டிட நிர்மாணத் துறைக்குத் தேவையான CIDA தரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி தொகை (ரூபா) | நிர்மாணக் காலப் பகுதி (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | DCS/ENG/ CHI & PRO/PSDG 2024/01/01 | மகியங்கனை நகரத்தில் புதிய நன்னடத்தை அலுவலகம் மற்றும் சிறுவர் நிர்மாணிக்கும் வேலையின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | 29.00 | C5, C4 | 145,000.00 | 150 | 7,500.00 |
| 02 | DCS/ENG/HE/PSSP 2024/01/01 | பண்டாரவளை ஊவா மாகாண சுகாதாரப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தங்குமிட விடுதிக் கட்டிட தரை தளத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | 21.27 | C6 ,C5 | 106,500.00 | 55 | 5,000.00 |
| 03 | DCS/ENG/HE/PSSP 2024/01/02 | பண்டாரவளை ஊவா மாகாண சுகாதாரப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தங்குமிட விடுதிக் கட்டிட முதலாம் தளத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | 20.99 | C6, C5 | 105,000.00 | 55 | 5,000.00 |
| 04 | DCS/ENG/HE/PSSP 2024/01/03 | பண்டாரவளை ஊவா மாகாண சுகாதாரப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தங்குமிட விடுதிக் கட்டிட தரை கீழ் தளத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | 18.42 | C6, C5 | 92,500.00 | 55 | 5,000.00 |
| 05 | DCS/ENG/HE/AY PSDG/2024/01/01 | தியத்தலாவ ஆயுர்வேத வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் திருத்தவேலைகள் | 11.95 | C6, C5 | 60,000.00 | 120 | 5000.00 |
| 06 | DCS/ENG/HE/AY PSDG/2024/01/02 | பத்தயாய சிறுநீரக ஆராய்ச்சி ஆயுர்வேத வைத்தியசாலையின் 01ஆம் இலக்க வைத்தியர் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | 7.65 | C7, C6 | 38,500.00 | 90 | 5000.00 |

- தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதுடன் நிதி அமைச்சின் 4/2016(iii) இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களுக்கான மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுத் தர முன்னுரிமை என்பன கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படும்.
- கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் அலுவலகம் : மாகாண கட்டிடத் திணைக்களம், பிங்அராவ, பதுளை
- கேள்விப் படிவங்கள் வழங்குதல் : 2024-04-15ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-04-29ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
- கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் : 2024-04-30 பி.ப. 2.00 மணி வரை
- கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் : 2024-04-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில்.
- கேள்விப் பிணை முறியை வங்கிப் பிணை முறி மூலம் சமர்ப்பிப்பதானால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைவிட இரு மடங்காகவிருத்தல் வேண்டும்.
- சகல வேலைகளும் பொது ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்துகொள்ளப்பட வேண்டும்.
- கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024-04-22ஆம் திகதி மாகாண கட்டிடத் திணைக்களத்தில் இடம்பெறும்.

இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் இயைபுடைய நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள், கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை பின்வரும் தொலைபேசி எண்களோடு தொடர்புகொண்டு அல்லது E-mail ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம் - 0552222217 / dcsengupc@gmail.com
- மாகாண கட்டிடத் திணைக்களம் - 0552229629 / bdplanningunit2@gmail.com
- பண்டாவரளை பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - 057-2222025
- பிபிலை பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - 055- 2265317

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்,**
**பிங்அராவ, பதுளை.**
**2024-04-10ஆம் திகதி.**

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டமூலத்தின் 9(2) இன் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.

கம்பனியின் முன்னைய பெயர் :
**லக்ஸ்சபான பற்றரீஸ் பிஎல்சி**
கம்பனியின் இலக்கம்: PQ 170
பதிவு இலக்கம்:
**இல. 98, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10**
மாற்றத்திகதி : **2024 ஏப்ரல் 1**
கம்பனியின் புதிய பெயர்: **லக்ஸ்சபான பிஎல்சி**

**கோர்ப்பரேட் மனேஜர்ஸ் அண்ட் செக்கிரேட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட் செயலாளர்கள்.**

**2024 ஏப்ரல் 11.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/19

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2013/LRB/108

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக்காணித் துண்டுகள் தொடர்பாக, காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள், 2024.04.24ஆம் திகதி நடைபெறும் மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2024.03.11 ஆம் திகதிய 2375/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

**அட்டவணை**

1. மாகாணம் : மேல் மாகாணம்
2. மாவட்டம் : கொழும்பு
3. பிரதேச செயலாளர் பிரிவு : கெஸ்பேவை
4. அமைவிடம் : கெஸ்பேவை நகர சபை எல்லைக்குட்பட்ட மாம்பே கிராமம்
5. கிராமம் : மாம்பே.
6. வரைபட இல. : கடத்திரல் வரைபட இல. 521202 (தொகுதி இல. 09, தாள் இல. 43)
7. துண்டு இல. : துண்டு இல. 1, 6, 8, 11, 12, 15, 16, 18, 21, 25, 28, 31, 33, 36. (14 காணித் துண்டுகள்)
8. மொத்த விஸ்தீரணம் : 0.2647 ஹெக்டயார்

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவு**

**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்**
**கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை,**
**இராஜகிரிய.**
2024.03.11




## கல்பிட்டிய பிரதேச சபை

### 2025 வரவு-செலவுத் திட்டத்திற்காக அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

2025 ஆம் ஆண்டின் கல்பிட்டிய பிரதேச சபையின் எஞ்சிய அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் 2025ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு பொதுமக்கள் மற்றும் சமுக அமைப்புகளின் அபிவிருத்தி விடயங்கள் பற்றிய ஆலோசனைகள் ஏற்கப்படும்.

கல்பிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்திக்காக உங்களது பெறுமதியான கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை 2024 ஜுன் 30ம் திகதிக்கு முன்பு கல்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கல்பிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மிகவும் பெறுமதியுடையதாக கருதுகிறேன்.

**முகவரி** : **பிரதான வீதி, கல்பிட்டிய**
**மின்னஞ்சல் முகவரி** : kalpitiyaps@gmail.com
**பெக்ஸ்** : **032-2260683**
**தொ.பே. இல** : **032-2260274 / 032-2260275**

**மங்கள ராமநாயக்க,**
**செயலாளர்,**
**கல்பிட்டிய பிரதேச சபை**
**2024.04.08**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **24/04/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **25/04/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **26/04/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

## 2011 இல.40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்.

இல.108 ஏ, செக்கிரிதெனிய வீதி, கொத்தலாவல, கடுவலை என்ற முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம், 196570002259 கொண்ட ஹேரத் முதியன் செலாகே ஹென்னாயக்க மெனிகே என்பவரின் பெயரில் பதிவுசெய்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல சொத்துகளையும் அகற்றுதல் அல்லது கையகப்படுத்தலை தவிர்க்கும் முகமாக 2024.02.15ம் திகதி குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின், சட்ட விரோத சொத்துகள் விசாரணை பிரிவில் உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவரால் 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 7(1) பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வழங்கப்படும் செயற்பாடற்றதாக்கும் கட்டளை ஹோமாகம உயர் நீதிமன்றத்தினால் இல. HC (SPC) 07/2024 என்ற வழக்கின் கீழ் 2024.02.21ம் திகதி உறுதி செய்யப்படும்.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை மேற்படி சட்டத்தின் 8(2) பிரிவின் பிரகாரம் 2024.05.21 வரை 03 மாதத்திற்கு அமுலாகுமாறு மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சொத்துகளுக்கு தமது உரிமைகோரல் சட்டத்தின் 14ம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் முகமாக இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது.

**செயற்பாடற்றதாக்குவதுடன் சம்பந்தப்பட்ட வாகனங்கள் மற்றும் பயணிகள் சேவை - அனுமதிப்பத்திரம்**

- WP ND 2500(வெ.அ. BFE577334 -ஏ.அ FDH - 356072)
  WPNCC 811 (வெ.அ. MB 1PBEF A2 GEPO 1713 - எ.அ.
  GFEZ400680) WPNG - 2500 (வெ.அ. MBIPBEFA5JAD JOP உப - எ.அ. JDHZ417556) WPND 6558 (வெ.அ. MBIPBEHD6KAJJ6158 - எ.அ. JXPZ147037) WPNC5137 (வெ அ. MBIPBEFA1FATF 1142 - எ.அ. FIHZ424203) இலக்கம் கொண்ட LEYLAND பஸ்கள் 5
- WPKW 8163 இலக்கம் கொண்ட HONDA மோட்டர் வாகனம் வெ. அ. GP 11203291 - எ.அ. LBA - MF6 - 5203328
- BB5 6365 இலக்கம் கொண்ட HONDA ஸ்கூட்டர் மோட்டர் சைக்கிள்
  வெ.அ. ME4JF 392 KE7223564 - ஏ.அ. JF39E 70223606
- இலக்கம் C/2/177/41855, C/2/177/41185, C/2/177/44315, C/2/177/45058, C/2/177/47810 மேல் மாகாண பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் 5

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**

### காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அனுகுமுறை

**செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960**

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம்: CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/045, 060, 063, 077, 090, 091, 092 & 111**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை கிரயச் செலவிற்காக மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அம்பாறை - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | மாவட்டம் | முடிவுறுத்தும் காலம் (நாட்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/045 | பல்லன்ஓய திட்டத்தில் JW-10 கால்வாயை மேம்படுத்துதல் | அம்பாறை | **180** | C6 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 195,000.00 | 2024-08-20ஆம் திகதி வரை | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/060 | பன்னல்கம திட்டத்தில் PG-2 கால்வாயை மேம்படுத்துதல் | அம்பாறை | **180** | C6 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 214,000.00 | 2024-08-20ஆம் திகதி வரை | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/063 | கரங்கவெவயில் குள அணைக்கட்டின் திருத்தவேலை L=I150m மடையின் திருத்தவேலை (02 எண்ணிக்கை) பிரதான கால்வாய் 2.2 கி.மீ. திருத்தவேலை | அம்பாறை | **180** | C6 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 229,000.00 | 2024-08-20ஆம் திகதி வரை | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/077 | அக்கரைப்பற்றுவில் உள்ள தில்லையாறு கிளை கால்வாயில் STN 3+665 இல் 4.0m span box type மதகை நிர்மாணித்தல் மற்றும் RB-36 வடிகால் கால்வாயை நிர்மாணித்தல். | அம்பாறை | **180** | C7 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 98,000.00 | 2024-08-20ஆம் திகதி வரை | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/090 | நாவலாறு திட்டத்தின் நாவலாறு பிரதான அணைக்கட்டின் D/S மேம்பாட்டிற்கான நிவாரண நடவடிக்கைகள் | அம்பாறை | **180** | C5 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 450,000.00 | 2024-10-01ஆம் திகதி வரை | 119 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/091 | கரந்தஓய திட்டத்தின் தங்கபுள்ள பிரதான கால்வாயை மேம்படுத்துதல் | அம்பாறை | **180** | C7 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 155,000.00 | 2024-08-20ஆம் திகதி வரை | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/092 | கரந்தஓய திட்டத்தின் பள்ளியடியான் பிரதான அணைக்கட்டை மேம்படுத்துதல் | அம்பாறை | **180** | C6 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 380,000.00 | 2024-10-01ஆம் திகதி வரை | 119 |
| CResMPA-1/RP/WORKS/ID-AMP/NCB/111 | மந்தியவெளி குளத்தில் பிரதான கால்வாயின் L = 400m மேம்படுத்துதல், மடையை மேம்படுத்துதல் (02 எண்ணிக்கை) மற்றும் L = 800m குளக்கட்டின் புதுப்பித்தல் வேலைகள் | அம்பாறை | **180** | C7 நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 130,000.00 | 2024-08-20ஆம் திகதி வரை | 77 |

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் தகுதிநீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அம்பாறை - நீர்ப்பாசன பணிப்பாளரிடம் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| மாவட்டம் | நீர்ப்பாசன அலுவலக வரம்பு / மாவட்டம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| அம்பாறை | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை | கச்சேரி வீதி, அம்பாறை | 063-2222276 |

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதிக்கு மேலதிகமாக சித்திகரமான விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பம், நிதி, சட்டபூர்வம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-04-15ஆம் திகதி முதல் 2024-05-06ஆம் திகதி வரை மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 மணிக்கிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும் மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் அம்பாறை, கச்சேரி வீதி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் அம்பாறை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையிலிடப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதிகளுடன் 2024-05-07ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ''நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி வீதி, அம்பாறை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். (விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக மட்டும்) அல்லது அம்பாறை, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் அம்பாறை - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
8. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் செல்லுபடியாகும் வகையில் (விலைமனுக்கள் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) விலைக்கோரல் பிணை முறியொன்று (விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு அம்பாறை - நீர்ப்பாசனப் பொறியிலாளரின் பெயரில் விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுடனான விலைக்கோரல் பிணை முறிகள் அற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| மாவட்டம் | வேலையின் பெயர் | வேலைத் தள விஜயத்திற்கு உதவும் பிரதேச பொறியியலாளர் | வேலைத் தள விஜயம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| அம்பாறை | பல்லன்ஓய திட்டத்தில் JW-10 கால்வாயை மேம்படுத்துதல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், அம்பாறை | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | பன்னல்கம திட்டத்தில் PG-2 கால்வாயை மேம்படுத்துதல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், அம்பாறை | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | கரங்கவெவயில் குள அணைக்கட்டின் திருத்தவேலை L=I150m மடையின் திருத்தவேலை (02 எண்ணிக்கை) பிரதான கால்வாய் 2.2 கி.மீ. திருத்தவேலை | பிராந்திய பொறியியலாளர், கமநல சேவை நிலையம், அம்பாறை | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | அக்கரைப்பற்றுவில் உள்ள தில்லையாறு கிளை கால்வாயில் STN 3+665 இல் 4.0m span box type மதகை நிர்மாணித்தல் மற்றும் RB-36 வடிகால் கால்வாயை நிர்மாணித்தல். | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், அக்கரைப்பற்று | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | நாவலாறு திட்டத்தின் நாவலாறு பிரதான அணைக்கட்டின் D/S மேம்பாட்டிற்கான நிவாரண நடவடிக்கைகள் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், பொத்துவில் | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | கரந்தஓய திட்டத்தின் தங்கபுள்ள பிரதான கால்வாயை மேம்படுத்துதல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், பொத்துவில் | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | கரந்தஓய திட்டத்தின் பள்ளியடியான் பிரதான அணைக்கட்டை மேம்படுத்துதல் | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், பொத்துவில் | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | மந்தியவெளி குளத்தில் பிரதான கால்வாயின் L = 400m மேம்படுத்துதல், மடையை மேம்படுத்துதல் (02 எண்ணிக்கை) மற்றும் L = 800m குளக்கட்டின் புதுப்பித்தல் வேலைகள் | பிராந்திய பொறியியலாளர், கமநல சேவை நிலையம், அம்பாறை | 2024-04-30ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு | 2024-04-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (அம்பாறை) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறும். (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) வளமுள்ள விலைமனுதாரர்கள் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேச பொறியியலாளரின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
10. பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். பிராந்திய பெறுகைக் குழு தனது சொந்த விருப்பத்தில் ஒன்றை அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**அம்பாறை.**

**திகதி: 2024-04-11.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | விளக்கம் | அளவு | விலைமனுப்பிணை (ரூபாவில்) | பெசேவ உடன் விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| RDA/CE/(V)/ RMTF /2024/01 | தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - வவுனியா நி.அ. இன் பிரிவு | வெள்ளை : 17,160 கிகி கண்ணாடி மணிகள்: 600 கிகி | 69,165.00 | 3500.00 |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் **www.rda.gov.lk** and **www.mohsl.gov.lk** என்ற இணையபக்கங்களை 2024 ஏப்ரல் 10 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | விளக்கம் | அளவு | விலைமனுப்பிணை (ரூபாவில்) | பெசேவ உடன் விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| RDA/CE(J)/ RMTF/2024//01 | தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - பருத்தித்துறை நி.அ. இன் பிரிவு | வெள்ளை: 28,220 கிகி மஞ்சள்: 725 கிகி கண்ணாடி மணிகள்: 1100 கிகி | 98,925.00 | 3500.00 |
| RDA/CE(J)/ RMTF /2024/02 | தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - யாழ்ப்பாண நி.அ. இன் பிரிவு | வெள்ளை: 17,500 கிகி மஞ்சள்: 4,100 கிகி கண்ணாடி மணிகள்: 760 கிகி | 84,915.00 | 3500.00 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் **www.mohsl.gov.lk** என்ற இணையபக்கங்களை 2024 ஏப்ரல் 10 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

## கேள்விகளுக்கான அழைப்பு

### விவசாயத் திணைக்களம் – பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் கலப்பின மிளகாய் விதை உற்பத்தி மற்றும் மிளகாய் உற்பத்தி மாதிரிக் கிராமமொன்றை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2000 சதுர அடி பரப்பளவைப் கொண்ட 20 பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணிப்பதற்காக மற்றும் தோட்டப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கலப்பின தக்காளி விதை உற்பத்தி செயற்றிட்டத்தின் கீழ் 1500 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 08 பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணிப்பதற்காக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இக்டாட் - ICTAD, சிடா CIDA பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2024-04-15ஆம் திகதி முதல் 2024-05-06ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் இந்தத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திலிருந்து மிளகாய் விதை உற்பத்தி பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பாகவும் கன்னொருவ தோட்டப் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திலிருந்து கலப்பின தக்காளி விதை உற்பத்தி பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பான கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-05-07ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபாலின் மூலம் அனுப்பியோ கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த வேலைகள் தொடர்பில் மேலும் தகவல்கள் தேவைப்படின் விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு மற்றும் கன்னொருவ தோட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறிந்து கொள்ளலாம். கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-04-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

| கேள்வி இல. | வேலை விபரம் | ICTAD / CIDA பதிவு | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பணமாகச் செலுத்துவ தானால் (ரூபா சதம்) | வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்ப தானால் (ரூபா சதம்) |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (மத்திய) | பெல்வெஹெர விதை உற்பத்திப் பண்ணையில் 05 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் அம்பதென்ன விதை உற்பத்தி பண்ணையில் பாதுகாப்பு இல்லமொன்றை நிர்மாணித்தல். (ரூபா 25,705,131.00) | C-5 மற்றும் C-4 | 10,000.00 | 257,000.00 | 514,000.00 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (தெற்கு) | மித்தெனிய விதை உற்பத்திப் பண்ணையில் 05 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் லபுதுவ விவசாயப் பாடசாலையில் பாதுகாப்பு இல்லமொன்றை நிர்மாணித்தல். (ரூபா 25,428,045.00) | C-5 மற்றும் C-4 | 10,000.00 | 254,000.00 | 508,000.00 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (வடமத்திய) | மஹஇலுப்பள்ளம விதை உற்பத்திப் பண்ணையில் 03 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் அநுராதபுரம் விவசாயப் பாடசாலையில் பாதுகாப்பு இல்லமொன்று மற்றும் வாரியபொல விவசாயப் பாடசாலையில் பாதுகாப்பு இல்லமொன்றை நிர்மாணித்தல். (ரூபா 22,320,847.50) | C-6 மற்றும் C-5 | 7,500.00 | 223,000.00 | 446,000.0 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (ஊவா) | உல்பத்தகம விதை உற்பத்திப் பண்ணையில் பாதுகாப்பு இல்லமொன்றையும் மற்றும் பிபில விவசாயப் பாடசாலையில் பாதுகாப்பு இல்லமொன்றை நிர்மாணித்தல். (ரூபா 9,341,769.00) | C-7 மற்றும் C-6 | 3,500.00 | 93,000.00 | 186,000.00 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (சப்ரகமுவ) | கரபிஞ்ச விவசாயப் பாடசாலையில் பாதுகாப்பு இல்லமொன்றை நிர்மாணித்தல். (ரூபா 4,336,347.23) | C-8 மற்றும் C-7 | 2,500.00 | 43,000.00 | 86,000.00 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (கண்டி) | கலப்பின தக்காளி விதை செயற்றிட்டத்தின் கீழ் 1500 சதுர அடி பரப்பளவில் 04 பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணித்தல் (கண்டி 04) (ரூபா 12,776,392.00) | C-6 மற்றும் C-5 | 4,500.00 | 127,500.00 | 255,000.00 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (மாத்தளை) | கலப்பின தக்காளி விதை செயற்றிட்டத்தின் கீழ் 1500 சதுர அடி பரப்பளவில் 02 பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணித்தல் (மாத்தளை 02) (ரூபா 6,388,196.00) | C-7 மற்றும் C-6 | 3,000.00 | 63,500.00 | 127,000.00 |
| வி/தி/நி/ 2/3/2/2024(04) (நுவரெலியா) | கலப்பின தக்காளி விதை செயற்றிட்டத்தின் கீழ் 1500 சதுர அடி பரப்பளவில் 02 பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணித்தல் (நுவரெலியா 02) (ரூபா 6,388,196.00) | C-7 மற்றும் C-6 | 3,000.00 | 63,500.00 | 127,000.00 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி,**
**பேராதனை.**

**விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம் (தொலைபேசி) 081-2389127**
**தோட்டப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (தொலைபேசி) 081-2388011-12**
**விவசாயத் திணைக்களம் (தொலைபேசி) 081-2388331**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரலுக்கான திருத்தம் (IFB)

**2024.04.02** ஆம் திகதி டெயிலி நியூஸ், மற்றும் **2024.04.03** ஆம் திகதி வெளியிடப்பட்ட தினமின மற்றும் தினகரன் பத்திரிகை விளம்பரம் தொடர்பானது. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள CIDA தர ஒப்பந்ததில் பின்வரும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | பொறியியலாளர் களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/ NCP/ANP/04 | ஹிரிபிட்டியாவ சந்தியிலிருந்து உஸ்கல சந்தி வரையான வீதி (CH: 0+000-3+250) | 48.05 | C4 மற்றும் C5 | 500,000.00 | 119 நாட்கள் |

**2024.04.02** ஆம் திகதி முதல் **2024.04.22** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்தில் **www.rda.gov.lk** மேலே குறிப்பிடப்பட்ட விலைமனுக்கோரலின் திருத்தத்தினை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2884790 / மின்னஞ்சல் : **procurement@rda.gov.lk** என்ற இலக்கத்தில் கொள்முதல் பணிப்பாளரை (RDA) தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

SELACINE

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரலுக்கான திருத்தம் (IFB)
## வடமேற்கு மாகாணம்

**2024.04.02** ஆம் திகதி டெயிலி நியூஸ், மற்றும் **2024.04.03** ஆம் திகதி வெளியிடப்பட்ட தினமின மற்றும் தினகரன் பத்திரிகை விளம்பரம் தொடர்பானது. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள CIDA தர ஒப்பந்ததில் பின்வரும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | பொறியியலாளர் களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/ NWP/19 | வாகொல்ல சந்தி முதல் சாலியல வீதி வரை (தேத்தாவ பஹலகம வழியாக) | 24.52 | C5 மற்றும் C6 | 350,000.00 | 119 நாட்கள் |

**2024.04.02** ஆம் திகதி முதல் **2024.04.22** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்தில் **www.rda.gov.lk** மேலே குறிப்பிடப்பட்ட விலைமனுக்கோரலின் திருத்தத்தினை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2884790 / மின்னஞ்சல் : **procurement@rda.gov.lk** என்ற இலக்கத்தில் கொள்முதல் பணிப்பாளரை (RDA) தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

SELACINE

---

## விலைமனு அழைத்தல்

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | |
| 01 | பெல்வெஹெர பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு சொந்தமான களஞ்சியத்தை குளிர் களஞ்சியமாக மாற்றுதல் | SPD/2/5/4/08 (2024) | 133,400/- | 266,800/- | 2024.08.20 | ரூ. 5,000.00 |
| 02 | குண்டசாலை பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு சொந்தமான களஞ்சியத்தை குளிர் களஞ்சியமாக மாற்றுதல் | SPD/2/5/4/ 09 (2024) | 133,400/- | 266,800/- | 2024.08.20 | ரூ. 5,000.00 |
| 03 | பொலன்னறுவ மற்றும் கந்தளாய் பண்னைகளுக்கு Tarpaullin (புகைத்தல்) தாள்களை கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/ 03 (2024) | 100,000/- | 200,000/- | 2024.08.20 | ரூ. 3,500.00 |
| 04 | சீத்தாஎலிய பல சுரங்கப்பாதை கட்டிடத்தொகுதிக்காக கூரை பொலித்தீன் மற்றும் பூச்சி தடுப்பு வலைகளைக் கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/ 05 (2024) | 33,500/- | 67,000/- | 2024.08.06 | ரூ. 2,500.00 |
| 05 | சீத்தாஎலிய உடரதெல்ல பண்ணைக்குத் தேவையான டயர் மற்றும் டியூப் கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/ 07 (2024) | 237,900/- | 475,800/- | 2024.08.06 | ரூ. 2,000.00 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப் படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்வாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2024.04.16 முதல் 2024.05.03 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனு சமர்ப்பிக்கும், விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் ‘தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024.05.06 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதெனிய.**
2024.04.11
**081-2388106/122**

# கிழக்கில் நோன்புப் பெருநாள் தொழுகைகள்...

# கிழக்கின் குரல்


## சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில்...



சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை நேற்று (10) புதன்கிழமை இடம்பெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு சாராருக்கும் ஒரே தடவையில், குறிக்கப்பட்ட உரிய நேரத்தில் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடி தொழுகையில் 15,000 பேர் பங்கேற்பு





**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**

புனித நோன்புப் பெருநாளை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடினர்.

மாவட்டத்தின் பிரதான பெருநாள் தொழுகை காத்தான்குடி கடற்கரையோரத்தில் இடம்பெற்றது. சுமார் 15000க்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் இதில் கலந்து கொண்டனர். அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். அன்ஸார் மதனீ பெருநாள் தொழுகையையும் குத்பாவையும் நடாத்தினார்.

பெருநாள் குத்பாவையொட்டி பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர்.

## கல்முனை ஹுதா திடலில்...



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

புனித நோன்புப் பெருநாள் நபி வழித் திடல் தொழுகை கல்முனை ஹுதா திடலில் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் எம்.எப்.எம். ஜவ்ஸாத் (ஸலாமி) நிகழ்த்தினார்.

ஆயிரக்கணக்கான மக்கள் நோன்புப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டதுடன் காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

## அக்கரைப்பற்றில்...



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று இஸ்லாமிய கலாசார வழிகாட்டல் மையம் ஏற்பாடு செய்த புனித நோன்புப் பெருநாள் திடல் தொழுகை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று புதன்கிழமை (10) இடம்பெற்றது.

பெருநாள் தொழுகை மற்றும் பேருரையை அஷ்ஷேக் எம்.ஐ. அன்ஸார் (தப்லீகி) நிகழ்த்தியதோடு, இதில் பெருந்திரளான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

இப்பெருநாள் தினத்தில் முஸ்லிம் உம்மத்தினர் தங்களது குடும்ப உறவுகளுடன் நல்லுறவாகவும், ஏனைய சமூகத்துடன் ஒற்றுமை, சாந்தி சமாதானமாகவும் நடக்க வேண்டும் என்பதுடன், பிறருக்கு உதவுதல், வறுமையில் இருப்பவர்களை கண்டு முடியுமான வரை உதவுதல், தாய் தந்தையினரை அரவணைத்து நடத்தல் என்பது பற்றி தனது பெருநாள் பேருரையில் அஷ்ஷேக் எம்.ஐ.அன்ஸார் (தப்லீகி) வலியுறுத்தினார்.

## பாலமுனையில்...



பாலமுனை ஹைமா பள்ளிவாசல் முன்றலில் இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகையின் போது. (படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

## நிந்தவூரில்...





நிந்தவூர் மஸ்ஜித் மர்யம் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் தொழுகையானது நேற்று (10) பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள திடலில் இடம்பெற்றது. இதில் மௌலவி எம்.ஏ.சி.எம். அப்துர் ரஹ்மான் குத்பா பிரசங்கம் நிகழ்த்துவதையும், கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். படங்கள்: நிந்தவூர் குறூப் நிருபர்

## முள்ளிப்பொத்தானையில்...



**தம்பலகாமம் குறூப் நிருபர்_**

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் நேற்று (10) இஸ்லாமியர்களால் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு நோன்பு பெருநாள் திடல் தொழுகை முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. முள்ளிப்பொத்தானை புஹாரி ஜூம்மா பள்ளி நிர்வாகத்தினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். தொழுகையை உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி ஹூசைன் மற்றும் மௌலவி முர்சித் ஆகியோர் வழிநடத்தினர். இதில் நூற்றுக் கணக்கான பெண்கள், ஆண்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தொழுகையை நிறைவேற்றினார்கள்

# சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்தப் பேச்சில் தொடர்ந்தும் இழுபறி: ரபா தாக்குதலுக்கு திகதி நிர்ணயம்

கெய்ரோவில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தையில், இஸ்ரேல் மேற்கொண்டுள்ள போர் நிறுத்த முன்மொழிவு ஒன்றை ஹமாஸ் நிராகரித்ததாக அந்த அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ள நிலையில் காசாவில் இடம்பெயர்ந்த மக்களின் கடைசி அடைக்கலமாக உள்ள ரபா மீதான படையெடுப்புக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகும் தெரிவித்துள்ளார்.

கெய்ரோவில் இடம்பெறும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் தனது பிரதிநிதிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுப்பியதோடு, அதில் கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்களுடன் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. தலைவர் வில்லியம் பர்ன்ஸும் பங்கேற்றுள்ளார்.

இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவின் அழுத்தம் அதிகரித்திருக்கும் நிலையிலேயே பர்ன்ஸின் பங்கேற்பு இடம்பெற்றிருப்பதோடு காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றுமு; பலஸ்தீன மக்களுக்கு உதவிகள் செல்வதை அனுமதிப்பது போன்ற விவகாரங்கள் இந்த பேச்சுவார்த்தையில் முக்கிய அவதானம் செலுத்தப்படுகிறது.

எனினும் மூத்த ஹமாஸ் அதிகாரியான அலி பரகா, ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு கூறியதாவது, 'எகிப்து தரப்பினர் எமக்கு வழங்கிய இஸ்ரேலின் புதிய முன்மொழிவுகளை நாம் நிராகரித்தோம். அரசியல் குழு கூடி இது பற்றி தீர்மானிக்கும்.'

பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று மற்றொரு ஹமாஸ் அதிகாரி ரோய்ட்டர்ஸுக்கு குறிப்பிட்டுள்ளார் 'ஆக்கிரமிக்காளர்களின் (இஸ்ரேல்) முடிவில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதோடு கெய்ரோ பேச்சுவார்த்தைகளில் புதிதாக எதுவும் இடம்பெறவில்லை' என்று தெரிவித்தார்.



எனினும் குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகள் பற்றிய விபரம் வெளியிடப்படவில்லை.

மறுபுறம், தெற்கு காசாவின் சில பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறிய நிலையில் கெய்ரோ பேச்சுவார்த்தைகளின் விரிவான அறிக்கை ஒன்று தமக்கு கிடைத்திருப்பதாக நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

'அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பது மற்றும் ஹமாஸுக்கு எதிரான முழுமையான வெற்றி ஒன்றை அடையும் எமது முதன்மையான மற்றும் முக்கியமான இலக்கை அடைவதற்கு நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்' என்று நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

'இந்த வெற்றிக்கு ரபாவுக்குள் நுழைய வேண்டி இருப்பதோடு அங்குள்ள பயங்கரவாத படைப் பிரிவுகளை ஒழிக்க வேண்டி உள்ளது. அது நடக்கும், அதற்கு திகதி ஒன்று உள்ளது' என்று குறிப்பிட்ட அவர் அந்தத் திகதி பற்றி விபரத்தை வெளியிடவில்லை. இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்களில் தமது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்ட காசா மக்களுக்கான கடைசி அடைக்கலமாகவே ரபா உள்ளது. இது ஹமாஸ் படைப் பிரிவுகளின் கடைசி அரணாக இருப்பதாக இஸ்ரேல் சந்தேகம் வெளியிட்டு வருகிறது.

நீர், உணவு மற்றும் தற்காலிக தங்குமடங்களின் பற்றாக்குறைக்கு மத்தியில் காசாவின் தென் முனையில் இருக்கும் ரபாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நிரம்பி வழிகின்றனர். ரபா மீதான படையெடுப்பு பாரி அழிவு மற்றும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தும் என்று உலக நாடுகள் எச்சரித்து வருகின்றன.

எகிப்து, பிரான்ஸ் மற்றும் ஜோர்தான் தலைவர்கள் நேற்று வெளியிட்ட கூட்டு அறிக்கையில், (ரபா மீதான) இஸ்ரேலின் தாக்குதல் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் பிராந்தித்தில் பதற்றத்தை தூண்டும் என்றும் எச்சரித்துள்ளனர். ரபா மீதான படையெடுப்பை அமெரிக்கா எதிர்த்து வருகிறது.

இந்நிலையில் ரபாவில் இருந்து பலஸ்தீனர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்ய இஸ்ரேல் 40,000 கூடாரங்களை வாங்கி இருப்பதாக இஸ்ரேலிய அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ஏ.பீ. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ரபா விவகாரம் தொடர்பில் அமெரிக்காவுக்கு புதிதாக எந்த அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை என்று நெதன்யாகுவின் அறிவிப்பு குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார்.

'ரபா மீதான முழு அளவான படையெடுப்பு அங்குள்ள பொதுமக்களுக்கு பெரும் தீங்காக அமையும் என்பதோடு கடைசியில் இஸ்ரேல் பதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று இஸ்ரேலுக்கு நாம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்' என்றார்.

இந்நிலையில் ரபாவில் இருக்கும் நூற்றுக்கணக்கானவர்கள் இஸ்ரேல் பின்வாங்கிய பகுதிகளில் தமது வீடுகளை நோக்கி திரும்ப ஆரம்பித்துள்ளனர். தள்ளு வண்டி, கழுதை வண்டி, திறந்த வாகங்கள் மற்றும் கால் நடையாகவும் இந்த மக்கள் பெரும் அழிவை சந்தித்திருக்கும் தமது வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

'இது அதிர்ச்சி மேல் அதிர்ச்சியை தருகிறது. அழிவுகள் தாங்க முடியாத அளவுக்கு உள்ளன' என்று குடியிருப்பாளரான அபூ தயிப் குறிப்பிட்டுள்ளார். 'நான் எனது வீட்டுக்குப் போகிறேன். அது அழிவடைந்திருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆடைகளை வெளியே எடுக்க இடிபாடுகளை அக்கற்றப்போகிறேன்' அவர் மேலும் தெரிவித்தார்.



இஸ்ரேலியப் படை கடந்த சில மாதங்களாக நிலைகொண்டிருந்த பகுதிகளில் இருந்து 80க்கும் அதிகமான சடலங்களை மீட்டதாக பலஸ்தீன மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு நேற்றுக் காலையில் அங்கு பல இடங்களையும் இலக்கு வைத்து உக்கிர வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

தெற்கு காசா நகரான அல் சைதான் பகுதியில் இரு வீடுகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் மூன்று பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். நகரின் ஏனைய பகுதிகளில் சம காலத்தில் கடுமையான பீரங்கி தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பாடசாலை ஒன்றை சூழ நடத்தப்பட்ட பீரங்கி தாக்குதல்களில் மேலும் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தவிர தெற்கு மற்றும் வடக்கு காசாவிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் உக்கிரம் அடைந்திருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 153 பேர் கொல்லப்பட்டு மேலும் 60 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 33,360 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 75,993 பேர் காயமடைந்துள்ளனர். ஆறு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இந்தப் போரில் குறைந்தது 7,000 பேர் காணாமல்போறிருப்பதோடு இவர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.